பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 06 புதன்கிழமை (18~02~2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:84

# தமிழர்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தும் தேர்தல் இது!

## அப்படி இதனை மாற்றியமைக்கவே அவர்கள் விரும்புகின்றனர் என்கிறார் தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி,பெப்ரவரி18

**"தமது அபிலாஷைகளைக் கொள்கை ரீதியாக வெளிப்படுத்துகின்ற ஒரு தேர்தலாக இந்தப் பொதுத் தேர்தலை மாற்றியமைப்பதற்குத் தமிழர்கள் விரும்புகின்றார்கள். எந்த இலட்சியத்துக்காக - எந்தக் கொள்கைக்காக - ஒன்றுபட்டு ஒரு தலைமைத்துவத்தின் கீழ் தாங்கள் ஐக்கியப்பட்டு நிற்கின்றார்களோ அதை இம்முறை சர்வதேச சமூகத்திற்கு நிலைநிறுத்தி நிரூபிக்கும் ஆயத்தப்பாட்டுடன் அவர்கள் இருக்கின்றார்கள்.**

**- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.**

நேற்று தமிழர் கூட்டமைப்புப் பிரதிநிதிகளை கிளிநொச்சியில் சந்தித்துப் பேசிய பின்னர், செய்தியாளர்களுக்கு அவர் பேட்டியளித்தார். அந்தப் பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய அரசியல் சூழ்நிலை குறித்தும் தேர்தல் முன்னெடுப்புக் குறித்தும் எமது தலைவரினதும், தலைமைப்பீடத்தினதும் கரிசனை சம்பந்தமாகத் தமிழ்க் கூட்டமைப்பினருடன் பேசினோம். தமிழ்மக்களின் எதிர்கால அரசியல் முன்னெடுப்புக்கள் குறித்தும் கலந்துரையாடினோம்.

நான்கு கட்சிகளின் தலைவர்களுடன் பேசியது எமக்கு உற்சாகத்தைத் தந்துள்ளது. எமது தலைவரினதும் தலைமைப்(16ஆம் பக்கம் பார்க்க)

### ஏ-9 போக்குவரத்து: இன்றும் நாளையும் நேரம் நீடிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.18

மகா சிவராத்திரி தினத்தையொட்டி இன்றும் நாளை வியாழக்கிழமையும் ஏ-9 வீதியில் படையினர் மற்றும் புலிகளின் தடைமுகாம்கள் ஊடான மக்கள் போக்குவரத்து ஒரு மணிநேரம் மேலதிகமாக நீடிக்கப்பட்டுள்ளதாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வழமையாக மாலை 5.30மணி வரையும் இடம்பெறும் போக்குவரத்து இன்றும் நாளையும் 6.30மணிவரை இடம்பெறும் என்றும்

நேற்றும் 6.30மணிவரை போக்குவரத்து இடம்பெற்றது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை -

சிவராத்திரி தினத்தையொட்டி அடியார்களின் போக்குவரத்துக்கு மட்டும் ஏ-9 வீதியில் உள்ள முகமாலை சோதனை நிலையம் இன்றும் நாளை வியாழக்கிழமையும் இரவு 9மணி வரை திறந்திருக்கும் என்று பலாலியில் உள்ள பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் நேற்றிரவு அறிவித்துள்ளது. (ஒ-10)



நேற்றுக் கிளிநொச்சியில் நடந்த பேச்சின் போது...

## இடைக்கால நிர்வாக வரைபின் அடிப்படையில் தேர்தல் கொள்கைப் பிரகடனம் அமையும்

### கிளிநொச்சியில் வைத்து இரா.சம்பந்தன் தெரிவிப்பு

கிளிநொச்சி,பெப்.18

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைப் பிரகடனம் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக வரைபுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

-இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

பொதுத் தேர்தல் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் கிளிநொச்சியிலுள்ள அரசியல்துறை நடுவப் பணியகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே சம்பந்தன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வழிவகைகள் குறித்து இன்றைய சந்திப்பில் ஆராய்ந்தோம். இது தொடர்பாகப் பல முடிவுகளை எடுத்திருக்கிறோம். இந்த முடிவுகள் எமது கொள்கைப் பிரகடனத்தில் உள்ளடக்கப்படும். வேட்புமனுத் தாக்கல்செய்வதற்கான கால எல்லை முடிவடைந்தபின்னர் கொள்கைப் பிரகடனம் வெளியிடப்படும்.

"கடந்த தேர்தலில் நாங்கள் திம்புக் கோட்பாடுகளை முன்வைத்துப் போட்டியிட்டோம்.

"தமிழினம் ஒரு தனித் தேசிய இனம்; இந்த இனத்துக்கென்று ஒரு தாயகம் உள்ளது; அதற்கு சுயாட்சி உரிமையுண்டு என்ற அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால அரசு சம்பந்தமான விடயங்களை உள்ளடக்கி எதிர்வரும் தேர்தலுக்கான எமது கொள்கைப் பிரகடனம் அமையும்.

தமிழ் மக்கள் தேர்தலில் ஓர் உறுதியான தீர்வை வழங்கக்கூடிய வகையில் தேர்தல் கொள்கைப் பிரகடனம் அமையும்.

"வேட்பாளர் பட்டியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சார்பாகப் புதிய (16ஆம் பக்கம் பார்க்க)

### யாழில் கூட்டமைப்பு வேட்பாளர்கள்

# அரசியல் கட்சிகளுக்கு –6 பொதுப்பிரமுகர்களுக்கு – 6

### கிளிநொச்சிக் கூட்டத்தில் தீர்மானம்

கிளிநொச்சி,பெப்.18

யாழ்.மாவட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் பன்னிரண்டு வேட்பாளர்களில் 6 இடங்கள் கூட்டமைப்புக் கட்சிகளுக்கு. ஏனைய ஆறு இடங்களும் குடாநாட்டின் பொது நல அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு.

- இவ்வாறு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறியவருகின்றது.

நேற்றுக் கிளிநொச்சியில் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளருடன் கூட்டமைப்பினர் நடத்திய சந்திப்பின் போது இது குறித்து முடிவு செய்யப்பட்டதாக நம்பகமாக அறிய வருகின்றது. இதன்படி யாழ்.மாவட்டத்தில் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடவிருப்போர் விவரம் வருமாறு:-

★ தமிழர் விடுதலைக் கூட்டணி - 2 இடங்கள் (பெரும்பாலும் மாவை சேனாதிராஜா, என்ரவிராஜ் ஆகியோர்)

★ தமிழ்க் காங்கிரஸ் - 2 இடங்கள் (பெரும்பாலும் ஜி.கஜேந்திரகுமார், அ.விநாயகமூர்த்தி ஆகியோர்)

★ ஈ.பி.ஆர்.எல்.எவ்.சுரேஷ் அணி - ஓரிடம் (பெரும்பாலும் சுரேஷ் பிரேமச்சந்திரன்)

★ ரெலோ - ஓரிடம் (பெரும்பாலும சிவாஜிலிங்கம்)

(16ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகரன், மனோகணேசன் தமிழ்ச்செல்வனுடன் இன்று சந்திப்பு

கிளிநொச்சி,பெப்.18

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன், மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் ஆகியோர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இன்று சந்திக்கவுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள அரசியல் துறை நடுவப் பணியகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் தரப்புக்கள் இணைந்து ஓரணியாகப் போட்டியிடுவது தொடர்பாக இந்தச் சந்திப்பின்போது ஆராயப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

### அம்பாறையில் நாளை 'உயிர்ப்படுகொலை' தினம் அனுஷ்டிப்பு

காரைதீவு,பெப்.18

அம்பாறை மாவட்டத்தில் நாளை வியாழக்கிழமை 'தமிழின உயிர்ப் படுகொலை தினம்' அனுஷ்டிக்கப்படவுள்ளது.

மாவட்டத்தின் மூன்று பிரதான கோட்டங்களிலிருந்து அலங்கார ஊர்திகள், மக்கள் எழுச்சிப் பேரணிகள் காலை 9 மணிக்குப் புறப்பட்டு ஆலை (16ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் காங்கிரஸ் போட்டி என ஆணையாளருக்கு முன்பே அறிவிப்பு

### விநாயகமூர்த்தி தெரிவிப்பு

கொழும்பு,பெப்.18

எதிர்வரும் பொதுத்தேர்தலில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் போட்டியிடும் என்று தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. கட்சியின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கடந்த 14 ஆம் திகதிக்கு முன்னரே இதனை தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்திருக்கிறார்.

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தி அறிக்கை ஒன்றில் இவற்றைத் தெரிவித்திருக்கிறார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி, எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது பற்றி, தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கவில்லை என்று ஊடகங்கள் சிலவற்றில் வந்த செய்தி தவறானதாகும் என்றும் எதிர்வரும் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவது கஷ்டமானது என்பதால் கூட்டமைப்பு இம்முறை தேர்தலில் எமது கட்சியின் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்பதனை நாம் வலியுறுத்துகிறோம் எனவும் அவர் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

'ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது 40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு


அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும்' நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.

வட்டி:
*14% ஸ்திரி கணக்கு வைத்திருப்பவர்களுக்கு
*15% ஏனையோருக்கு

அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.

— 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
— 2வது பரிசு 1.6மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
— 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.
— 4வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
— 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
— 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.

இச்சலுகை 2004 ஜனவரி 15 முதல் 2004 ஏப்ரல் 15 வரை மட்டுமே.



NSB

NSB தேசிய சேமிப்பு வங்கி

# சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் கீரிமலை செல்லப் படையினர் அனுமதி

வலி.வடக்கு,பெப்.18

கீரிமலைக்கு கடந்த மூன்று நாள்களாக சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பொது மக்கள் செல்ல இராணுவத்தினர் அனுமதித்துள்ளனர்.

தெல்லிப்பழையில் அமைந்துள்ள சோதனை நிலையத்தில் பொதுமக்கள் தமது அடையாள அட்டைகளைச சமர்ப்பித்துவிட்டு சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் செல்ல இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதுவரை காலமும் இராணுவப் பாதுகாப்புடன் நான்கு சில்லுவாகனங்கள் மட்டுமே உட்செல்ல அனுமதிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-86)

# ஐக்கிய தேசிய முன்னணி 100 பிரசாரக் கூட்டங்கள்

ஐக்கிய தேசிய முன்னணி நாடு முழுவதும் நடத்தத் திட்டமிட்டுள்ள சுமார் நூறு பிரசாரக் கூட்டங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுவார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் முதலாவது பிரசாரக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி கண்டி நகரில் நடைபெறும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இக்கூட்டத்துக்குத் தலைமை வகிப்பார்.

ஐ.தே.முன்னணி ஆட்சி செய்த இரண்டு வருடங்களில் யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டமை, அதனால், ஏற்பட்ட பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றை மக்களுக்கு வளக்கி அந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல அறுதிப் பெரும்பான்மைப் பலம் பெற்றுத் தரும்படி ஐ.தே.முன்னணி இத்தேர்தலில் மக்களைக் கோரும்.

# வெற்றிக்கான தடைகள் பல உள்ளபோதும் சமாதானப் பயணத்தில் மேலும் முன்னேறுவோம்!


## மகா சிவராத்திரி தினத்தையிட்டுப் பிரதமர் செய்தி

கொழும்பு,பெப்.18

எங்களால் வெற்றிகொள்ள வேண்டிய தடைகள் பல உள்ளன. இருப்பினும் எங்கள் அரசினால் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முன்னெடுப்புகள் எங்கள் மக்களிடையே எதிர்காலத்தைப் பற்றிய எதிர்பார்ப்புகளை மீண்டும் ஏற்படுத்தியுள்ளன என்று பிரதமர் ரணில விக்கிரமசிங்க மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு விடுத்திருக்கும் செய்தியில் கூறியிருக்கிறார்.

செய்தியில் பிரதமர் மேலும் கூறியிருப்பதாவது:-

இப்புனித தினத்தை முன்னிட்டு செய்தி ஒன்றினை விடுப்பதையிட்டுப் பெருமிதம் அடைகிறேன். தீமைக்கு எதிரான வெற்றி மற்றும் சிவபெருமானின் வெற்றிவாகையை மகா சிவராத்திரி குறித்து நிற்கிறது. எனவே, இது போன்ற சாந்தியுடன் கூடிய சந்தர்ப்பத்தில் சமாதானத்தைப் பற்றி சிந்திப்பது பொருத்தமானதாகும்.



இதுவரை நாம் பெற்றுக்கொண்ட வெற்றிகளுக்காக எங்கள் நாட்டு மக்கள், குறிப்பாக இந்து சமயத்தைப் பின்பற்றுவோர் அளப்பரிய பங்களிப்பினை வழங்கியுள்ளனர். மக்களிடையே உருவாகிய இவ்விழிப்புணர்வு தேசிய இணைக்கத்திற்கும் ஒற்றுமைக்கும், பரஸ்பர புரிந்துணர்விற்கும் வழிகோலியது.

எங்கள் நாட்டில் வாழும் அனைத்து சமூகங்களுக்கிடையிலும், நட்பு, பரஸ்பர புரிந்துணர்வினைக் கட்டியெழுப்பி சமாதானத்தை நோக்கிய பயணத்தில் மேலும் முன்னேறிச் செல்வதற்கு இப புனித தினத்தில் திடசங்கற்பம் பூணுவோம்.

சகல இந்து மக்களுக்கும் அமைதியான சிவராத்திரி தினமாக அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

- இவ்வாறு செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# முஸ்லிம் காங்கிரஸில் மீண்டும் பிளவு?

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் அக கட்சியின் அம்பாறை மாவட்ட முன்னாள் எம்.பிக்களான எச்.எம்.எம்.ஹரீஸ், எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் ஆகியோர் முரண்பட்டு, அஷ்ரப் காங்கிரஸில் இணைந்துகொள்ளத் தீர்மானித்திருக்கின்றார்கள் என்று அவர்களுடன் நெருங்கிய வட்டாரங்களிலிருந்து செய்தி கசிந்திருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு வெளியே முஸ்லிம்காங்கிரஸ், பல இடங்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கான தீர்மானத்தைத் தலைவர் ஹக்கீம் மேற்கொண்டிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் இந் நிலைப்பாட்டை எடுத்திருக்கின்றனர் என்று அவ்வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றது.

ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் ஆகிய இருவரும் அஷ்ரப் காங்கிரஸில் இணைந்து, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடுவதற்காக முன்னாள் அமைச்சர் ஏ.எம்.எம்.அதாவுல்லாஹ், நுஆ தலைவி பேரியல் அஷ்ரப் ஆகியோருடன் இரகசியப் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

இப் பேச்சுக்கள் வெற்றியளிக்கும் பட்சத்தில் பேரியல் அஷ்ரப், ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ், எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் ஆகிய மூவரும் அம்பாறை மாவட்டத்தில் ஐ.ம.சு. கூட்டமைப்பு வேட்பாளர்களாகப் போட்டியிடுவர். அத்துடன், முன்னாள் எம்.பிக்கள் எம்.எச்.சேகு. இஸ்ஸதீன், எச்.எம்.எம்.ஹரீஸ் ஆகியோர் ஐ.ம.சு.கூட்மைப்பின் தேசிய பட்டியலில் இடம்பெறுவர் எனவும் தெரியவருகிறது.

ஐ.தே.க.முன்னாள் எம்.பி.மயோன் முஸ்தபா, ஐ.தே.க. முன்னாள் உதவிச்செயலாளர் ஏ.எம்.நௌஷாத் ஆகியோருடன் கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்திப்பதற்கு மு.கா. தலைவர் ஹக்கீம் தயாராகி வருகின்றார் என்றும் ஒரு தகவல் கூறுகின்றது. இதுவும் ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் ஆகியோர் மு.காவை விட்டு விலகிச்செல்வதற்கு ஒரு காரணமாக இருக்கலாம் என முஸ்லிம் அரசியல் வட்டாரங்களில் ஊகிக்கப்படுகிறது.

# அதாவுல்லாஹ் அணி மீதான தடை நீடிப்பு; மேன்முறையீடு மனு விசாரணை ஒத்திவைப்பு

அதாவுல்லாஹ் அணியினர் முஸ்லிம் காங்கிரஸில் பதவிகள் வகிப்பதற்கு எதிராகக் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை நீக்குமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பான விசாரணையை மே மாதம 24 ஆம் திகதிக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று ஒத்திவைத்தது.

இம்மனு மீதான விசாரணை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று இடம்பெற்ற போது நீதிபதி நிஹால் காமினி அமரதுங்க இதனை அறிவித்தார்.

முஸ்லிம் காங்கிரஸில் எஸ்சுபைர்தீன், ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ், ஏ.எல்.எம்.ஹபூரத், ஏ.உதுமாலெப்பை, ஏ.ஜே.எம்.முஸம்மில் ஆகியோர் முறையே தலைவர், தவிசாளர், செயலாளர் நாயகம், தேசிய அமைப்பாளர் பதவிகளை வகிப்பதற்கு மாவட்ட நீதிமன்றம் விதித்துள்ள இடைக்காலத் தடையை நீக்குமாறு கோரி அதாவுல்லாஹ் அணியினர் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

அதாவுல்லாஹ் அணியினர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷ, சட்டத்தரணி லியன கமகே ஆகியோரும், பிரதிவாதியான ரவூப் ஹக்கீம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி இக்ராம் முஹம்மத், சட்டத்தரணிகளான நிசாம் காரியப்பர், ஏ.எம்.பாயிஸ், எம்.ஐ.ஹாதி, நவாஸ், ஜனுல்லாஹ், எம்.சி.எம்.முனீர் ஆகியோரும் ஆஜராகினர்.

இந்த வழக்கு மிகமுக்கியமானது என்றும், இந்தக் காலகட்டத்தில் இந்தத் தடையுத்தரவு நீக்கப்படவேண்டுமென்றும் மனுதாரர் தரப்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷ விசாரணையின் போது கோரினார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, இந்தத் தடையுத்தரவு கடந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் தொடர்ந்து நீடிக்கப்பட்டு வருவதை சுட்டிக்காட்டினார்.

இரு தரப்பு வாதங்களையும் [illegible] விசாரித்தறிந்த பின்னரே இடைக்கால தடையுத்தரவு மீதான கட்டளையை தாம் பிறப்பிக்க முடியுமெனக் குறிப்பிட்ட நீதிபதி, இவ்வாறான விடயங்களில் அவசரப்பட முடியாதெனவும், ஆகவே, விசாரணையை மே மாதம் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாகவும் கூறினார்.

# சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்தால் புரிந்துணர்வு உடன்படிக்கை நீக்கம்

## விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு,பெப்.18

'சு.கட்சி - ஜே.வி.பி. இணைந்து உருவாக்கியுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வரும் பட்சத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கை செல்லுபடியற்றதாக்கப்படும்.' ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இரகசியமான முறையில் விடுதலைப் புலிகளுடன் கைச்சாத்திட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது. ஆகவே, நாம் ஆட்சிக்கு வந்தால் இந்த உடன்படிக்கையை முற்றாக விலக்குவோம்.

நடைமுறையில் உள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மாற்றுத்திட்டம் ஒன்றை முன்வைப்போம். இந்தத் திட்டத்தை தற்சமயம் தயாரித்துக் கொண்டிருக்கின்றோம்.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அதிகாரங்களை வழங்குவது என்ற அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் சமரச முயற்சிகளில் ஈடுபடத்தயாராக இருக்கின்றோம். ஆனால், சிறுபான்மைத் தமிழர்கள் கோரும் அதிகாரப் பரவலாக்கலை வழங்க முடியாது - என்று அவர் கூறினார். (ஓ-3-து)

## கச்சாயில் ஆங்கில வகுப்பு இன்று ஆரம்பம்

கொடிகாமம்,பெப்.18

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் இலவச ஆங்கில வகுப்பு இன்று புதன கிழமை பிற்பகல் 5 மணிக்கு கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆரம்பமாகவுள்ளது.

இக்கற்கைக்கு விண்ணப்பித்த அனைவரும் தவறாது சமுகந்தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-9-74)

## கோப்பாயில் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

கோப்பாய்,பெப்.18

கோப்பாய் பிரதேச செயலகத்தின் இம்மாதத்திற்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமும் விவசாயக் குழுக்கூட்டமும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறுமென உதவிப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஓ-72)

# யாழ்.செயலகத்துக்கு நேற்றுமுதல் உச்சக்கட்டப் பாதுகாப்பு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்.செயலகத்தில் நேற்றுமுதல உச்சக்கட்டப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏற்கும்பணி இடம்பெறுவதை யொட்டியே யாழ்.செயலகத்துக்கு விசேட பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

செயலகத்தைச் சூழவுள்ள வீதிகளிலும் வீதித் தடைகளை ஏற்படுத்தி பொலீஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். செயலகத்தின் உள்ளேயும் பொலீஸார் பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டனர்.

தேர்தல் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு வார காலப்பகுதியில் விசேட பாதுகாப்புத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்று தேர்தல் பணிகள் தொடர்பான பொலீஸ் பணியகத்திற்குப் பொறுப்பான பிரதி பொலீஸ்மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்தார். இதன் அடிப்படையிலேயே யாழ்.செயலகத்தின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொலீஸ்மா அதிபரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இந்தத் திட்டம் அமுலாகின்றது.

வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் மாவட்டச் செயலகங்களுக்கு உச்சக்கட்ட பாதுகாப்பு வழங்கப்படுகிறது. தேர்தல் பிரசாரம் ஆரம்பமாகி தேர்தல் பணிகள் முடிவடையும் தினம் வரை இந்தப் பாதுகாப்பு நடவடிக்கை அமுலில் இருக்கும்.

மேலும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், வாக்காளர்களும் பொலீஸிற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று காமினி நவரட்ன கோரிக்கை விடுத்துள்ளார். நியாயமான வகையிலும் நீதியாகவும் தேர்தல் நடத்துவதற்கு இந்த ஒத்துழைப்பு இன்றியமையாதது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-9-7-30)

# சுயேச்சைக்குழுக்கள் கட்டுப்பணம்

மட்டக்களப்பு,பெப்.18

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுத்தேர்தலில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுவதற்குப் ஓர் அணியினர் நேற்றுமாலை 3.30 மணியளவில் கட்டுப்பணத்தினைச் செலுத்தி விண்ணப்பத்தினைப் பெற்றுள்ளனர். காத்தான்குடி பழைய வீதியைச் சேர்ந்த நாகூர் முகமட் ஜமால்தீன் குழுவினரே கட்டுப்பணத்தினை செலுத்தியுள்ளனர் என்று மட்டக்களப்பு தேர்தல் அலுவலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை, திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்திலும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக சுயேச்சைக் குழுவொன்று கடந்த திங்கட்கிழமை கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

சாய்ந்த மருதூரைச் சேர்ந்த மீராய்சாய்ப்பு நவ்சூக் என்பவரின் தலைமையிலான சுயேச்சைக் குழுவே இவ்வாறு கட்டுப்பணம் செலுத்தியுள்ளது. இக்குழுவின் தலைமை வேட்பாளர் கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சிக்கு ஆதரவாக தேர்தல் பாணிகளில் ஈடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருமலையில் போராட்டம்

கன்னியா,பெப்.18

திருகோணமலை, பட்டணமும், சூழலும், பகுதிக்கு உட்பட்ட பிரதேச செயலகப் பிரிவில் கடமையாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் சமுர்த்தி நிவாரணம் பெறும் ஒருவரால் தாக்கப்பட்டார். இதனை ஆட்சேபித்து திருகோணமலை பிரதேசச் செயலாளர் பிரிவில் பணியாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி வங்கிகளில் பணியாற்றுவோர் நேற்று திருகோணமலை பிரதேச செயலகப் பணியகத்தின் முன்பாக போராட்டம் நடத்தினர்.

# அம்பாறை உள்ளூராட்சித் தேர்தல்கள் ஏப்ரல் 28ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,பெப்.18

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச உள்ளூராட்சி மன்றங்களுக்கான் தேர்தல் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கா நேற்று இதனை அறிவித்தார்.

2000ஆம் ஆண்டு வாக்காளர்கள் இடாப்பின் பிரகாரம் இம் மாதம் 21ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சித் தேர்தலை ரத்துச் செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பாக கடந்த வெள்ளியன்று ஆராய்ந்த பிரதம நீதியரசர் சரத் என். சில்வா 2002ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் படி இத்தேர்தலை நடத்த முடியுமா? எனத் தேர்தல் ஆணையாளரைக் கேட்டிருந்தார்.

இவ்விடயமாக உயர் நீதிமன்றில் நேற்று ஆஜரான தேர்தல் ஆணையாளர், இம்மாதம் 21ஆம் திகதி இவ்வாறு தேர்தலை நடத்த முடியாது எனவும் - அதற்குக் கால அவகாசம் தேவை எனவும் குறிப்பிட்டதுடன், எதிர்வரும் ஏப்ரல் 28ஆம் திகதிவரை தேர்தலை ஒத்திவைப்பதாகவும் - அறிவித்தார். அதனை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

# ஐ.ம.சுதந்திர முன்னணிக்கு ஆதரவளிக்க தேசியச் சங்கச் சம்மேளனம் நிபந்தனை

கொழும்பு,பெப்.18

இரண்டு நிபந்தனைகளுக்கு இணங்குவதாயின் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவளிப்பதாக தேசிய மகா சங்க சம்மேளனம் தீர்மானித்திருக்கிறது.

விகாரமகாதேவி இணக்கப்பாட்டை ஏற்றுக்கொள்ளுதல், தாம் கோரும் 10 மாவட்டங்களுக்கு பௌத்த பிக்குகள் 10 பேருக்கு நியமனம் வழங்குதல் ஆகியவையே இரு நிபந்தனைகளுமாகும்.

இரு நிபந்தனைகளும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிபந்தனைகளுக்கு இணக்கம் தெரிவிக்கப்படாவிட்டால், நாட்டினதும் இனத்தினதும் எதிர்காலத்தைக கருதி எதிர்வரும் பொதுத் தேர்தலில் தீர்க்கமாக ஈடுபடவிருப்பதாக சம்மேளனத்தின் நிறைவேற்று உறுப்பினரான வண.ஓமல்பே சோபித கூறினார்.

இந்த இரு நிபந்தனைகளையும் விட, எதிர்காலத்தில் எந்த ஒரு தவறணையையும் திறக்காதிருக்கவும் முறையற்ற மதமாற்றத்தைத் தடுக்க உடனடியாக நாடாளுமன்றத்துக்கு சட்ட மூலம் ஒன்றைக் கொண்டு வரவும் கூட்டமைப்பு இணங்க வேண்டுமெனவும் வண.சோபித மேலும் கூறினார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக தேசிய மகாசங்க சம்மேளனம் இதுவரை தீர்மானம் எதுவும் மேற்கொள்ளவில்லை எனவும் அவர் கூறினார்.

# கிளர்ச்சியாளர்களின் கை ஹெயிட்டியில் ஓங்குகின்றது!

## பதினொரு நகரங்கள் அவர்களிடம் வீழ்ந்தன

லண்டன்,பெப்.18

கரீபியன் தீவான ஹெயிட்டியில் அதிபர் ஜோண் பேட்ரண்ட் அரிஸ்டிட்டுக்கு எதிராகத் தீவிரவாதிகள் மேற்கொண்டுவரும் கிளர்ச்சி பல்வேறு நகரங்களிலும் பரவிவருவதை அடுத்து அங்கு நிலைமை மோசமடைந்திருக்கின்றது.

பத்துத் தினங்களுக்கு முன் நாட்டின் நான்காவது பெரிய நகரமான கொனயிவஸைக் கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த ஆயுதம் தரித்த தீவிரவாதிகள் நேற்று முன்தினம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஹின்ஞ்சி என்ற நகரையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்கின்றனர்.

அங்குள்ள பொலீஸ் நிலையத்தைத் தாக்கிக் கைப்பற்றிய அவர்கள் உள்ளூர் பொலீஸ் தலைவர்கள் ஜொனஸ் மக்ஸிம் உட்பட மூவரைக் கொன்றுள்ளனர்.

'இந்தத் தளத்தைக் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியது உண்மையானால், தலைநகரிலிருந்து வடபகுதி நகரங்களுக்கு இரண்டு தரை வழிப் பாதைகளும் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டன என்று அர்த்தம்"- எனத் தலைநகர் போர்ட் - ஒப் - பிரின்ஸில் உள்ள வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய அரிஸ்டிட் இரண்டாவது தடவையும் ஜனாதிபதியாகப் பதவியேற்றார். ஆனால் மோசடியான தேர்தல் மூலமே அவர் வென்றார் எனத் தெரிவித்து, அவரை பதவி விலகக் கோரி எதிர்க்கட்சிகள் நடத்திவந்த ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளே தற்பொழுது ஆயுதக் கிளர்ச்சியாக உருவெடுத்திருக்கின்றது. அண்மைக்கால கிளர்ச்சியில் ஐம்பதுக்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கின்றனர்.

நாட்டின் வடபுறத்தேயுள்ள 11 நகரங்களைக் கிளர்ச்சியாளர்கள் இப்போது தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.



ஹெயிட்டியில் எதிர்க்கட்சியினர் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளதை அடுத்து அங்கு பொலீஸார் ரோந்து நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். கடந்த ஒரு வாரமாகத் தொடரும் கிளர்ச்சியாளர்களுக்கும் பொலீஸாருக்கும் இடையிலான மோதல்களில் 50 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். கிளர்ச்சியாளர்கள் 11 நகரங்களைத் தம்வசம் வைத்துள்ளனர்.

ஆனால் நாட்டில் ஐயாயிரம் பேரைக் கொண்ட பொலீஸாருடன் ஒப்பிடுகையில் ஆயுதம் தரித்த கிளர்ச்சியாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு என்று சுயாதீனச் செய்திகள் தெரிவித்தன.

எனினும், அரிஸ்டிட்டுக்கு எதிரான - நாட்டுக்கு வெளியே வசிக்கும் - இராணுவக் கிளர்ச்சித் தலைவர்களினதும், பொலீஸாரில் ஒருபகுதியினரதும் ஆதரவு தற்போதைய கிளர்சசிகளுக்கு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

"நாட்டின் நன்மை கருதியே போரிடுகிறோம்; எமது போராட்டம் ஜனாதிபதிக்கு எதிரானது; மக்களுக்கானது" - முன்னாள் பொலீஸ் தலைவரும் கிளர்ச்சியாளர்களுள் ஒருவருமான கே.பிலிப்பி என்பவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஹெயிட்டியில் நிலைமை மோசமடைந்துவருவதையடுத்து அதன் ஒரே அயல் நாடான டொமினிக்கன் குடியரசு ஹெயிட்டியுடனான எல்லையை மூடியுள்ளது.

கிளர்ச்சியாளர்களின் பிடியிலிருந்து ஹின்ஞ்சி நகரை விடுவிப்பதற்காக மேலதிக பொலீஸாரை அங்கு தாம் விரைந்து அனுப்பியிருக்கின்றார் என பொலீஸ் தலைவர் தலைநகர் போர்ட்-ஒப்-பிரின்ஸில் தெரிவித்தார்.

ஆனால், ஹின்ஞ்சி நகரில் தாக்குப்பிடிக்க முடியாத உள்ளூர் பொலீஸார் அங்கிருந்து விலகி தெற்கே 55 கிலோமீற்றர் தொலைவில் ஒன்றுகூடி வருகின்றனர்.

போக்குவரத்துத் தடைப்பட்டிருப்பதால் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ள பிரதேசத்தில் உணவு, எரிபொருள், மருந்துப் பொருள்களுக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மின் விநியோகமும் முற்றாக இல்லை. இதனால், அங்கு மனித பேரவலம் ஏற்படக்கூடிய ஆபத்து நிலையும் உருவாகியிருக்கிறது.

எனினும், அவசர - அவசிய - மருந்துப் பொருள்களுடனும் அறுவைச்சிகிச்சைக்கான கருவிகள் மற்றும் இரத்தம் போன்றவற்றுடன் செஞ்சிலுவையின் வாகன அணி ஒன்று கிளர்ச்சியாளர்களின் பாதுகாப்புடன் கொனவயிஸ் நகரைச் சென்றடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

## பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் வெள்ளி

புதுடில்லி,பெப்.18

பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் வெள்ளிக்கிரகம் வரும் அரிய காட்சி ஒன்று எதிர்வரும் ஜுன் மாதம் இடம்பெற இருக்கின்றது. ஆனால், நிலவைப் போல் பூமிக்கு நெருக்கமாக அது இல்லாததால் கிரகணம் போன்று தோன்றாது. அதற்குப் பதிலாக சூரியனுக்கு மத்தியில் ஒரு கரும்புள்ளி போன்று தோற்றம் அளிக்கும்.

இந்தியாவில் காலை 11 மணி முதல் மாலை 4.30 மணிவரை இந்த அரிய காட்சியைப் பார்வையிடலாம் என்று நேரு கோளரங்கத்தின் இயக்குநர் என்.ரத்னஸ்ரீ தெரிவித்தார்.

உலக அரங்கில்

வாழ்நாளில் ஒரே ஒரு தடவை தான் இந்த அரிய காட்சியைக் காண இயலும். இதே காட்சி 1882இலும் 1974இலும் தோன்றியது. அடுத்து 22ஆம் நூற்றாண்டில்தான் மீண்டும் தோன்றும்.

இம்முறை இந்தக் காட்சி ஆபிரிக்கா, ஐரோப்பா நாடுகளிலும் தோன்றும். இக்காட்சியின் மூலம் சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலான தூரத்தைக் கணக்கிடலாம். மேலும் சில விவரங்களையும் அறிந்துகொள்ளலாம்.

சுக்கிரன் என அழைக்கப்படும் வெள்ளிக் கிரகம் கடந்த ஒரு மாத காலமாகவே மேற்கு வானில் பிரகாசமாகத் தோன்றிவருகின்றது. இது மே மாதம் வரையில் நீடிக்கும் என்றார் ரத்னஸ்ரீ. (ம)

## சொத்துக் குவிப்பு வழக்கு:

# ஜெயலலிதாவின் மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது



தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும், அவரது இணைபிரியா தோழி சசிகலாவுக்கும் எதிரான வருமானத்துக்கு அதிகமான சொத்துக் குவிப்புத் தொடர்பான - வழக்கின் விசாரணையை கர்நாடகத்திலிருந்து வேறு மாநிலத்திற்கு மாற்றக் கோரி புதுடில்லி உச்ச நீதிமன்றத்தில் செல்வி ஜெயலலிதா தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்தது.

வருமானத்தை மீறி ஜெயலலிதா, சசிகலா, தினகரன் ஆகியோர் 67 கோடி ரூபா சொத்துக்குவித்தமை தொடர்பான இரு வழக்குகள் சென்னை தனி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

ஜெயலலிதா தமிழக முதல்வரான பின்னர் இந்த நீதிமன்ற விசாரணைகள் திருப்தியாக நடைபெறவில்லை என்று கூறப்படுகின்றது.

ஜெயலலிதா நீதிமன்றத்தில் ஆஜராகாமல் வீட்டில் இருந்தவாறே நீதிமன்றத்தின் கேள்விகளுக்குப் பதில் அனுப்பினார். விசாரணை செய்ய வேண்டிய அரச சட்டத்தரணியோ ஜெயலலிதா தரப்புச்சட்டத்தரணி போன்று செயற்பட்டார் எனக்கூறப்பட்டது.

இதையடுத்து இந்த வழக்குகளை தமிழகத்தில் இருந்து வேறுமாநிலத்துக்கு மாற்றக்கோரி தி.மு.க. பொதுச் செயலர் அன்பழகன் உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார்.

இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், ஜெயலலிதாவை மிகக்கடுமையாகக் கண்டித்தது, விசாரணை நடந்த முறையையும் வன்மையாக கண்டித்த நீதிபதிகள் வரியவா, சேமா ஆகியோர் அடங்கிய நீதிமன்றம் வழக்குகளை கடந்த நவம்பர் 18 ஆம் திகதி கர்நாடகத்துக்கு மாற்றித் தீர்ப்பளித்தது.

இதனையடுத்து பெங்களூரில் இதற்காகத் தனி நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. தமிழில் உள்ள வழக்கு ஆவணங்கள் கன்னடத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. சிறப்பு நீதிபதி, சிறப்பு அரச சட்டத்தரணி ஆகியோரை நியமிக்கவும் கர்நாடக அரசு தயாரான நிலையில், இந்த வழக்கை அங்கிருந்து வேறு மாநிலத்திற்கு மாற்றக்கோரி ஜெயலலிதாவின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

காவிரி நீர்ப்பங்கீடு மற்றும் வீரப்பன் விவகாரங்களால் தமிழகம் - கர்நாடகம் இடையே நல்லுறவு இல்லாத நிலையில் இந்த வழக்கு அங்கு நியாயமாக விசாரிக்கப்படமாட்டாது என்றும், தனக்கு அங்கு பாதுகாப்பு இருக்காது என்றும் மனுவில் ஜெயலலிதா கூறியிருந்தார்.

இதனால், வழக்குகளை ஆந்திரா, கேரளா அல்லது பாண்டிச்சேரிக்கு மாற்றவேண்டும் என்றும் அவர் கேட்டிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் வரியவா, சேமா ஆகியோரிடமே விசாரணைக்கு வந்தது. ஜெயலலிதாவின் மனுவையும், அது தொடர்பான கர்நாடக அரசு தாக்கல் செய்த எதிர்வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் தீர்ப்பை நேற்று வழங்கினர்.

# பி.பி.ஸியின் சுயாதீனத்தைப் பறிக்க பிரிட்டிஷ் அரசு திட்டமிடுகின்றது!

## லண்டன் பத்திரிகை தகவல்

லண்டன்,பெப்.18

லண்டனில் இருந்து இயங்கும் பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் (பி.பி.ஸி.) கட்டமைப்பை மாற்றி அமைப்பது குறித்து பிரிட்டிஷ் அரசு பரிசீலித்து வருகின்றது.

அரசின் நிதி உதவியுடனேயே பி.பி.ஸி. செய்தி நிறுவனம் இயங்கி வருகின்றது. எனினும், சுயாதீனமாகச் செயற்படும் இந்த நிறுவனம் உலகளவில் நடுநிலையாகச் செய்திகளை வெளியிடுவது என்று பெயர் பெற்றது.

அண்மையில் ஈராக் போர் விடயமாக பி.பி.ஸி. பிரிட்டிஷ் அரசை விமர்சித்து செய்தி வெளியிட்டது. இதையடுத்து அரசுக்கும் பி.பி.ஸிக்கும் இடையில் மோதல் உருவானது.

அணு விஞ்ஞானத்துறையில் நிபுணரான டாக்டர் கெலி என்பவரை மேற்கோளாகக் கொண்டு, ஈராக்கில் பேரழிவு தரும் ஆயுதங்கள் இருந்தன என்று பிரிட்டிஷ் அரசு தெரிவித்த கூற்று மிகைப்படுத்தலானது என்று கடந்த ஆண்டு மே மாதம் பி.பி.ஸி. செய்தி வெளியிட்டது.

இதனை மறுத்த பிரிட்டிஷ் அரசு டாக்டர் கெலியை தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தியது. இதனால் மனஉளைச்சல்களுக்கு உள்ளாகிய அவர் பின்னர் தற்கொலை செய்து கொண்டார். அந்த விசாரணையை மேற்கொண்ட குழு பி.பி.ஸி. மீது குற்றஞ்சாட்டியது.

இதனையடுத்து பி.பி.ஸியின் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகள் சிலர் தமது பதவியை இராஜினாமாச் செய்தார்கள்.

இந்தப் பிரச்சினையை அடுத்து பி.பி.ஸி. நிறுவனம் சுயேச்சையாக இயங்கும் தன்மையை மாற்ற பிரிட்டிஷ் அரசு பரிசீலித்து வருகின்றது. அந்த நிறுவனத்தை இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ், வடக்கு அயர்லாந்து ஆகிய 4 மாநிலங்களுக்கும் தனித்தனி நிறுவனமாகப் பிரித்து விடத் திட்டமிடப்பட்டுள்ளது.

லண்டனில் இருந்து வெளியாகும் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

பி.பி.ஸியின் செய்தியில் இனி அரசின் கட்டுப்பாடுகள் அதிகம் இருக்கும். 82 ஆண்டுகளாகச் செயற்பட்டு வரும் பி.பி.ஸி. நிறுவனம் அரசிடம் ஏற்பட்ட மோதலால் இப்போது இக்கட்டான சூழ்நிலையைச் சந்தித்து வருகிறது.

பி.பி.ஸி. நிறுவனம் வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம் என்பவற்றை நடத்தி வருகின்றது. வானொலி நிகழ்ச்சியில் தமிழோசை உட்பட 40இற்கும் மேற்பட்ட மொழிகளில் அது நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றது. (ம)

# அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்களை திருப்பி அனுப்ப நெதர்லாந்து தயாராகிறது

லண்டன்,பெப்.18

நெதர்லாந்து நாட்டில் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்களை அவர்களது சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்புவதற்கு அந்த நாடு தயாராகி வருகின்றது. இது தொடர்பான பிரரேரணை ஒன்றின் மீது நாடாளுமன்றத்தில் விரைவில் வாக்களிப்பு நடத்தப்படவுள்ளது.



தனது கண்களையும் வாயையும் தைத்துக் கொண்டு போராட்டம் நடத்திய அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட நபர்

இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட சுமார் 26ஆயிரம் பேர் நாடுகடத்தப்படுவார்கள். வருடக்கணக்காக நெதர்லாந்தில் வசித்து வரும் சிலரும் அதில் அடங்குவார்கள்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டுள்ள வலதுசாரி அரசினால் இந்தப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்டளவு நெதர்லாந்துப் பிரஜைகளும் இந்தப் பிரேரணையை ஆதரிக்கின்றனர்.

நாடுகடத்தப்படுவதை எதிர்நோக்கியுள்ள ஒருவர் அதனை எதிர்த்து தனது கண்களையும் வாயையும் தைத்துக் கொண்டு போராட்டம் நடத்தினார்.

2001ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் நாட்டிற்குள் நுழைந்தவர்களில் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்களையே இந்தப் பிரேரணை குறிவைத்துள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள் நாட்டுக்குள் நுழைந்த 2ஆயிரத்து 300 பேருக்கு அவர்களின் நிலை கருதி அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. ஏனைய 26ஆயிரம் பேரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.(ம)

## தென்கொரியாவில் இலவச கோழி இறைச்சி முகாம்

சியோல்,பெப்.18

தென்கொரியாவில் கோழி இறைச்சி உண்பதை ஊக்குவிக்கும் வகையில் இலவச கோழி இறைச்சி முகாம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

சியோல் நகரில் நடைபெற்ற இந்த முகாமில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு 'சிக்கன் பிரை', 'சிக்கன் சாப்ஸ்', 'சில்லி சிக்கன்', 'சிக்கன் 65' என விதவிதமான கோழி இறைச்சியைச் சாப்பிட்டனர்.

கோழி இறைச்சிக் கறியைச் சாப்பிட்டுப் பறவைக் காய்ச்சலால் யாராவது பாதிக்கப்பட்டால் அவர்களுக்கு 17 லட்சம் டொலர் நஷ்டஈடாகத் தருவதாகவும் தென்கொரிய அரசு அறிவித்துள்ளது.

தாய்லாந்து, வியட்நாம், சீனா மற்றும் ஆசிய நாடுகளில் பறவைக் காய்ச்சல் நோய் பெரும் கிலியை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை 21 பேர் இந்த நோய்க்குப் பலியாகியுள்ளனர்.

இந்த நிலையில் தென்கொரியாவின் இந்த நடவடிக்கை அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை மின்சாரசபை உத்தியோகத்தரும், வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்க ஆரம்பகால உறுப்பினரும், கட்டைவேலி ப.நோ.கூ.ச. கிளை 21B முன்னாள் தலைவரும், அல்வாய் மனோகரா ச.ச நிலைய முன்னாள் தலைவரும், செயலாளரும், இலங்கை மின்சாரசபை ஊழியர் நலன்புரிச்சங்க (வட பிராந்தியம்) நிர்வாக சபை உறுப்பினரும் அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் கோயில் பரிபாலன சபை உபதலைவரும் அல்வையூர் கவிஞர் நாடக மன்ற தலைவரும், நாடகக் கலைஞருமான

## திரு.மாணிக்கம் ஆனந்தராசன் அவர்கள்

02.01.2004 அன்று பருத்தித்துறை மாவட்ட நீதிவான் திரு.க.அரியநாயகம் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டதையிட்டு அவரைப் பாராட்டி சகல வளங்களும் பெற்று நீடூழி வாழவேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

*"செல்வகிரி"*
*அல்வாய்.*
(28602)(32-18-19-24)

ஆ.கதிரவேல் (J.P.),
செ.வீரராசா குடும்பத்தினர்,
வே.க.தங்கவேல் குடும்பத்தினர்,
வே.க.வரதவேல் குடும்பத்தினர்.

# பின்னுறுதித் தீர்வை
## யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

ஜனகன் பெண் ஜெயந்தி,
கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி,
*வழ. இல. மனநீக்கம் /422* தற்போது கோவில் வீதி, நல்லூர்.
வழக்காளி

எதிராக
சாம்பசிவம் ஜனகன்
கனடா (பூரண முகவரி தெரியாது)
எதிராளி

இவ்வழக்கு 2004 ஆம் ஆண்டு தைமாதம் 13ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு.இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் சட்டத்தரணி திருமதி லிங்கா துரைராஜா அவர்களும் பிரசன்னமாயிருக்க. இவ்வழக்கின் எதிராளிக்கான அழைப்புக்கட்டளை உதயன் தேசியப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தியதன் மூலம் பதில் சேவகம் செய்யப்பட்டு அதில் குறிப்பிட்டவாறு அழைப்புக்கட்டளை திரும்பல் திகதியாகிய 06.01.2004 ஆம் திகதி எதிராளி மன்றுக்குச் சமுகமில்லாமையால் ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டமைக்கு அமைய இன்று ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்திய பின்னர் வழக்காளியின் பிராது வ1. வ1அ என்ற ஆவணங்களுடன் வழக்காளியின் சாட்சியத்தையும் நன்கு பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறத் தகுதியுடையவர் எனக்கண்டு பின்வருமாறு கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிராளி வழக்காளியை விட்டு 2001ஆம் ஆண்டு ஆவணி மாதம் 27ஆம் திகதி நடைபெற்ற பதிவுத் திருமணத்தை எதிராளி வழக்காளியை வன்ம உறவுப்பு செய்த காரணத்திற்காக இத்தால் புறம்தள்ளிவைத்து கட்டளையிட்டு தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி உதயன் தேசியப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதகாலத்திற்குள் எதிராளி இப்பின்னுறுதித் தீர்வையை ஏன் முற்றான தீர்வையாக்கப்படக்கூடாதென்பதற்கு ஏதாவது காரணம் காட்டப்பட்டிராதவிடத்து விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப்பின்னுறுதித் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் என இத்தால் கட்டளையிடப்படுகிறது.

2004ஆம் ஆண்டு தை மாதம் 13 ஆம் திகதி

ஒப்பம்: இ.த.விக்னராஜா
மாவட்ட நீதிபதி

வரைந்தது
லிங்கா துரைராஜா
வழக்காளியின் சட்டத்தரணி
(28595)(40-18-19-24)

நீதிமன்ற கட்டளைப்படி
து. சிறீமோகன்
பதிவாளர்மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

## ஊனமுற்றோருக்கு அழைப்பு

ஐ.நா.அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் யாழ். குடாநாட்டில் ஊனமுற்றோருக்கான தொழில் முகாமைத்துவம், தொழில்சார் பயிற்சி மற்றும் தொழில் ஆரம்பிப்பதற்கான கடன் வசதிகளை வழங்கவுள்ளது.

குடாநாட்டில் அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் நிரந்திரமாக வசிக்கும் ஊனமுற்றோர்கள் நாளை வியாழக்கிழமையும், எதிர்வரும் 20 ஆம், 21ஆம் திகதிகளிலும் காலை 10மணி தொடக்கம் பிற்பகல் 2மணி வரையும் 'ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி' என்னும் முகவரியுடன் நேரடியாக குடும்ப அட்டையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-ரி)

## வலி.தென் மேற்கில் நெல் அறுவடை

வலி.தென்மேற்குப் பகுதியில் காலபோக நெல் அறுவடை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பருவகாலத்தின் பிற்பகுதியில் போதியளவு மழைபெய்யாத காரணத்தினால் இம்முறை எதிர்பாராத நெல் விளைச்சல் கிடைக்கவில்லை என்று நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

மேட்டு நிலங்களில நெல் விளைச்சல் பெருமளவு பாதிப்படைந்துள்ளதால் நெற்பயிர்களை விவசாயிகளில் பலர் தங்கள் கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுத்தியுள்ளனர். (ஐ-135)

## கர்ப்பிணித் தாய்மாருக்கு சத்துணவு வழங்கல்

உள்ளூராட்சி மன்றங்களினால் ஒதுக்கீடு செய்யப்படும் நன்கொடை மூலம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சத்துணவு வழங்கும் பணியினை யாழ். மாநகரசபை வைத்தியப பிரிவு மேற்கொண்டுள்ளது.

இச்சத்துணவானது கடந்த 13ஆம திகதி வெள்ளிக்கிழமை முதல் 9 கர்ப்பிணித் தாய்மார் பராமரிப்பு நிலையங்களில் வைத்து வழங்கப்படுவதாக யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் தெரிவித்தார். (8-6)

## தவறிவிட்டது

16.02.2004 திங்கட்கிழமை கரணவாய்க்கும், பருத்தித்துறைக்கும் இடையில் பேருந்து ஒன்றில் SAMSUNG கையடக்கத் தொலைபேசி ஒன்று (நீல நிறம்) தவறிவிட்டது. அதில் பல முக்கிய பதிவுகள் காணப்படுவதால் கண்டெடுத்தவர்கள் கொடுத்துதவும் வண்ணம் மிகவும் தயவுடன் கேட்டுக் கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: (28606) (24-18-19)
நாதன்ஸ் தொலைத்தொடர்பு நிலையம்
பிரதான வீதி, பருத்தித்துறை.

# மகளிர்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு

கொழும்பில் இயங்கும் Friends கைவேலைப்பாடு நிறுவனத்தால் ஒரு மாத தவணைக்குள் புதிய வகுப்புகள் ஆரம்பம்.

- ✦ அலுமினிய தகர வேலைப்பாடு
- ✦ பிளாஸ்ரோ பரிஸ்
- ✦ சாறிப் பெயின்ட்
- ✦ கண்ணாடிப் பெயின்ட்
- ✦ பூக்கள், பூ அலங்காரம், வொக்கே
- ✦ சிகை அலங்காரம்

பெயின்ட் வேலைப்பாடு

கட்டணம் 3000/-

✱ பெயின்ட் வழங்கப்படும்.
✱ பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
✱ பெயின்ட் வேலைப்பாடு செய்பவர்களுக்கு சிகை அலங்காரம் இலவசமாகக் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
*No.9. மாட்டின் லேன்* (நியூ பிறைய்ட் அக்கடமி முன்பாக),
*யாழ்ப்பாணம்.*
(28604) (24-18-19)

# துயர் பகிர்கின்றோம்

யாழ்ப்பாண மாவட்ட
தமிழர் புனர்வாழ்வுக்கழக நிர்வாக உத்தியோகத்தர்

## குணரத்தினம் பரமரட்சகபாலன்

அவர்கள் 16.02.2004 திங்கட்கிழமை காலமான செய்தியினைக்கேட்டு மனவேதனையடைந்தோம்.
அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்,
உத்தியோகத்தர்கள்.
*தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,*
*யாழ்ப்பாண மாவட்டம்.* (28594) (32-18-19-24)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராமலிங்கம் இராசமணி

ஏழாலை தெற்கு, சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமலிங்கம் இராசமணி நேற்று (17.02.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் இராமலிங்கத்தின் அன்பு மனைவியும் தியாகராசா, கணேசலிங்கம், கருணாநிதி, ஜெயபாலன், தயாபரன், தர்மபுத்திரி, மல்லிகாதேவி, ராசமலர் (பாமினி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் யோகேஸ்வரன், விஜயராஜன் (கந்தன் களஞ்சியம், திருநெல்வேலி), மீரா, கலாராணி, ஜமுனா, கௌசல்லியா, இரத்தினராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் நிலோஜினி, துஸ்சாந்தினி, ஜாழினி, சிந்தா, மேனகா, ரேனுகா, ராதிகா, ஜெகன், மயூரன், டிலானி, டிலானிகா, ராகுலன், ஆதித்தியா, பிரதீப்ராஜ், கௌதம்ராஜ், விஜயசங்கவி, விஜயவர்மன், லக்சிகா, பிரகலாதன், தர்மிலா, தர்சன், ஜசிந்தன், பபிலன், பிரசாந், பிரசன்னா, பிரசாந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆபிலர்சனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2004) புதன்கிழமை காலை 10.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் கிழக்கு,*
*(அண்ணாபாம் முன் ஒழுங்கை)*
*இணுவில்.*
(28599)(35-18-19-24)

*தகவல்:*
விஜயராஜன் (மருமகன்)
(கந்தன் களஞ்சியம்,
திருநெல்வேலி).

## பொன்னையா சண்முகராசா

(ஓய்வுபெற்ற அலுவலர் தபால்திணைக்களம்,
G.P.O. COLOMBO)

அளவெட்டி, கேணிக்கரையைப் பிறப்பிடமாகவும் துர்க்காபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சண்முகராசா அவர்கள் நேற்று (17.02.2004) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - அன்னம் தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்ற அப்பாக்குட்டி - தையற்பிள்ளை அவர்களின் அன்பு மருமகனும் பொன்மணியின் அன்புக் கணவரும் உமாசுதன் (திருமகள் அழுத்தகம், சுன்னாகம்), பாமதி (தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்), ரேவதி (ஆசிரியை, யா/கட்டுவன்புலம் மகாவித்தியாலயம்), செந்தூரன் (அம்பாள் தொலைத்தொடர்பு நிலையம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஞானேஸ்வரன் (இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்), கணேசலட்சுமி (ஆசிரியை, யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), சுகன்யா ஆகியோரின் அன்பு மாமனாரும் கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, செல்வி கனகம்மா அப்பாக்குட்டி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிருந்தா, கபிலன், உமையாள், உமைபாரதி ஆகியோரின் அன்புப் பேரனும் சிவஞானம், செல்வநாயகம், குணரத்தினம், சிவபாலன், காலஞ்சென்ற மகேந்திரபாலன், அருணகிரிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2004) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கட்டுப்பிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துர்க்காபுரம்,*
*மல்லாகம்.*
(28590)(40-18-19-24)

தகவல்:
மனைவி, ச.உமாசுதன்
மற்றும் பிள்ளைகள்.

## கதிர்காமு சண்முகநாதன் (போசண்ணை)

(முன்னாள் நடத்துநர், இ.போ.ச.)

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு சண்முகநாதன் (போசண்ணை) அவர்கள் 11.02.2004 புதன் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு - செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும் பேரம்பலம் - அம்முப்பிள்ளையின் ஆகியோரின் அன்பு மருமகனும் லீலா வதியின் அன்புக் கணவரும் றொபின் (லண்டன்), லெனின் (ஜேர்மனி), றஜேந்தினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பகிரதன், சுகந்தா, ஜானகி ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிஷாவின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2004) புதன்கிழமை லண்டனில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை வடக்கு,*
*ஏழாலை.* (28598) (24-18-19)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# M.T.S. INTERNATIONAL TRAVELS & TOURS

## விசேட சலுகைக் கட்டண விமான ரிக்கற்றுகள்

டுபாய் விமானச் சீட்டுகள் 11 900/= மட்டுமே
(Including Taxes)

கொழும்பு ⟷ சிங்கப்பூர் 24 700/=
(Excluding Taxes)

கொழும்பு ⟷ பெங்களூர் 21 000/=

- ❑ எமது வாடிக்கையாளர்களுக்கு கடவுச்சீட்டு, விசா பெறுவதற்கான ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- ❑ இந்தியாவின் சகல விமான நிலையங்களுக்கும் விசேட சலுகைக் கட்டணத்தில் தங்குமிட வசதியுடன் துரிதகதியில் விமான ரிக்கற்றுகள் செய்து தரப்படும்.
- ❑ ஐரோப்பிய, ரஷ்ய நாடுகளுக்கான மாணவ அனுமதியும், விசாவும் தங்குமிட வசதிகளும், விமான, புகையிரத ரிக்கற்றுகளும் செய்து தரப்படும்.
- ❑ அத்துடன், உலகின் சகல நாடுகளுக்கும் குறைந்த விலையில் விமான ரிக்கற்றுகளும் கூடவே கூடிய எடையுள்ள பொதிகளை எடுத்துச்செல்வதற்கு மேலதிக வசதிகளும் செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு : M.T.S. INTERNATIONAL TRAVELS & TOURS
108A, SEA STREET, COLOMBO - 11
2393064, 2391952, 2391953, 2393065.

விசேட கட்டணங்களுக்கு 29.02.2004 இற்கு முன்னர் பதிவுசெய்து கொள்ளுங்கள்.
(சி-33282) (32-18-19-24)

# உதயன்

## மக்களின் சிந்தனைக்கு!

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டின் உள்ளார்ந்தக் கூத்துக்கள், குளறுபடிகள் இப்போது வெளியே வெளிப்படத் தொடங்கிவிட்டன.

நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப்பூசல் விவகாரத்துக்குத் தீர்வு காண்பதிலேயே இரண்டு கட்சிகளுக்கும் இடையிலான பாரிய முரண்பாடு தெட்டத் தெளிவாக வெளிப்பட்டிருக்கின்றது.

நாட்டின் மிக முக்கிய விடயத்திலேயே - இவ்வாறு அடிப்படைக் கொள்கை ரீதியான முரண்பாட்டை - நேர் எதிரெதிர் நிலைப்பாட்டை - கொண்டுள்ள இரு பிரதான கட்சிகளின் கூட்டினிடம் நாட்டின் ஆட்சி அதிகாரம் சென்றால் எதிர்காலம் என்னவாகும் என்பதே இன்றைய கேள்வியாகும்.

*"நாங்கள் ஆட்சிக்கு வந்தால் புலிகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஒழித்துவிடுவோம்.*

*"பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் நாட்டின் தேசியப் பாதுகாப்புக்குப் பெரும் ஆபத்தானது. அதனை முற்றாக நிராகரிக்கின்றோம் என்றே எப்போதும் நாங்கள் கூறி வந்திருக்கிறோம்"* - என்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ ஒரு சில நாள்களுக்கு முன்னரும் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

சிறுபான்மைத் தமிழர்கள் கோரும் அதிகாரப் பரவலாக்கத்தைத் தாங்கள் முற்றாக எதிர்ப்பதாகவும் அவர் கூறியிருக்கின்றார்.

ஆனால், சுதந்திரக் கட்சியின் தலைவியும் நாட்டின் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கவோ இதற்கு முரணாக - வேறுவிதமாக - கருத்துக் கூறுகின்றார்.

புலிகளோடு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைதி முயற்சிகளில் ஈடுபட்டிருந்த சமயம் அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் நாட்டுக்குப் பேராபத்து என்று கூச்சல் கிளப்பிவந்த ஜனாதிபதி, அந்தச் சமாதான முயற்சிகளைத் தாம் குழப்பியதால் அதிலிருந்து பிரதமர் ரணில் ஒதுங்கிக்கொண்டதும், தமது சுருதியை மாற்றிக்கொண்டார்!

அமைதி நடவடிக்கைகளிலிருந்து பிரதமர் விலகியதும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதா, இல்லையா என்று தீர்மானிக்கும் பொறுப்பு ஜனாதிபதியின் தலையில் விழுந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தாம் முறித்தால் அதனால், ஏற்படக்கூடிய விபரீதங்களையும், அந்த முடிவை எடுத்ததற்காகத் தாம் சந்திக்கவேண்டிய விளைவுகளையும் உணர்ந்துகொண்ட ஜனாதிபதி, தன் போக்கை வேறு மாதிரி மாற்றிக்கொண்டார். ஒப்பந்தம் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று திரும்பத் திரும்ப அவர் பிரகடனப்படுத்தினார்.

ஆனால், அவருடன் கூட்டமைத்துள்ள ஜே.வி.பியோ இன்றுவரை அதற்கு முற்றிலும் மாறான கருத்தையே முன்வைத்துவருகின்றது.

"புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நாம் ஆட்சிக்கு வந்தால் ஒழிப்போம்" - என்று ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் திட்டவட்டமாக அறிவித்ததால், கூட்டுக்குள் புகைச்சல் கிளம்பியுள்ளது. ஒப்பந்தத்தை முறையாக நடைமுறைப்படுத்துவோம் என்று ஜனாதிபதி விடுக்கும் அறிவிப்புகளுக்கு முரணாக - பகிரங்கமாக - ஜே.வி.பி. எப்படி ஓர் அறிவிப்பை விடுக்க முடியும் என்ற கேள்விகள் எழுந்தன.

"புலிகளுடன் ஒப்பந்தம் செய்த பிரதமரே அந்த அமைதி முயற்சிகளிலிருந்து விலகிவிட்டார். அந்த நிலையில் ஒப்பந்தமே இல்லாமல் போய்விட்டது. பிறகு எவ்வாறு ஒப்பந்தத்தை நாம் புதிதாக ஒழிக்கவோ அல்லது நடைமுறைப்படுத்தவோ முடியும்?" என்று புதுக்குண்டைத் தூக்கிப் போட்டிருக்கின்றார் ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர்.

இரண்டு தரப்பினரும் - சு.கவும், ஜே.வி.பியும் - சேர்ந்து இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உண்டு, இல்லையென்று ஒரு கை பார்த்துவிட்டே ஒதுங்குபவர் போலப்படுகின்றது.

இவ்வாறு அமைதி முயற்சிகளுக்கு வேட்டு வைக்கும் சிங்களப் பேரினவாதப் போக்குடைய ஜே.வி.பியுடன் கூட்டு வைத்துக் கொண்டுதான், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்தக் கூட்டுக்குத் தெளிவான - திட்டவட்டமான - பலமான - பெரும்பான்மையைத் தாருங்கள் என்று ஜனாதிபதி கோருகின்றார்.

இத்தகைய கோலத்தில் சமாதானம் பற்றிப் பேசிக் கொண்டு வந்ததால்தான் 1994இல் தெளிவான பெரும்பான்மையை இதே சந்திரிகா குமாரதுங்கவுக்கு மக்கள் வழங்கினார்கள்.

ஆனால், கடைசியில் என்னவாயிற்று?

சமாதானம் பேசியவர் தீவிர போர் வெறியரானார். சமாதானத்துக்கான போர் என்று புதுக்கதையும் விட்டார் - புதிய 'சித்தாந்தம' ஒன்றையும் தோற்றுவித்து மிகுந்த வேகத்துடன் செயற்படுத்தினார்.

அத்தகையவரிடம் - முன்னைய நிலைக்கு மேலதிகமாக சிங்களப் பேரினவாதிகளையும் கூட்டுச்சேர்த்துக்கொண்டு வந்திருக்கும் ஜனாதிபதியிடம் - திட்டவட்டமான பெரும்பான்மையோடு ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்தால் என்ன நடக்கும்?

மக்கள் சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

# இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா தார்மீக ஆதரவை வழங்கும்

### யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த அந்த நாட்டு முன்னாள் அமைச்சர் தகவல்

யாழ்ப்பாணம்,பெப்.18

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு தாமீக ஆதரவை இந்தியா தொடர்ந்து வழங்கும். ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் இதேகொள்கை பின்பற்றப்படும் என்று இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் காங்கிரஸ் கட்சியின் ராஜ்யசபை உறுப்பினருமான எட்வோடோ பெலாரோ தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த அவர், அரச அதிபர் செ.பத்மநாதனுடன் யாழ்நிலைமை குறித்துக் கலந்துரையாடினார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தியாவில் ராஜீவ் காந்தி, நரசிம்மராவ் ஆகியோர் பிரதமராக இருந்த சமயம் வெளிவிவகார அமைசசராக இவர் பணியாற்றியுள்ளார். தற்சமயம் ராஜ்யசபையில் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக இருக்கும் இவர், இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றுகின்றார்.

இந்திய நாடாளுமன்றத்தில் உள்ள சகல அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களும் இந்தச் சங்கத்தில் இடம்பெற்றுள்ளனர்.

இந்தியாவுக்குச் சமீபமாகவுள்ள நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் உறவை மேம்படுத்துவதற்காக இவர் கொழும்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:-

இந்தியா, பாகிஸ்தானுடன் தனது நட்புறவை வளர்க்கப் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது. இதேபோன்று அயல் நாடான இலங்கையுடனும் நட்புறவுடனும், நல்லுறவுடனும் செயற்படவே இந்தியா விரும்புகின்றது. இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா இப்போது தார்மீக ஆதரவை வழங்கிக் கொண்டிருக்கிறது.

இலங்கைப் பிரச்சினைக்குப் பேச்சுமூலம், ஒரே நாடு என்ற வகையில் தீர்வுகாணப்படவேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும். சகல இன,மத மக்களும் சம உரிமையுடன், சம கௌரவத்துடன், பாதுகாப்பு உறுதிப்பாட்டுடன் வாழவேண்டும். இதை உறுதிசெய்யும் வகையில் தீர்வு காணவேண்டும் என்று இந்தியா வலியுறுத்தி வருகின்றது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் இந்தக் கொள்கையில் மாற்றம் ஏதும் ஏற்படமாட்டாது.

நாடு பிரியாமல் ஒன்றுபட்ட நிலையில் மக்கள் வாழவேண்டும். இதையே இந்தியா விரும்புகின்றது. நாடு பிரிவதை இந்தியா விரும்பவில்லை.

இலங்கைக்கும் - இந்தியாவுக்கும் இடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று செய்யப்படும். இரு நாடுகளின் நலன்கள் குறித்து ஆராயப்பட்ட பின் இந்த ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் தேர்தல் நடைபெற இருப்பதால் ஒத்திவைக்கப்பட்டுள்ள இந்த ஒப்பந்தம் ஆட்சிமாற்றம் ஏற்பட்டால் என்ன, ஏற்படாவிட்டால் என்ன விரைவில் கைச்சாத்தாகும்.

இலங்கை ஜனாதிபதியுடன் இந்தியா நெருங்கிய உறவுகளைப் பேணிவருகிறது. தொடர்ந்தும் அந்த நிலை நீடிக்கும் - என்றார் அவர்.

நவீன தொழில்நுட்ப யுகத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் வர்த்தக, பொருளாதார உறவுகளை வளர்க்கும் நோக்கில் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மேலும் ஒப்பந்தங்கள் செய்யப்பட இருக்கின்றன. இந்த ஒப்பந்தங்கள் மூலம் இரு நாடுகளுக்கும் நல்ல பயன்கள் கிட்டியுள்ளன. இலங்கையில் இருந்து இந்தியாவுக்குப் பொருள் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.



யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் காங்கிரஸ் கட்சியின் ராஜ்ய சபை உறுப்பினருமான எட்வோடோ பெலாரோ யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் வலுப்பெற, பொருளாதாரம் முன்னேறத் தொடர்ந்தும் இரு நாடுகளும் நெருக்கமாகச் செயற்பட இருக்கின்றன - என்றும் அவர் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையில் பொருளாதார உறவு விருத்தி செய்யப்படும் அதேவேளை, கல்வி, உல்லாசப் பயணம் ஆகிய துறைகளிலும் இரு நாடுகளும் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளன.

இலங்கையில் உள்ள கல்வி நிறுவனம் ஒன்று இந்தியாவிலும், இந்தியாவில் உள்ள கல்வி நிறுவனம் ஒன்று இலங்கையிலும் கிளைகளைத் திறக்க வசதி செய்யப்பட்டுள்ளது. - என்றார்.

காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியின் பிரதிநிதியாக, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை சந்திக்கப் போவதாக சுப்பிரமணிய சுவாமி தெரிவித்தார் என்று வந்த தகவல்களை அவர் மறுத்தார். புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்கும் நோக்கம் தமக்கு இல்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

(ம-3)

# இந்திய மீனவர் ஆக்கிரமிப்பு வடமராட்சிக் கடலில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.18

வடமராட்சிக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் வருகை, மீண்டும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு இந்திய மீனவர்களின சுமார் 300 இழுவைப் படகுகள் வடமராட்சிக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தன எனத் தெரிவிக்கப்பட்டது. இழுவைப்படகுகளால் வடமராட்சி மீனவர்களின் வலைகள் பெருமளவில் நாசமாக்கப்பட்டுள்ளதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ம-9-173)

# யாழ். சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 65 இந்தியப் படகோட்டிகள் உண்ணாவிரதம்

### தம்மை விடுவிக்குமாறு கோரி

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்.சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகோட்டிகளான 65பேரும் தம்மை விடுவிக்குமாறு கோரி உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளனர்.

இலங்கைக் கடற்பகுதிக்குள் ஊடுருவிய சமயம் கடற்படையினராலும், இலங்கை மீனவர்களாலும் பிடிக்கப்பட்ட இந்தியர்களில் மீனவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

அந்த மீனவர்கள் வந்த படகுகளின் படகோட்டிகள் யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 16 பேர் மீது யாழ். மேல்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. ஏனையோர் மீது வழக்குத் தொடரச் சட்டமா அதிபர் நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இந்நிலையில், தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி இவர்கள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளனர் எனச் சிறைச்சாலை அதிகாரி தெரிவித்தார்.

(ம-3-7)

# புலி உறுப்பினர் எனக் கூறி மோ.சைக்கிள் கடத்தியவர் கைது!

### புன்னாலைக்கட்டுவனில் சம்பவம்

யாழ்ப்பாணம்,பெப்.18

விடுதலைப் புலிகள் உறுப்பினர் என்று கூறி புன்னாலைக்கட்டுவன் பகுதியில் சிறைச்சாலை அதிகாரியின் மோட்டார் சைக்கிளைக் கடத்தினார் எனக் கூறப்படுபவர்களில் ஒருவர் கைதானார்.

கடந்த ஞாயிறன்று அந்தப்பகுதியில் பலாலி வீதியில் சென்றுகொண்டிருந்த சிறைச்சாலை அதிகாரியை வழிமறித்த இருவர் தாம் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எனத் தெரிவித்து அவரிடமிருந்த மோட்டார் சைக்கிளை அபகரித்துச் சென்றனர்.

இதுபற்றிய தகவல் கிடைத்ததும் சுன்னாகம் பொலீஸார் விரைவாகச் செயற்பட்டு மோட்டார் சைக்கிளை மீட்டதுடன், ஒருவரைக் கைது செய்தனர்.

பிரஸ்தாப நபர் மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆயர் செய்யப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ம-3-8)

### நாளை

மாசி 07
வியாழக்கிழமை
(19.02.2004)
திதி : சதுர்த்தசி
பகல் 4.51 வரை
நட்சத்திரம்:திருவோணம்
பகல் 3.16 வரை
சுபநேரம்: 8.02 - 9.32
ராகுகாலம்: 2.02 - 3.32
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உயர்ந்த மனிதனாகப் பிறப்பது தற்செயலாக நடக்கிறது. உயர்ந்த மனிதனாக இறப்பது அவரவர் நடத்தையில் இருக்கிறது.

# பெரியவிளான் பகுதியில் பழரசத் தொழிற்சாலை

### முந்திரிகை விவசாயிகள் கோரிக்கை

வலி.தென்மேற்கு,பெப்.17

பெரியவிளான் பகுதியில் 32 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணிகளில் விவசாயிகள் பலர் முந்திரிகைச் செய்கையில் ஈடுபட்டு வருவதால் இப்பகுதியில் முந்திரிகைப் பழரசம் தயாரிக்கும் தொழில்நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு உதவவேண்டும்.

பெரியவிளான் விவசாயிகள் சம்மேளனம் யாழ்.மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளரிடம் இவ்வாறு கடிதமூலம் கேட்டுள்ளது.

சம்மேளனச் செயலாளர் செ.சிவராசா சம்மேளனத்தின் சார்பில் கடந்த வாரம் அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பெரியவிளானிலும் அதனை அடுத்துள்ள பகுதிகளிலும் முந்திரிகைச் செய்கைக்கேற்ற மண்வளம் இருப்பதால் பலர் முந்திரிகைச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் முந்திரிகைப் பழங்களைச் சந்தைப்படுத்துவதில் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இப்பகுதியில் முந்திரிகைப் பழரசம் தயாரிக்கும் தொழில் நிலையம் ஒன்றை விரைவில் ஆரம்பிப்பதன் மூலம் முந்திரிகைப் பழ உற்பத்தியை மேலும் அதிகரிக்க முடியும். இதில் ஈடுபட்டுள்ள விவசாயிகளும் நன்மை அடைவார்கள். அத்துடன், சிலருக்கு வேலைவாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். - என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதி வலி. தென் மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.(ஐ-135)

# சின்னஞ்சிறு விளம்பரம்


### மணமகன் தேவை

1973 இல் பிறந்த, A/L சித்தியடைந்த, அழகிய, பாவம் குறைந்த, செவ்வாய்க் குற்றம் அற்ற பெண்ணுக்கு டாக்டர், இஞ்சினியர் மணமகன் தேவை. (சாதக பிரதியுடன் தொடர்பு கொள்க) தொடர்பு: விளம்பர இல. 2169 மே/பா உதயன். (28552)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 35 வயது, அனுஷ நட்சத்திரம், செவ்வாய்க்குற்றமற்ற ஆசிரியைக்கு 42 வயதுக்குட்பட்ட நடுத்தர சிறு அரசாங்கத்தொழில்/கூட்டுறவு உத்தியோகத்தர்/சொந்தமாக வியாபாரம் புரியும் மணமகன் தேவை. ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2168 C/o உதயன். (28557)

### இலகு திருமண சேவை

1969, பரணி, செவ்வாயற்ற, 15 பாவமுள்ள, U.Kயில் வசிக்கும் Computer Engineer மணமகனுக்கு Sponsar இல் செல்லக்கூடிய U.K., Norway, Canada மணமகள் தேவை. தொடர்பு: இலகு திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (28588)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் 18-02-2004 இன்று மாலையும், பிறிமா பேட்டுக் குஞ்சுகள் 19.02.2004 நாளை மாலையும் விநியோகிக்கப்படும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P. 222 3529, 222 2867. (2879)

நல்லின, பல்லின 10நாள் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஜெகன், 118, பலாலி வீதி (தபால் பெட்டியடி), திருநெல்வேலி. T.P.:021-222 6937. (28596)

### விற்பனைக்கு

பாம்ஸ் குறோட்டன் Y.T.T. மஞ்சல் கொடி, யூக்கோபியா, ஒறக்கேரியா, முசந்தாஸ் (வெள்ளை), ஈரப்பலா ஆகிய கன்றுகள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P.:222 6563. (28552)

WP Hfxxx தொடரிலக்கமுடைய Canter (Guts) பெற்றோல் வாகனம் விற்பனைக்குண்டு. தொடர்பு: நல்ல சமாரியன், கோண்டாவில் சந்தி. T.P. 0777 242511, 021 - 222 2488. (28562)

நல்ல நிலையிலுள்ள 50 சிறி தொடரிலக்கமுடைய நிசான் டெலக்ஸ வான் விற்பனைக்குண்டு. தொடர்பு: உதயன், விக்கினேஸ்வரா பாடசாலை வீதி, நெல்லியடி, கரவெட்டி (பாடசாலை அருகில்). (28569)

### தவறிவிட்டது

நடராஜபிள்ளை நிறைஞ்சன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.792513069V) 30.01.2004 அன்று சுன்னாகத்திற்கும் இணுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுததவர்கள் கற்பகப் பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தில் அல்லது J/183 கிராம அலுவலரிடம் ஒப்படைத்துதவவும். (28567)

### வீடு வாடகைக்கு

சுண்டுக்குளி தெற்கு 70/7, சொலமன் ஒழுங்கையில் சகல வசதிகளையும் கொண்ட வீடு உடன் வாடகைக்குண்டு. தொடர்பு 0777 - 471775. (28552)


## பொம்மைவெளி மக்கள்

# முன்னாள் அமைச்சருக்கு எதிராக மனித உரிமைக் குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.18

தங்களுக்கு வீடு கட்டித் தருவதாகக் கூறிவிட்டு தற்போது மறுப்புத் தெரிவிக்கிறார் என்று முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கு எதிராகப் பொம்மைவெளியில் வசித்துவரும் 40 குடும்பங்கள் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் மனித உரிமை ஆணைக் குழுவில் முறைபாடொன்றைச் செய்துள்ளன.

இது தொடர்பாக அப்பகுதியில் பாதிப்படைந்த மக்கள் மகஜர் ஒன்றையும் மனித உரிமை ஆணைக் குழுவிடம் கையளித்துள்ளனர்.

'முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தமது பகுதிகளில் வசித்துவரும் 40 குடும்பங்களுக்குத் தலா ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான வீடுகளைக் கட்டித் தருவதாக உறுதியளித்திருந்தார் என்றும் -

இதனால், தாம் முதற் தொகையாகக் கொடுத்த 20ஆயிரம் ரூபாவில் தமது முன்னைய வீடுகளை அகற்றிப் புதிய அத்திபாரம் கட்டிய நிலையில் தற்போது ஏனைய பணிகளை மேற்கொள்ள எதுவித உதவிகளும் வழங்கப்படவில்லையெனவும் பொம்மைவெளியில் உள்ள மக்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

தற்போது வசிப்பதற்கு வீடுகள் எதுவுமற்ற நிலையில் தாங்கள் அந்தரித்து நிற்பதாகவும் அவர்கள் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (ஜ-8-6-ரி)

# போத்தலால் குத்திய நபருக்கு 2 வருட சிறை!

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ். நகரப் பகுதியில் ஒருவரைப் போத்தலால குத்திக் காயப்படுத்திய நபர் ஒருவருக்கு யாழ். நீதிமன்றம் இரண்டு வருட கடுழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் சின்னத்துரை நித்தியானந்தராசா என்பவர் குத்தப்பட்டுப் படுகாயமடைந்தார்.

இதனையடுத்து இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின்பேரில் பவளராசா சுதர்சன் என்பவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இதுதொடர்பான வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றில் நீதிவான் இ.த.விக்னராசா முன்னிலையில் இடம்பெற்றது. சந்தேகநபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதனையடுத்து அவருக்கு இரண்டு வருட கடுழியச் சிறைத் தண்டனையை விதித்த நீதிவான், 2 ஆயிரம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

அபராதத் தொகையைக் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால் மேலும் ஒரு வருட கடுழியச் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டுமெனவும் நீதிவான் உத்தரவிட்டார். (ஜ-8-5)

# மரத்திலிருந்து வீழ்ந்தவர் மரணம்!

வடமராட்சி, பெப்.18

புலோலி, உபயகதிர்காமத்தில் நேற்றுமுன்தினம் நண்பகல் 12மணியளவில் கள் இறக்குவதற்காக பனைமரத்தில் ஏறியவர் தவறிவீழ்ந்து மரணமானார்.

அதே இடத்தைச் சேர்ந்த வி.ஸ்ரீராமச்சந்திரன் (வயது62) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். (ம-3-173)

## போரினால் பாதிக்கப்பட்ட

# சிறுவர்களின் உளநலனைப் பேண முன்பள்ளி ஆசிரியருக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.18

போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் உளநலனைப் பேணும் வகையில் முன்பள்ளி ஆசிரியர்களுககான பயிற்சிநெறி ஒன்று யாழ். செயலகத்துக்கு அருகில் அமைந்துள்ள சாந்திகத்தில் இடம்பெற்று வருகிறது.

வடக்கு-கிழக்கின் 8 மாவட்டங்களைச் சேர்ந்த 35 முன்பள்ளி ஆசிரியர்கள் இப்பயிற்சி நெறியில் பங்குகொண்டுள்ளனர்.

ஜிரிஇசற் நிறுவனம் மற்றும் வலிகாமம் கல்வித் திணைக்களம் என்பவற்றின் அனுசரணையுடன் 'சாந்திகம்' இப்பயிற்சி நெறியினை நடத்தி வருகிறது.

ஆறு மாதங்களைக் கொண்ட இப்பயிற்சிநெறி எதிர்வரும் மே மாதத்தில் நிறைவடையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்கான சான்றிதழ்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புறநிலைப்படிப்புகள் அலகு வழங்கவுள்ளது. (ஜ-8-ரி)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் புகழ்பூத்த மூத்த ஆசிரியரும் பகுதித் தலைவருமான

**திரு.கிளைமண்ட் கிறிஸ்தோப்பர்**

அவர்கள் யாழ். மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்களின் முன்னிலையில் 23.01.2004 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டமையையிட்டு அவரைப் பாராட்டி அவரது சமூகசேவைப்பணி சிறக்க வாழ்த்தி மனமகிழ்வடைகிறோம்.

*யாழ்ப்பாணம்.*

ஆசிரியர் கழகம்,
யா/புனித சாள்ஸ் ம.வி.

(28586) (24-21-19-12)

# பாராட்டுகின்றோம்

## ஞானம்ஸ் கல்வி நிலையம்

*பிரதான வீதி ~ பண்டத்தரிப்பு*

2003 ஐந்தாந்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எமது நிறுவன மாணவர்களும் பெற்றோரும்



இருப்பவர்கள் (இ-வ)

ம.அருளினி - 125, அ.மதுமிலா - 120,
யோ.அருள்றெமின்டா - 118, வே.நிந்துஜா - 123,
S. சுதன் (ஆசிரியர்), M.டனி (நிர்வாகி),
S.சிவகுமார் (ஆசிரிய ஆலோசகர்), த.மதுகரன் - 128,
யோ.யனுசா - 120, ப.துஷாந்தினி - 144,
ர.நிந்துஜா - 122, சி.யாழினி - 139

இவர்களை நாம் மனமாரப் பாராட்டுவதுடன் கல்வியில் மேலும் வளர்ச்சியுற்றுச் சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

குறிப்பு: **புதிய பிரிவுகள் ஆரம்பமாகியுள்ளன.**

(28587) (32-21-12-19)

## வேலையாட்கள் தேவை

எமது பூங்காவில் வேலை செய்வதற்கு வேலையாள்கள் தேவை.

வேலை விவரமும் சம்பளமும் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

*தொடர்பு:*

**திரு. S.பாக்கியநாதன்**
**கீறின் பாக்**
152/2, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 222 6563

(21) (28553)

## மீண்டும் சாவகச்சேரியில்!

## இடம்மாற்றமும் புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பும்

## லக்ஷறி பல் முக்குக் கண்ணாடி அகம்
## LUXVRY DENTAL & OPTICAL CHAMBER

எனும் ஸ்தாபனம் இன்று (18.02.2004) புதன்கிழமை காலை 11.42 மணிமுதல் 12.00 மணிவரையிலான சுபநேரத்தில் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

- சீனமுறையில் தங்கப்பல் (GOLD TEETH) கட்டிக்கொள்ள -
- சீனமுறையில் முதல்தர சங்குப்பற்களைக் கட்டிக்கொள்ள -
- மிதப்புப் பற்களுக்கு மலிவு விலையில் 'கிளிப்' பொருத்திக்கொள்ள -
- நவீன பிறேம்களில் மூக்குக் கண்ணாடி வகைகள் பெற்றுக்கொள்ள -
- மலிவு விலையில் சண்கிளாஸ் வகைகள் பெற்றுக்கொள்ள -
- இலவச கண்பரிசோதனை -

இவற்றிற்கு நாடுங்கள்!

**லக்ஷறி பல் முக்குக் கண்ணாடி அகம்**
இல.18 . கச்சாய் வீதி. சாவகச்சேரி.
T.P. -0777 222534

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்) (28592)(12-19-21)

## வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனம்

யாழ்.மாவட்டம்

# பதவி வெற்றிடம்

யாழ்.மாவட்டத்தில் 'யுனிசெப்' அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் மேற்கொள்ளும் கண்ணிவெடி அபாயக் கல்வித் திட்டத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் கீழ்க்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வெளிக்கள இணைப்பாளர் - (Field Coordinator)

வெற்றிடம : 01 மாதாந்த வேதனம் ரூபா 7000.00

தகைமைகள : G.C.E.A/L திறமைச்சித்தி
(பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம்)

கணனி அறிவும், ஆங்கிலத்தில் பேச, எழுத, அறிக்கை தயாரிக்க சரளமான அறிவும், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் உள்ளவராகவும் இருத்தல் அவசியம்.

விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை (முழுமையான சுயவிவரம்) 24.02.2004 அன்றோ அல்லது அதற்கு முன்போ கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் கிடைக்கும் வண்ணம் அனுப்பிவைக்கவும். நேரிலும் சமர்ப்பிக்கலாம்.

தலைவர்,
**வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனம்**
இல.63, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல 021-22-5932

(28589) (35-21-19-12)

# மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்



எமது அன்புக்குரியவரான **செல்வி புலவர் சோபனா**
அவர்களின் நடன அரங்கேற்றத்தை 15.02.2004இல் கண்டுகளித்துப் பெருமகிழ்ச்சி அடைந்தோம்.

பரதக் கலையின் பல்வேறு பாவங்களையும் ஒன்றிணைத்து பரதக் கலைக்குப் பெருமை சேர்த்த **செல்வி சோபனா** அவர்களுக்கு "அபிநய நர்த்தகி" விருது கிடைக்கவேண்டும் என தில்லைக்கூத்தனின் திருவடி வேண்டி மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

தந்தையின் எண்ணத்தை செயல்வடிவாக்கிய **ரகு, ரஞ்சித், ரமேஸ்** சகோதரர்கள், தாயின வழிகாட்டலுடன் உடன் பிறப்பின் அரங்கேற்றத்தைச் சிறப்புற நடத்தியமை பாராட்டுக்குரியது. மகளின் அரங்கேற்றத்தை 'வீடியோக் கலையின் வித்தகன' புலவர் அண்ணா வானத்தில் இருந்து வாழ்த்தி, மகிழ்ந்திருப்பார். புலவர் குடும்பத்தின் கலைச்சேவை தொடரவும், புலவர் வீடியோ ஸ்தாபனம் மேன்மேலும் புகழ்பெறவும் உளமார வாழ்த்துகின்றோம்.

**வளர்க பரதக் கலை! ஓங்குக சோபனாவின் புகழ்!!**

**வீடியோ கலாமினி**
அச்சுவேலி - 0777 111018.

(சி-33332) (24-12-19-21)





யாழ்ப்பாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட படையினருக்கு மேலதிக விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வாறு பயிற்சிபெற்ற 96 பேர் கொண்ட அணியினரின் பயிற்சி நிறைவு நிகழ்வு பலாலி விமான தள ஓடு பாதையில் கடந்த வாரம் நடைபெற்றது. அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

*(படம்: பலாலி படைத் தலைமையகம்)*

# சமாதான முயற்சிகளின் எதிர்காலம் பற்றி இலங்கை மக்கள் மத்தியில் அச்ச உணர்வு

## யாழ். வந்த சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர் அவதானிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.18

இலங்கையில் சமாதான முயற்சிகள குறித்து மக்கள் மத்தியில் பல உணர்வு காணப்படுகின்றது. மீண்டும் சமாதான முயற்சிகள் ஆரம்பமாகுமா என்ற அச்சமும் அவர்கள் மனங்களில் இருப்பதை நாம் உணர்ந்தோம்.

- இப்படிக் கூறுகின்றார் சுவிஸ் நாடாளுமன்ற தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பியா கொலன்ரைன் அம்மையார்.

யாழ்ப்பாணத்துக்கு கடந்த வாரம் வருகைதந்த சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் இடம்பெற்ற இவர், உதயனுக்கு அளித்த செவ்வியிலேயே இப்படிக் கூறினார்.

அவர் கூறியதாவது:-

இலங்கையில் தடைப்பட்டிருக்கும் சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் எமது அரசு வழங்கும் நிதி உதவி மூலம் அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளும் திட்டங்கள் தொடர்பாகவும் அறிய இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டோம்.

பொதுமக்கள் தரப்பு, அரச தரப்பு, விடுதலைப் புலிகள் தரப்பு எனப் பல தரப்பினரையும் சந்தித்து இங்குள்ள உண்மையான - யாதார்த்தமான - நிலையை அறிந்தேன். சகல மக்கள் மத்தியிலும் சமாதானத்தின் பால் உள்ள அக்கறையை நாம் புரிந்துகொண்டோம். இந்நிலையில் எமது வருகையை மக்கள் வரவேற்றனர்.

சமாதான முயற்சிகள் தொடருமா? தடைப்பட்ட சமாதான முயற்சி நின்றுவிடுமா? என்ற பய உணர்வுடன் மக்கள் உள்ளனர். இந்தநிலை வடக்கு - கிழக்கில் மட்டும் இல்லாமல் தெற்கிலும் நிலவுகின்றது. இந்த அச்ச நிலையை நீக்க தக்கவகையில் சர்வதேச சமூகம் செயற்படவேண்டியுள்ளது. அந்தவகையில் இங்கு எமக்குக் கிடைத்த செய்திகளை அறிக்கை வடிவில் அரசுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் கொடுப்போம்.

நேரடியாக இங்குள்ள நிலையைப் பாராமல் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையிலேயே எமது அரசும், அரச சார்பற்ற அமைப்புகளும் இதுவரை செயற்பட்டு வருகின்றன. நேரடியாக நாம் பார்த்தவற்றையும் அறிந்தவற்றையும் சமாதானத்தில் மக்கள் கொண்டுள்ள ஆதங்கத்தையும் அவர்களுக்குத் தெரியப்படுத்துவோம்.

சமாதான முயற்சிகள் தொடர எம்மால் இயன்ற சகல செயற்பாடுகளையும் எமது அரசு மூலம் செய்வோம். இதுவே இலங்கை மக்களுக்கு நாம் விடுக்கும் செய்தியாகும் - என்றார்.

சுவிஸில் தங்கியுள்ள ஈழத்தமிழர்களைத் திருப்பி அனுப்புவீர்களா - எனக் கேட்டபோது இலங்கையில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோது, தமது பாதிப்பை முறைப்படி நிரூபிக்காத இலங்கையர்களைத் திருப்பியனுப்பினோம். ஆனால், சமாதான முயற்சிகள் இடை நிறுத்தப்பட்டு, சிக்கலான சூழ்நிலை இங்கு உருவான பின் எமது முடிவை மீளாய்வு செய்துள்ளோம். சமாதான முயற்சிகள் மீள ஆரம்பிக்கும்போது அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டவர்களை இலங்கைக்கு அனுப்புவது குறித்து ஆராய்வோம் - என்றார் அவர்.

இலங்கைக்கு நீண்டகாலமாக உதவிகளை அரச சார்பற்ற அமைப்புக்கள் மூலம் வழங்கி வருகின்றோம். வடக்கு - கிழக்கு மக்களின் மனிதாபிமானப் பணிகளுக்காக கடந்த மாதம் எட்டு மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளோம். இங்குள்ள அரச சார்பற்ற அமைப்புக்கள் மூலம் அந்த உதவி மக்களைச் சென்றடையும் என நம்புகிறோம் - என்றார் அவர்.

தமது நாட்டில் மொழி, இனம் சார்ந்த பிரச்சினைகள் இல்லை என்று பெருமையுடன் அவர் கூறினார். தமது நாட்டுக்கு ஜனநாயக அரசமைப்பு முறை இலங்கைக்கும் பொருந்தும் என்றும் அவர் சொன்னார்.

(ஐ-3-7)

# காவலாளியை அச்சுறுத்திவிட்டு மதுபானக் கடையில் கொள்ளை!

## அதிகாலைவேளை மானிப்பாயில் சம்பவம்

யாழ்ப்பாணம்,பெப்.18

காவலாளியை அடித்து அச்சுறுத்தி அவரை ஓரிடத்தில் இருக்க வைத்துவிட்டு, நால்வர் கொண்ட திருட்டுக் கோஷ்டி ஒன்று மதுபான விற்பனை நிலையத்தை உடைத்துக் கொள்ளையிட்டுள்ளது.

மானிப்பாயில் கடந்த 14ஆம் திகதி அதிகாலை 2 மணிக்கு இடம்பெற்ற இந்தக் கொள்ளையில் சுமார் 3 லட்சம் ரூபா ரொக்கப் பணமும் 2 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு, உள்நாட்டு குடிவகைகள், சிகரெட்டுக்கள் என்பனவும் அபகரிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருட்டு நடைபெற்ற இடத்திற்கு சென்ற பொலீஸார் கைரேகைப் பதிவுகளை எடுத்துக்கொண்டதுடன் தீவிர விசாரணையிலும் ஈடுபட்டுள்ளனர்.

நால்வர் கொண்ட கொள்ளைக் கோஷ்டி, காவலாளியை அடித்துக் கூக்குரலிடக் கூடாது என எச்சரித்து ஓரிடத்தில் அமரவைத்துவிட்டு காவலுக்கும் நிறுத்தியுள்ளது, ஏனைய மூவரும் சுருக்குக் கேற்றை உடைத்து உள்நுழைந்து திருடினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேநாள் இரவு அப்பகுதியில் வேறு இரண்டு வீடுகளிலும் திருட்டு இடம்பெற்றுள்ளன என்று பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது.(ம-15)

# கச்சதீவு திருவிழாவுக்குச் செல்ல சொந்தப் படகுகளுக்கு அனுமதி!

## அரச நிதி ஏதும் கிடைக்கவில்லை

நெடுந்தீவு,பெப்.18

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத் திருவிழாவுக்கு யாத்திரிகர்கள் தமது சொந்தப் படகுகளில் சென்றுவரலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தலத்தின் திருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் திருவிழாவுக்கென வழமையாக ஒதுக்கப்படுகின்ற அரச நிதி எதுவும் இம்முறை இதுவரை ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இதனால், யாத்திரிகர்களுக்கு வழமையாகச் செய்யப்படுகின்ற போக்குவரத்து வசதிகள், குடிதண்ணீர் மற்றும் இதர ஏற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படாது என நெடுந்தீவுப் பங்குத் தந்தை அருட்திரு. எஸ்.ஜெபநேசரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாத்திரிகர்கள் தமக்குத் தேவையான உணவு, குடிதண்ணீர் மற்றும் பொருள்களை அவர்களே கொண்டு வர வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. கண்ணாடி இழைப்படகு ஒன்றில் ஆகக் கூடியது 10 பேர் மட்டுமே பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள் எனவும் கூறப்பட்டது.

இதேவேளை -

இம்முறை இந்த ஆலய உற்சவம் ஒருநாள் மட்டுமே நடக்கவுள்ளமையும் -

இந்த உற்சவத்துக்கு படகுச் சேவை நடத்த விரும்பும் உரிமையாளர்கள் மார்ச் முதலாம், 10ஆம் திகதிகளில் முறையே குறிகாட்டுவானிலும், நெடுந்தீவிலும் படகுகளைப் பதிவுசெய்து கொள்ளவேண்டும் எனவும் -

ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9-ரி)

# கொலையுண்டவருக்குப் பூசை நடத்துவோர் கொலைகாரர்களை மறந்துவிட்டது ஏனோ?

## கேள்வி எழுப்புகிறார் அமைச்சர் அஸ்வர்

கொலையுண்டவருக்கு வருடாவருடம் பூசை நடத்தும் ஜனாதிபதி, அவரைக் கொலைசெய்தவர்களை மறந்துவிட்டாரா?

- இப்படி ஒரு கேள்வியை எழுப்புகிறார் முன்னாள் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.ஏச்.எம்.அஸ்வர்.

யாப்பஹுவாவில் நடைபெற்ற ஐக்கிய தேசிய முன்னணி அமைப்பாளர்கள் கூட்டத்தில் உரையாற்றும் போதே இப்படியான ஒரு கேள்வியை அவர் எழுப்பினார்.

மக்கள் கட்சியின் ஸ்தாபகரும் ஜனாதிபதியின் கணவருமான விஜேகுமாரதுங்கவை 16 வருடங்களுக்கு முன் கொலைசெய்தவர்கள் ஜே.வி.பியினர்தான். அதற்கான சூத்திரதாரி சோமவன்ஸ அமரசிங்கதான் எனக் குற்றஞ்சாட்டினார்கள்.

வருடாவருடம் விஜேகுமாரதுங்கவின் நினைவுதினத்தை அனுஷ்டிப்பவர்கள், அவரைக் கொலை செய்தவர்களைப்பற்றி சிந்திக்கத் தவறிவிட்டனர்.

அப்பொழுது கொலைக் கலாசாரத்தை அறிமுகப்படுத்திய ஜே.வி.பி. யினர்தான் இப்பொழுது ஜனாதிபதியின் நெருங்கிய நண்பர்கள். கொலைச் சூத்திரதாரியான ஜே.வி.பி. தலைவரும் அரச மரியாதையுடன் நடமாடுகிறார். தமது தந்தையின் ஞாபகார்த்த வைபவங்களில் கலந்துகொள்ளும் ஜனாதிபதியின் பிள்ளைகள் கூட இந்தக் கொலைகாரர்களின் கூட்டை விரும்பவில்லை.

மேலும் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரே அங்கு நாற்காலிச் சண்டை ஆரம்பித்துவிட்டது.

தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சராக நியமனம் பெற்றுள்ள டி.எம். ஜயரத்ன, காலஞ்சென்ற எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவுக்குப்பின்தானே பிரதமர் பதவிக்குத் தகுதியானவர் என்று கூறிவருகின்றார்.

கட்சியின் சின்னத்தையும், பெயரையும் இழந்து நிற்கும் இவர்கள், இப்பொழுதே நாற்காலிச் சண்டையை ஆரம்பித்துவிட்டனர். எது எப்படியோ நாம் வெற்றிபெறுவது உறுதியாகிவிட்டது. ஏப்ரல் இரண்டாம் திகதி நள்ளிரவில் ஜே.வி.பி. தலைவர் நாட்டைவிட்டு ஓடிவிடுவார் என்பதும் உறுதி - என ஏ.எச்.எம்.அஸ்வர் அங்கு கூறினார்.

### கடைத் தொகுதி திறப்பு

தென்மராட்சி,பெப்.18

புனர்வாழ்வு, மீள்குடியமர்த்துகை அமைச்சின் நிதி உதவியுடன் 67 லட்சம் ரூபா செலவில் சாவகச்சேரி பிரதேச சபையினால் கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் அமைக்கப்பட்ட கடைத்தொகுதி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.இராசையாவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இரண்டு மாடிகளைக் கொண்ட இந்தக் கட்டடம் தளப் பகுதி II கடைகளையும் மாடிப் பகுதி பொதுநோக்கு மண்டபமாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் குநபாலசந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலக நிர்வாக அலுவலர் ச.வீரசிங்கம், சாவகச்சேரி நகர சபை செயலாளர் மு.செ.சரவணபவ உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(ம-8-117)

### கோஷ்டி மோதலில் நால்வர் காயம்!

ஏறாவூர்,பெப்.18

ஏறாவூர் - காதியார் வீதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற கோஷ்டி மோதல் சம்பவமொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் படுகாயமடைந்து ஏறாவூர் மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பி.லாபிர் (வயது 33), அப்துல் கபூர் (வயது 35), ஹாஜா முகைதீன் (வயது 40), சித்தி ஹலீமா (வயது 32) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்களை ஏறாவூர் பொலீஸார் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவத்திற்கும் பொதுத்தேர்தலுக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை என்றும், தனிப்பட்ட குடும்பத் தகராறு காரணமாகவே கோஷ்டி மோதல் இடம்பெற்றுள்ளதாகவும் ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர்.(ம-8)

### சமூக அபிவிருத்திக்கு 6 கிராம அலுவலர் பிரிவுகள் தெரிவு

தென்மராட்சி,பெப்.18

வடக்கு - கிழக்கு மாகாண சமுதாய மீளளிப்பு அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தினர் (நிகொட்) இவ்வருடம் யாழ். மாவட்டத்திலுள்ள ஆறு கிராம அலுவலர் பிரிவுகளில் சமூக அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் உடுத்துறை (ஜே/430), ஆழியவளை (ஜே/431), நல்லூர் பிரதேசத்தில் அரியாலை மத்தி (ஜே/96), தென்மராட்சி பிரதேசத்தில் தாவளை , இயற்றாலை (ஜே/344), யாழ்ப்பாணம் பிரதேசத்தில் பொம்மைவெளி (ஜே/87, ஜே/88) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-8-117)

## இன்று மகா சிவராத்திரி தினத்தையொட்டி

# இரவு விசேட போக்குவரத்துக்கும் ஊழியர் விடுமுறைக்கும் கோரிக்கை

இந்து மக்களின் புனித இரவான மகா சிவராத்திரி இன்று அனுஷ்டிக்கப்படுவதால் இரவு முழுவதும் விசேட போக்குவரத்து வசதிகளைச் செய்ய அதிகாரிகளுக்கு உத்தர விடுமாறு அகில இலங்கை இந்து மாமன்றப் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் கடிதங்களை அனுப்பி வைத்திருக்கும் அவர், இன்று சகல மதுபான விற்பனை நிலையங்களையும், இறைச்சிக் கடைகளையும் மூட உத்தரவிடும்படியும், வர்த்தக நிலையங்களின் இந்து ஊழியர்களுக்கு விடுமுறை அளிக்கும்படியும் கோரியுள் ளார்.

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 27 - 11 - 1932



ஆறுமுகன் அடியில் 20 - 02 - 2001

### திருமதி குமாரசுவாமி தையல்முத்து

(நெடுந்தீவு மேற்கு, 5ஆம் வட்டாரம்)

திதி:- 18.02.2004

*ஊனாய் உயிராய் உடலாய்*
*நீயாக நின்று*
*அன்புடன் பண்புடன் நலமாய்*
*வாழ வழிகாட்டிய -அம்மாவே!*
*காலங்கள் கழிந்தாலும் மறையாது*
*உங்களது நினைவுகள்.*

*36/12, செட்டித்தெரு,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (28505)(40-16-17-36)

அம்மாவின் நினைவுகளுடன்
அன்புக் கணவர், பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மாணவருக்கு கணனிப் பயிற்சி

இணுவில்,பெப்.18

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மாணவர்களுக்கு கணனிக் கல்வி போதிக்கப்பட்டு வருவதாக வித்தியாலய அதிபர் எஸ்.சண்முககுமார் தெரிவித்தார்.

வெளிநாட்டில் வசிக்கும் பாடசாலையின் பழைய மாணவர்கள் பாடசாலைக்கென ஐந்து கணனிகளை அன்பளிப்புச் செய்துள்ளனர் - என்றும் அவர்கூறினார் (எ-49)

## பிரான்பற்று பகுதியிலுள்ள வீதிகள் பல வருடங்களாக திருத்தப்படவில்லை

### அப்பகுதி மக்கள் பிரதேசசபைச் செயலாளருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், பெப்.18

பண்டத்தரிப்பு, பிரான்பற்று நல்லுண்ணி வீதி, தம்பித்துரை வீதி என்பன கடந்த 30 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் உள்ளது எனத் தெரிவித்து பிரான்பற்று நாவலர் சனசமூக நிலையம் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிரான்பற்று, நல்லுண்ணி, தம்பித்துரை வீதி நீண்ட காலமாகத் திருத்தப் படாமையினால் மழைகாலங்களில் இவ்வீதியூடாகப் பயணஞ் செய்வோர் பெருஞ் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

இவ்வீதிகளை உடனடியாகத் திருத்தி எமது மக்களின் இடையூறற்ற போக்குவரத்துக்கு வழி செய்ய வேண்டும். கடந்த காலங்களில் உள்ளூராட்சி சபை ஏனைய இடங்களில் வீதிகள் அமைத்துக் கொடுத்தபோதும் பிரான்பற்றில் உள்ள 14 முக்கிய வீதிகளில் எதுவும் இதுவரை திருத்தப் படவில்லை - என்றுள்ளது.

இக்கடிதத்தின் பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.(ம-8-155)


**இந்தியப் பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை**

*ஸ்ரீ வீரகாளி அம்மன் அருள்பெற்ற ஸ்ரீ வெட்காளியம்மாவின் அருந்தவப் புதல்வன்*



**மணிசாமி** அவர்கள்

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு வருகை.

கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்தகாரியம் பார்க்கப்படும்.
திருமணத் தடங்கலா? காதல் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வியில் தடங்கலா? கடன் தொல்லையா? தொழில்முன்னேற்றத் தடங்கலா? புதிய தொழில் தொடங்கவேண்டுமா? குழந்தைப் பாக்கியம் இல்லையா? வெளிநாடு செல்லத் தடையா?

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்!

**N.A.லொட்ஜ்,** (ராஜாதியேட்டர் அருகில்)
றூம் நம்பர் 10, புதிய ஆனந்தா நகைமாடம் மேல்மாடி,
நியூலலிதா ஜுவல்லறி, இல.185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
*(பார்வையிடும் நேரம் 9 மணிமுதல் 5 மணிவரை)*

(28147)(24-16-38)



அருணலு

பெறுமதிமிக்க பரிசில்களை
5ஆம் ஆண்டு புலமைப்பரிசு பெறும்
செல்வங்களுக்கு வழங்குகிறது.

உங்களுடைய பிள்ளை புலமைப்பரீட்சையில் சித்தியெய்தி அதிகப்படியான புள்ளிகளை 1ம். 2ம் அல்லது 3ம் இடத்தில் அவருடைய பாடசாலையில் பெற்றிருப்பதுடன் பரீட்சை எழுதும் போது அவரது அருணலு கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- மீதியாக இருந்திருந்தால், உங்களுக்கு எதிர்பாராத ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.

நீங்கள் அருணலு கணக்கு வைத்திருக்கும் கொமர்ஷல் வங்கி கிளைக்கு பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் சென்று பெறுமதிமிக்க பணப்பரிசுகளை தட்டிக்கொள்ளுங்கள். நீங்கள் உங்களுடைய பிள்ளைக்கு அருணலு கணக்கு திறந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடையவில்லையா?

கொமர்ஷல் வங்கியின் அருணலு - ஒளிமயமான எதிர்காலத்தை புலமைப்பரிசு பெறும் செல்வங்களுக்கு வழங்குகிறது.

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

SSCB INTERNATIONAL


## துறையூரில் விளையாட்டு மைதானம் புனரமைப்பு

வேலணை, பெப்.18

வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலைய விளையாட்டு மைதானம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

வெளிநாடுகளில் வசிக்கும் வேலணையைச் சேர்ந்த முன்னாள் விளையாட்டு வீரர்களின் நிதியுதவியுடன் இந்த மைதானம் புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் பட்டது.

மழை வெள்ளம் தேங்கி நிற்பதனால் இந்த மைதானத்தில் தொடர்ச்சியாக விளையாட்டுப் பயிற்சியினை மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது என்றும் - இதனை அடுத்தே தற்போது இந்த மைதானம புனரமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

## சுருவில் வீதி பலத்த சேதம்!

வேலணை , பெப்.18

வேலணை துறையூரில் உள்ள பிரதான வீதி சேதமடைந்த நிலையில காணப்படுகிறது.

வேலணைத் துறையூர்ச் சந்தியில் இருந்து சுருவில் சந்திவரைக்குமான மூன்று கிலோமீற்றர் நீளமான வீதியே சேதமடைந்த நிலையில் காணப் படுகிறது.

இதனால் இந்த வீதியூடாகப் பயணிக்கும் பொதுமக்கள், வாகனச் சாரதிகள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை அனுபவிக்க நேரிடுவதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-ரி)

## விசேட பயிற்சி வகுப்புகள்

நெடுந்தீவுப் பகுதிப் பாடசாலைகளில் இருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை , ஜி.சீ.ஈ. சாதாரண தரம் மற்றும் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களின் நன்மை கருதி நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரியில் விசேட பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவு பங்குத் தந்தை அருட்திரு. எஸ். செபநேசரட்ணம் இந்த வகுப்புகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளார்.

இலவசமாக நடத்தப்படும் இநதப் பயிற்சி வகுப்புக்களில் மாணவர்கள் பங்கு கொண்டு பயன்பெற வேண்டும் என்று பங்குத் தந்தை கேட்டுள்ளார்.

(எ-ரி)

## வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை

தென்மராட்சி,பெப்.18

வடக்கு-கிழக்கு மாகாண சேவையின கீழ் பட்டதாரி பயிலுநர்களை அரச முன்னுரிமை நடவடிக்கைக்காக ஆட்சேர்க்கப்பட்டு வேறு பதவிகளில அமர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தாகளுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை -2003 எதிர்வரும் மார்ச் 24 ஆம் திகதி நடைபெறுமென மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் வே.பொ.பாலசிங்கம் சகல திணைக்கள தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் விரைவில் அனுப்பி வைக்கப்படுமெனவும் அவர் அறிவித்துள்ளார்.

(எ-117)

# சிவராத்திரி அன்று விரதம் அனுஷ்டித்தால் பிறவிப் பயனை அடைந்துகொள்ளலாம்

சைவசமய வழிபாடுகளில் சிவராத்திரி வழிபாடு மிகவும் சிறப்பானது. பன்னெடுங்காலமாக நம்நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறந்த வழிபாடுகளில் சிவராத்திரி விழாவும் ஒன்றாகும். சிவத்துடன் சம்பந்தப்படுத்தும் இராத்திரி சிவராத்திரி என்று சொல்லப்படுகிறது. சிவனுக்குரிய எண்ணாயிரங்கோடி நாமங்களில் தலை சிறந்தது 'சிவன்' என்னும் நாமமாகும். சிவன் என்னும் சொல்லுக்குப் பொருள் பேரின்பத்துக்குக் காரணன் என்றும், தூயதன்மையன் என்றும் பொருள் கூறுவர் பெரியோர்.

### சிவராத்திரி வரலாறு

இத்தகைய சிவபிரான் தம்மை அடைந்தவர்களது துன்பத்தைத் துடைத்துப் பேரின்பத்தை அளிக்கும இராத்திரியாகவே சிவராத்திரி விளங்குகின்றது. எமது அக இருளைப் போக்கிக்கொள்ள நமக்கு உதவக்கூடியது சிவ ஒளியே ஆகும்.

கலாநிதி செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

நமது அக இருளைப் போக்கிக் கொள்வதற்கு சிவராத்திரி தினத்தில் சிவனை வழிபாடுசெய்வது மிகவும் இன்றியமையாததாகும்.

கற்பகாலம் என்பது உலகம் எல்லாம் ஒடுங்கிக்கிடக்கின்ற காலமாகும். முன்னொரு கற்பவிறுதியிலே பிரமதேவர் முதலிய பிரபஞ்சம் அனைத்தும் சிவத்தில் ஒடுங்க அவ்விரவிலே உமாதேவியார் சிவபெருமானை வேதாகம விதிப்படி நான்கு சாமமும் அருச்சித்து அவ்விரவு புலர்ந்த பின் அப்பெருமானை வணங்கி தான் வழிபட்ட அவ்விரவு 'சிவநிசி' என வழங்கவும், அவ்விரவிலே நான்கு சாமமும் பூசை செய்தவர் முத்தி எய்தவும் அருளவேண்டும் என வேண்டி வரம்பெற்றார். இதுவே சிவராத்திரி வரலாறாகும்.

இன்னொரு கற்பவிறுதியிலே பிரளய வெள்ளத்தில் தாழ்ந்த உலகைத் திருமாலானவர் பன்றியுருக் கொண்டு தூக்கி நிறுவிப் பின்பு பிரமனைப் படைக்கும்படி தூண்டப் படைத்தல் நடைபெற்றது. திருமால் பாற்கடலில் அறிதுயில் கொண்டார். இத்தருணத்தில் பிரமன் .திருமாலை எழுப்பி 'யார் பெரியர்' என்று கலகம் விளைவித்தனர். இருவருக்கும் இறுதி எய்தாதவாறு சிவபெருமான் அனற்பிழம்பு வடிவமாகச் சிவலிங்கத் திருமேனியில் தோன்றினார். அப்படித் தோன்றிய காலமே இலிங்கோற்பவ காலமாகும்.

பிரமதேவர் தக்கனுக்கு இவ்வரத்தை எடுத்துக்கூறுகிறார்.

*"அரியும் யானுமுன்தேடுமவ்*
*வனற்கிரி அனல்*
*கிரியெனும்படி நின்றதால்*
*அவ்வொளிகிளர்ந்த*
*இரவதே சிவராத்திரி யாயின*
*திறைவற்*
*பரவி யுய்ந்தனர் அன்னதோர்*
*வைகலிற் பலரும்"*

மாசி மாத அபரபக்கச் சதுர்த்தசியோடு கூடிய நடு இரவே 'சிவநிசி' எனப்பட்டது. மாசிமாதத்து அபரபக்கச் சதுர்த்தசியும், திருவோணமும் கூடிய நாள் மகாசிவராத்திரிக்கு மிகச் சிறப்பான நாளாகும். பிரமவிட்டுணுக்கள் முடியையும் அடியையும் தேடிக் காணமுடியாத நிலையிலே மீண்டும் பெருமானை வழிபட்டு மாசிமாத மகா சிவராத்திரித் தினத்தில் நான்கு சாமமும் பூசித்துச் சிறப்புப் பெற்றனர் என்பர்.

### விரத அனுஷ்டிப்பு

சிவராத்திரி நான்கு சாமமும் பூசை நடைபெற வேண்டும். இப்படி நடத்தும் போது மூலமூர்த்திக்குப் பூசை நடைபெறுவதோடு விநாயகருக்கும் நடைபெற வேண்டும். இறுதியிலே சண்டேசுரருக்கும் பூசை நடைபெற வேண்டும். இவ்விரதத்தை அனுட்டிப்பவர்கள் ஆசாரசீலராய் முதல்நாள பகல் ஒருபொழுதுண்டு அடுத்தநாள் சிவராத்திரி விரதத்தை அனுட்டித்தல் வேண்டும். சிவராத்திரி தினத்தில் வைகறையில் துயிலுணர்ந்து ஸ்நானம் செய்து சிவாலய வழிபாடு செய்து சிவத்தொண்டுகள் ஆற்ற வேண்டும். உபவாசம் இருக்க இயலாதவர் பால் பருகியும், அதுவும் முடியாதவர்கள் உணவைக் குறைத்தும் அந்நாளை நன்னாளாக்கலாம்.

சிவாலயங்களில் கர்ப்பக்கிரகத்தின் பின்புறச் சுவரின் மாடத்திலே மேற்கு நோக்கிய வண்ணம் அமைக்கப்பட்டிருக்கும். விரதமனுட்டிப்போர் மறுநாள்



ஆனால், இரவு நான்கு சாமமும் நடைபெறும் பூசைகளைக் கண்டு வணங்கியும் இது இயலாதவர் இலிங்கோற்பவ காலம் கழியும் வரையில் நித்திரை ஒழித்தும் இருத்தல் வேண்டும். 'இலிங்கோற்பவ மூர்த்தம்' என்பது சிவபெருமானின் அறுபத்து நான்கு மூர்த்தி பேதங்களில் ஒன்றாகும். அத்திருவுருவில் அடிப்பாகமும் முடிப்பாகமும் கண்ணில் புலப்படா. இதில் மான், மழு இருக்கும். இம்மூர்த்தி

காலை நீராடிச் சிவாலய தரிசனம் செய்து காலையில் பாரணம் பண்ணுதல் வேண்டும். அந்தணர், சிவனடியார், ஏழைகள் ஆகியோருக்கு இயன்ற வகையில் தானமளிக்க வேண்டும்.

### விரத பலன்

இவ்விரதம் எல்லாவிரதங்களிலும் மேன்மையானது என்பர். சிவராத்திரி விரதத்தை அனுட்டிப்பவர்கள் தம் மரண காலத்திலே இமய வாதனையின்றி இறப்பார்கள். தேவர்கள் அவர்களைத் தேவலோகத்திலே உபசரிப்பார்கள். கொடிய பாதகங்களைச் செய்தவர்களும் சிவராத்திரி விரத பலத்தினால் புண்ணிய லோகங்களை அடைந்துள்ளார்கள் என்று புராணங்கள் கூறுகின்றன. இத்தினத்தை அறியாமலேயே விழித்திருந்து வில்வமிலைகளைச் சிவலிங்கத்தின் மேலிட்டு அந்நாளைக் கழித்த அங்குலன் என்ற வேடன் சிவகணங்களுள் ஒருவனானான் என்று புராணங்கள் கூறும்.

### நான்கு சாமப் பூசைகள்

சிவபூசை செய்வோர் முதற்சாமத்தில் பஞ்ச கவ்வியத்தினால் அபிடேகம் செய்து சந்தனக்குழம்பு சாத்தி வில்வம், தாமரை முதலியவற்றால் அர்ச்சித்தும் பயத்தம் பருப்புச் சேர்த்த அன்னம் நிவேதித்தும் வழிபடலாம். இரண்டாம் சாமத்துப் பூசையின்போது பஞ்சாமிர்தத்தினால் அபிடேகம் செய்து அகிற்குழம்பு சாத்தித் தாமரை, துளசி முதலியவற்றால் அர்ச்சித்துப் பாயாசம் படைத்துப் பூசித்து வழிபடலாம். மூன்றாம் சாமத்தின்போது தேனினால் அபிடேகஞ் செய்து பச்சைக் கர்ப்பூரச் சுண்ணஞ்சாத்தி வில்வம் சண்பகமலர் கொண்டு அர்ச்சனை செய்து எள்ளன்னம் நிவேதித்து வழிபடலாம்.

நான்காம் சாமத்துப் பூசையின் போது கருப்பஞ் சாற்றினால் அபிஷேகம் செய்து குங்குமம் சாத்தி வில்வம், நந்தியாவர்த்தனம் கொண்டு அர்ச்சித்து சுத்த அன்னம் படைத்துப் பூசிக்கலாம். நான்கு சாமப்பூசைகளுக்கும் வில்வப் பத்திரம் முக்கியமானதாகும். சிவராத்திரி விரதம் ஒன்றிலேயே இம்மை, மறுமை, வீட்டின்பம் அனைத்தும் சித்திக்கும் என்பர்.

*மணிநவ நிதியும் பூக்கும்*
*மாசிலாத் தெருளுண்டாக்கும்*
*அணிசிவ கருமந் தேக்கும்*
*அட்ட ஐசுவரியங் காக்கும்*
*பணிபுனை சுந்தரேசர்*
*பயிலுநோன் பெவைக்கும்*
*மேலாம்*
*திணிதிருத் தவத்தின் முன்னாஞ்*
*சிவநிசி யென்னும் மாதோ.*

- உபதேச காண்டம் -

# சிவராத்திரி விரதப் பயன்கள் கூறும் வரலாற்றுக்கதைகள்.........

வட இந்தியாவில் அவந்தி என்னும் நகரில் தீஷிதர் ஒருவர் இருந்தார். இவர் நற்பண்புடையவர். வேத சாஸ்திரம் முதலிய நூல்கள் கற்று நல்ல பாண்டித்தியம் அடைந்திருந்தார். தீஷிதரின் பாண்டியத்தின் திறமையைக் கண்ட அவ்வூர் அரசன் தீஷிதருக்கு விலையுயர்ந்த மோதிரமொன்றைப் பரிசாகக் கொடுத்தான். தீஷிதர் அதனை மனைவியிடம் கொடுத்து தனது மகனுக்குத் தெரியாதவாறு கவனமாக வைக்கும்படி கூறினார். மனைவியும் அவ்வாறே செய்தாள். எவ்வாறோ தீஷிதரின் மகன் வேதநிதி இதனையறிந்து மோதிரத்தை எடுத்துக்கொண்டுபோய் தனது ஆசைநாயகியிடம் கொடுத்து விட்டான்.

மறுநாள் அவள் நடனமாட அரண்மனைக்குச் சென்றாள். அவள் நடனமாடி கொண்டிருக்கையில் அரசனின் இரத்தினக்கல் மோதிரம் நடனக்காரியின் கைவிரலில் மின்னிப் பிரகாசித்தது. உடனே அரசன் நடனகாரியை அழைத்து அந்த மோதிரம் எப்படிக்கிடைத்ததெனப் பயமுறுத்தி அறிந்து கொண்டான். பின்னர் மோதிரத்தை அவளிடமிருந்து பறித்தான்.

மறுநாள் தீஷிதர் அரண்மனைக்கு வந்தபோது தன்னுடைய மோதிரம் பற்றிக்கேட்டான். நடனக்காரியிடமிருந்து மோதிரம் பெற்ற வரலாற்றையும் மன்னன் கூறினான். தீஷிதர் மகன் வேதநிதியின் தீய ஒழுக்கத்தைக் கண்டு விரட்டி விட்டார். வேதநிதி தனது ஆசைநாயகியிடம் சென்றபோதும் அவளும் நீ பொருள் இல்லாதவன் என்று விரட்டிவிட்டாள். அவனும் ஆதரவும், ஆகாரமும் இல்லாமல் பல நாள் அலைந்தான். பலநாள் வேதநிதிக்கு உணவு கிடையாமல் காட்டில் அலைந்து நகரப்பக்கம் சென்றான். அங்கு ஓர் ஆலயத்தில் மகா சிவராத்திரியை முன்னிட்டு ஆகம விதிப்படி அபிடேகம் முதலாகப் பல பூசைகள், அர்த்த யாமப் பூசைகள் வரையும் நடந்தன. சிவலிங்கப்பெருமானுக்கு விதம் விதமான நைவேத்தியங்கள் படைக்கப்பட்டிருந்ததை வேதநிதி கண்டான். அவன் பசிக் கொடுமையால் அவற்றைத் திருடி உண்ண முயன்றான். விழாவிற்கு வந்தோரெல்லாம் விலகட்டும் என்று எதிர்பார்த்திருந்தான். விழாவிற்கு வந்தவர்களில் பலர் உறங்கிவிட்டனர். வேதநிதி உணவுப் பண்டங்களை திருட எத்தனித்தான். எரிந்த நெய்விளக்குகளின் ஒளி மங்கலாய் இருந்தமையால் உணவுப் பண்டம் இருக்கும் இடம் தெரியவில்லை.

அதனால் வேதநிதி தன்னுடைய சால்வையில் ஒரு சிறிய துணியைத் திரித்து நெய்விட்டு ஒளியைக் கூட்டிவிட்டு உணவுப்பண்டங்களைத் திருடி சால்வையில் கட்டிக்கொண்டு புறப்படுகையில், அவனுடைய கால் படுத்தவனின் காலில் இடறியது. திருடன் திருடன் என்று கூவிக்கொள்ள, வேதநிதி ஓடத் தொடங்கினான். எனினும், அவன் திருடிய உணவுகளை உண்ணவிடாது விழாவிற்கு வந்தோர் அவனைக் கொன்றுவிட்டனர்.

சிவராத்திரியன்று உண்ணாது சிவ பூசைகளைப் பார்தமையாலும், ஒளியைப் பிரகாசிக்க செய்தமையாலும் வேதநிதி முத்தியடைந்தான் என்று சிவ மகா புராணம் கூறுகின்றது.

### வேடன் கதை

ஒரு பெரிய இருளடைந்த காட்டில் ஒரு வேடுவக் குடும்பம் வசித்து வந்தது. அக்குடும்பத்தின் இளைஞனான வேடன் மக்களைக் கொன்று வழிப்பறி செய்து தனது குடும்பத்தை வளர்த்து வந்தான். அவன் மிகவும் கொடியவன்; பயங்கரமானவன்.

ஒரு முறை சிவராத்திரி வந்தது. அன்று குடும்ப அங்கத்தவருக்கும், வேடனுக்கும் உணவேதும் கிடைக்கவில்லை. இதனால், வேடன் அம்பு வில்லுடன் அந்தக் காடு முழுவதும் பொழுது மறையும் வரை திரிந்தான். பொழுது மறைந்து விட்டது. மிருக உணவில்லாது எப்படி குடிசைக்குப் போவதென நினைத்து ஒரு குளக் கரையில் இருந்த வில்வமரத்தில் ஒரு சிறிய குடுவையில் தண்ணீரும் கொண்டு அம்பு, வில்லுடன் ஏறினான். மரத்திலிருந்து கொண்டு தண்ணீர் குடிக்க ஏதாவது மிருகம் வருகிறதா எனப் பார்த்தான்.

அப்போது ஒரு பெண்மான் அங்கு வந்து தண்ணீர் குடிக்க எத்தனித்தது. மானைக் கண்ட வேடன், அதற்கு அம்பெய்ய எத்தனித்த போது, குடுவையில் இருந்த நீரில் ஒரு துளி வில்வமரத்தின் கீழிருந்த சிவலிங்கத்தில் படத்தொடர்ந்து நாலைந்து வில்வமிலைகளும் வீழ்ந்தன. மான் இந்தச் சலசலப்பைக் கேட்டு மேலே அண்ணாந்து பார்த்தது. வேடமன் வில்லு, அம்புடன் காணப்பட்டான். அப்போது மான் வேடனைப் பார்த்து 'வேடனே நான் உனக்கு உணவாவதில் மகிழ்ச்சியடைகிறேன். எனக்கு மூன்று குட்டிகளுண்டு. அவைகளை எனது இளையாளுடன் சேர்த்து எனது கணவனையும் அவளுக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டு வருகிறேன் என்று கூறிச்சென்றது.

மூத்தாளைக் காணாத இளைய மான் மூத்தாளைத் தேடிக் குளக் கரைக்கு வந்து நீர் குடிக்க ஆரம்பித்தது. அப்போது வேடன் இந்த மானை விடக்கூடாதென அம்பெய்ய ஆயத்தமானபோது குடுவையிலிருந்து சிறிதளவு நீர் சிவலிங்கத்தின் மீது விழுந்தது. தொடர்ந்து சில வில்வம் இலைகளும் விழுந்தன. இதனால், வேடன் சிவராத்திரியின் இரண்டாம் சாமப்பூசை செய்தவனானான்.

இப்போது சிறிதளவு ஞானம் வந்தபோதிலும், குடும்பத்தாரின் உணவிற்காக இளைய மானைக் கொல்ல எத்தனித்தபோது இளையமானும் மூத்த மான்போலக் கூறிச்சென்றது. இவ்விருமான்களும் தம்கடமைகளை முடிந்து வேடனுக்கு உணவாக வருவோம் என்று சத்தியம் செய்து சென்றன.

இவ்விரு பெண்மான்களையும் காணாத ஆண்மான் தேடிக்கொண்டு நீர்நிலைக்கு வந்தது. அப்போதும் வேடன் வில்லில் அம்பைப் பூட்டித் தொனியெழுப்பும் போது குடுவையிலிருந்து சிறிதளவு நீர் சிவலிங்கத்தின் மீது விழ வில்வமிலைகளும் சிவலிங்கத்தின் மீது விழுந்தமையால் சிவராத்திரி காலத்தில் மூன்றாவது சாமப்பூசை செய்த பலனை வேடன் பெற்றான். ஆண்மானும் தனது துணைவிமாரிடம் விடைபெற்று வருவதாகச் சத்தியம் செய்துசென்றது.

மான்கள் மூன்றும் திரும்பி வேடனிடம் வருவதை வேடன் கண்டான். இந்த மான்கள் தாம் செய்த சபதத்துக்கு கட்டுப்பட்டு வருகின்றன என்ற மகிழ்ச்சியால் தமது வில்லை டங்காரம் செய்தான். அப்போதும் குடுவையிலிருந்து சிறிது தண்ணீர் சிவலிங்கத்தின் மேலே விழவும் வில்வ இலைகளும் விழுந்தமையால் வேடன் சிவராத்திரியின் நான்கு சாமப் பூஜையும் செய்தவனாகிய பலனைப் பெற்றமையால் அவனுக்கு ஞானம் உதித்தது. கல்வியறிவில்லாத இந்த மான்கள் மீண்டும் எனக்கு உணவாக வந்தமையால் இனிமேல் நான் என் உயிர் வாழ உயிர்க்கொலை செய்யமாட்டன என வேடன் நினைக்கும்போது அந்த மூன்று மான்களுடன் குட்டி மான்களும் வந்துசேர்ந்தன. அவைகள் வேடனை நோக்கித் தம்மை உணவாக ஏற்கும்படி வேண்டின. ஓ! உத்தம குணமுள்ள மான்களே! சத்தியம் தவறா மான்களே!! உங்களைக் கொல்ல மாட்டேன் என்று கூறி அம்பு வில்லைக் கீழே போட்டான் வேடன்.

முதுபெரும் புலவர்
சி.விசாலாட்சி அம்மையார்

அப்போது சிவபெருமான் ஐந்து திருமுகங்களோடு தோன்றி, உனது நான்கு சாமப் பூசையும் ஏற்றுக்கொண்டேன் 'உனக்கு என்ன வரம் வேண்டும் எனக் கேட்டார். வேடன் எம்பெருமானை வீழ்ந்து வணங்கி, 'சுவாமி நான் இது வரை செய்த பிழைகளை மன்னித்து என்னை ஆட்கொள்ள வேண்டும்' எனக் கேட்டான். சிவபெருமானும் அவ்வாறு அருளினார்.

எனவே, கொடிய பாவங்களை செய்த வேடன் சிவராத்திரியென அறியாது சிவராத்திரி விரதம் அனுஷ்டித்துப் பெருமையடைந்தான். ஆதலால், சிவராத்திரி விரதத்தை நாமும் அனுஷ்டிப்போமாக. ★

ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர் பட்டியலில்

# கொழும்பில்-2, கம்பஹாவில் - ஓரிடம் மனோ கணேசனின் கட்சி கோருகிறது

கொழும்பு,பெப்.18

ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் கொழும்பு மாவட்டத்தில் இரண்டு வேட்பாளர் களுக்கான இடங்களையும், கம்பஹா மாவட்டத்தில் ஒரு வேட்பாளருக்கான இடத்தையும் மேல்மாகாண மக்கள் முன்னணி கோரியிருக்கின்றது.

"கொழும்பை மையமாகக் கொண்ட மேல் மாகாணப் பிரதேசத்தில் ஏனைய மலையகக் கட்சிகளுக்கு ஐ.தே.மு. பட்டியலில் இடமளிக்கப்படுவதை நாம ஆட்சேபிக்கவில்லை. அதேசமயம், இப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களின ஜனநாயக ரீதியிலான பேராதரவைப் பெற்ற தலைமைக் கட்சி எங்களுடை யதே. அந்த அங்கீகாரத்துடன் கொழும்பு மாவட்டத்தில் இரு இடங் களையும், கம்பஹா மாவட்டத்தில் ஓரிடத்தையும் கோருகின்றோம்" என்கி றது மேல் மாகாண மக்கள் முன்னணி.

இந்த அடிப்படையில் கட்சியின் தலைவரும், முன்னாள் கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோ கணே சன், ஐ.தே.க. தலைமையுடன் பேச்சு நடத்தி வருகின்றார்.

கொழும்பில் தன்னுடன் மேலதி கமாக இடம்பெறும் அடுத்த தமிழ் வேட்பாளர் கொழும்பில் நிரந்தரமாக வாழும் வடக்கு - கிழக்குப் பின் னணியைக் கொண்டவராக இருந் திடவேண்டும் எனவும் மனோ கணே சன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் குறிப் பாக, தென்கொழும்பு, தெஹிவளை, கல்கிசை, மொறட்டுவ ஆகிய மாநகர பிரதேசங்களில் செறிந்து வாழும் வடக்கு - கிழக்குப் பின்னணியைக் கொண்ட - தமிழர்களுக்கும் மேல் மாகாண மக்கள் முன்னணியின் மூல மாக ஐக்கிய தேசிய முன்னணி பட்டி யலில் இடமளிக்கப்படவேண்டியதன் நியாயத்தை மனோ கணேசன் எடுத்துக்கூறியுள்ளார்.

மேல் மாகாண மக்கள் முன்னணி மூலமாக வடக்கு - கிழக்கைச் சார்ந்த வேட்பாளருக்கு ஐக்கிய தேசிய முன னணி கொழும்பு மாவட்டப் பட்டியலில இடமளிக்கப்படுமானால், தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பைக் கொழும்பு மாவட டத் தேர்தலில் போட்டியிடுவதைத் தவிர்த்துக் கொள்ளும்படி தாம் கோரப போகிறார் எனவும் -

இது இடம்பெறாத பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசி யப் பட்டியல் வாக்குகளுக்காகக் கொழும்பில் போட்டியிடுவதைத் தாம் ஆட்சேபிக்கப்போவதில்லை எனவும் -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன ஏற்படுத்தக்கூடிய இணக்கப்பாடு சம் பந்தமாகத் தாம் புலிகளின் அரசியல துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனையும் சந்திக்க எண்ணியுள் ளார் எனவும் - மனோ கணேசன் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம், கம்பஹா மாவட்டத் தில் ஐக்கிய தேசிய முன்னணிப் பட்டியலில் மேல்மாகாண மக்கள் முன்னணிப் பொதுச் செயலாளர் சட்டத் தரணி ஜெயரட்ணராஜா இடம் பெறுவார் எனவும் தெரியவருகின்றது.

அதேவேளை, தற்போது கலைக் கப்பட்டு விரைவில் தேர்தல் நடத்தப் படவிருக்கும் வடமேல் மாகாண சபை யின் புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசிய முன்னணிப் பட்டியலில் இரண்டு தமிழ வேட்பாளர் நியமனங்களையும் மனோ கணேசன் கோரியுள்ளார்.

அதேசமயம், புத்தளம் மாவட்ட மேல் மாகாண மக்கள் முன்னணி ஆதரவாளர்கள் தமது கட்சி அங்கே தனித்துப் போட்டியிடவேண்டும் என விரும்புகிறார் எனக் கூறப்படுகின்றது. இது சம்பந்தமான முடிவுகள் எடுக் கப்படும், எனவும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்ட தேர்தல் பிர சார நிலையைப் பொறுத்தவரையில் மேல்மாகாண மக்கள் முன்னணி கடந்த வெள்ளிக்கிழமை முதல் பிர சார நடவடிக்கைகளை கொழும்பு மாநகரில் ஆரம்பித்து நடத்திவருகின றது என்றும் - தெரிவிக்கப்பட்டது.(ஐ)

# பாடசாலைகளுக்கு இடையிலான கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.18

மாகாண கல்வித்திணைக்களத் தினால் இவ்வருடமும் கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டிகள் நடத்தப்படவுள் ளன.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி உதவிப் பணிப்பாளா கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோ ருக்கு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். மகாலிங் கம் இதுதொடர்பாகக் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளார்.

இந்த வருடம் நடைபெறும் போட்டி யில் மாணவர்கள் தாம் கற்கும் வகுப்பு களுக்கு அமைவாகப் பிரிவுகள் வழங் கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவினரும தமது வயது, ஆற்றல் என்பனவற்றிற்கு ஏற்ப 'நிரந்தர சமாதானத்தின் மூலம் சுபீட்சமான வாழ்வைப் பெறுவோம்' என்ற கருப்பொருளுக்கமைய ஆக்கங் களைத் தமது சஞ்சிகையில் இடம் பெறச் செய்தல் வேண்டும் என்று அறி விக்கப்பட்டுள்ளது.

சஞ்சிகையின் அமைப்பு பற்றியும் விதிமுறைகள் பற்றியும் குறிப்பிடப் பட்டுள்ளது. போட்டி இறுதித் திகதி கள் பற்றிய விவரமும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இதன்படி, பாடசாலைமட்டப் போட்டி கள் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதியும், கோட்டமட்டப் போட்டிகள் மே மாதம் 31 ஆம் திகதியும், வலயமட்டப் போட்டி கள் ஜூன் 30 ஆம் திகதியும், மாகாண மட்டப் போட்டிகள் ஜூலை 31 ஆம் திகதியும் நடைபெறுமென அறிவிக்கப பட்டுள்ளது. முதல் மூன்று இடங்களைப் பெறும் கையெழுத்துச் சஞ்சிகையின ஒவ்வொரு பிரிவிற்கும் சான்றிதழ்களும், நூலகங்களுக்கு நூல்கள் கொள் வனவு செய்வதற்கு பணப் பரிசுகளும் வழங்கப்படும்.

இதன்படி, முதலாம் இடத்திற்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும், இரண்டாம் இடத்திற்கு 2 ஆயிரத்து 500 ரூபாவும், மூன்றாவது இடத்திற்கு ஆயிரத்து 500 ரூபாவும் என்ற ஒழுங்கில் போட்டி களுக்கான பணப்பரிசுகள் வழங்கப் படும் என்று மாகாணக் கல்விப் பணிப்பா ளர் அறிவித்துள்ளார்

(ம)


வாழ்த்துகின்றோம்



எமது நண்பரும், உடுவில் மத்திய விளையாட்டுக்கழக உறுப்பினரும், கலாபூஷணம் திரு.க.ப. சின்னராசா அவர்களின் மாணவனுமாகிய செல்வன்

குமாரசாமி ரவிசங்கர்

அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் 22.02.2004 ஞாயிறு பி.ப.2.30 மணிக்கு பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்களின் தலைமையில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழா சிறப்புற அமையவும் விழாநாயகன் மேலும் பல கலைகள் கற்று வாழ்வில் சிறப்படையவும் வாழ்த்துகின்றோம்.

உடுவில் மத்திய விளையாட்டுக்கழக உறுப்பினர்களும் நண்பர்களும்.

உடுவில். (சி-33316)(32-21-19-14)



இன்று ஆரம்பமாகின்றது!

மாபெரும் வர்த்தக வீதியுலா!

பெப்ரவரி 17,18,19, 20,21

❑ ஜோ-எகட்டன் ❑ P.T தேவா
❑ சக்தி F.M ❑ சக்தி T.V

இணைந்து நடத்தும்

மாபெரும் வர்த்தக வீதியுலா!

இன்று 17 ஆம் திகதிமுதல் 21 ஆம் திகதிவரை

5 நாள்கள் மட்டுமே!

வீதியுலா வலம் வரும் இடங்கள்:
யாழ்ப்பாணம், மானிப்பாய், சங்கானை, சுன்னாகம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, சுண்டுக்குளி

அணிதிரண்டு வாருங்கள்! அரிய பரிசுகளை வெல்லுங்கள் !!
உங்கள் சக்தி - தமிழ்மொழியின் சக்தி

அனுசரணை:
ஜெசித்தாரா உணவகம்
19/3 மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
☎ 222 7227

(சி-33322) (32-19-14-21)







இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட டாக்டர்கள் சிபார்சு செய்வது

றோயல் குளுக்கோஸ்

100/% சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:- Royal Industries, Colombo.
☎ 0112334603

ஏக விநியோகத்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎:021 222 2567

சத்திரத்துச் சந்திக்கு அருகில் →



இந்திய பரம்பரை ஜோதிடர்





அருள்வாக்கு
அம்பிகா அம்மா
மீண்டும் யாழ்.புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை, ஜாதகம் பார்க்கப்படும்.

உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்துகொள்ளவும் உங்கள் வாழ்வில் வெற்றியும் சுபீட்சமும் அடையவும் அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில் சந்திக்கவும். எல்லா நாள்களிலும் (ஒவ்வொரு நாளும்) சாஸ்திரம் சொல்லப்படும்.

அம்மாவைச் சந்திக்கும் இடம் :
அருள்வாக்கு அம்பிகா அம்மா
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில் பெரியகடைச் சந்திக்கும் ஸ்ரான்லிச் சந்திக்கும் இடையில்).

(28395)(39-19-14-21)



VARATHAN LEARNERS

GOVERNMENT APPROVED DRIVING SCHOOL 'A' GRADE

T.P.: 0777 110868

★ கனரக வாகனம் உட்பட சகல வாகனங்களும்-செலுத்துவதற்குப் பயிற்சி அளிக்கப்படும்.

★ பயிற்சி பெற்றவர்களுக்கு (பழகியவர்களுக்கும்) ஒருமாத காலத்துக்குள் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள் வதற்கு யாழ்ப்பாணத்திலேயே ஒழுங்குகள் செய்துதரப்படும்.

எமது சாரதி பயிற்சிப் பாடசாலையானது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு "A" தரம் கொண்ட பாடசாலையாகும்.

குடாநாட்டு மக்களின் நலன், வசதி கருதி-

யாழ்நகர், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, மானிப்பாய், சாவகச்சேரி ஆகிய இடங்களில் கிளைகள் அமைக்கப்பட்டு அந்தந்த இடங்களில் சாரதிப்பயிற்சி வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

☞ சிறந்த சாரதியாக விரும்பும் ஒவ்வொருவரும் தாமதிக்காது இன்றே தொடர்புகொள்ளுங்கள்.

வரதன் லேனர்ஸ் VARATHAN LEARNERS

1. யாழ்நகர் - வரதன் லேனர்ஸ், இல.133, கே.கே.எஸ். வீதி (கூட்டுறவுக் காரியாலயம் அருகில்)
2. சாவகச்சேரி - நவீன சந்தை மேல்மாடி
3. நெல்லியடி - மனோ தொலைத் தொடர்பகம் கொடிகாமம் வீதி T.P.: 021 2263072
4. அச்சுவேலி - சபா தொலைத் தொடர்பகம் (தியேட்டர் அருகில்) T.P.: 070 212359
5. சுன்னாகம் - யாழ்.லேனர்ஸ், பஸ் நிலையம், கந்தரோடை வீதி,
6. மானிப்பாய் - விதுஷன் லேனர்ஸ், சங்கரப்பிள்ளை வீதி, T.P.: 777 111348

CC, வகுப்பு லைசென்ஸ் வைத்திருப்போருக்கு அதனை "A" வகுப்புக்கு மாற்ற (பயிற்சியுடன்) குறைந்த கட்டணத்தில் செய்துதரப்படும்.

(35-19-14-21) (28530)


## ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 | 01 |
| ௦ | ௦ |
| 05 | 03 |
| ௦ | ௦ |
| 1946 | 2003 |

அமரர்

**சின்னத்துரை பாலசிங்கம்**

திதி: 18.02.2004

ஓராண்டு சென்றாலும்
நீங்காத நினைவாக
உம் பிரிவால் வாடுகின்றோம்
இல்லத்து விளக்காக
இருந்தெம்மைக் காத்தவரே!
நினைவழியா ஓராண்டில்
நெஞ்சம் நெகிழ்ந்து உம்மை
அஞ்சலி செய்கின்றோம்.

இன்று (18.02.2004) புதன்கிழமை அன்னாரின் நினைவுப் பிரார்த்த னையும் மதியபோசனமும் எமது இல்லத்தில் நடைபெறுகின்றது. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


குருசு மதவடி,
ஆனைக்கோட்டை.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

(சி-33331) (26-14-19-21)

# புலிகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம்

# காலாவதியாகிவிட்டது என்கிறார் வீரவன்ஸ



விடுதலைப் புலிகளுடன் பிரதமர் ரணில் அரசு செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை காலாவதியாகிவிட்டது; செல்லுபடியற்றதாகிவிட்டது என்று தெரிவித்திருக்கின்றார் ஜே.வி.பி. கட்சியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ. நாட்டின் ஐக்கியம், ஒருமைப்பாடு என்பவற்றைப் பாதுகாக்கக் கூடியவாறான ஒரு புதிய ஏற்பாட்டை அதற்குப் பதிலாக மேற்கொள்வோம் என்றும் அவர் கூறுகின்றார்.

இன்றைய அரசியல் நிலைபற்றி அவர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு:-

★ கேள்வி: நீங்கள் பல்வேறு ஊடகங்களின் மூலமாக விடுதலைப் புலிகளுடனான புரிந்துணர்வு உடன்படிக்கை (Memorandum of Understanding) பற்றி கருத்துக் கூறிவருகிறீர்கள். அதுபற்றி நீங்கள் கூறும் கருத்துக்கள் தொடர்பாக குழப்பகரமான அபிப்பிராயங்கள் மக்களிடம் இருப்பதாகத் தெரிகிறது. அதுபற்றிய தெளிவான அபிப்பிராயத்தை வெளியிடுவீர்களா?

● விமல் வீரவன்ஸ : புலிகளுடனான புரிந்துணர்வு உடன்படிக்கை காலாவதியாகிவிட்டது; செல்லுபடியற்றதாகிவிட்டது. அதன் காரணமாகவே ரணில் விக்கிரமசிங்க அவர்களும் பேச்சு முயற்சிகளை தான் கொண்டு நடத்த முடியாது எனக்கூறி விலகினார். நாட்டின் ஐக்கியம், ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கக்கூடியவாறான ஒரு புதிய ஏற்பாட்டை அதற்குப் பதிலாக மேற்கொள்வோம். கடந்த பத்து மாதங்களாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் நீண்ட பேச்சுக்களை நடத்தி அதிகாரப் பகிர்வு, அதிகாரப்பரவலாக்கம் தொடர்பான பிரயோகங்களையிட்டு தெளிவாக எழுதி ஒப்பந்தம் செய்துள்ளோம்.

★ கேள்வி: தமிழ் நாட்டு அரசியல்வாதியான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வை.கோபாலசாமி ஜே.வி.பி. பற்றி கருத்துக்கூறியுள்ளார். எதிர்மறையான விமர்சனங்களை அவர் வெளியிட்டுள்ளார். அது பற்றி...?

● விமல் வீரவன்ஸ : அவரவருக்கு அவரவர் சொந்த கருத்துக்களைக் கூறும் உரிமை அவரவர் நாட்டில் உள்ளது. அது பற்றி என்ன கூறக்கிடக்கிறது. ஆனால், ஜே.வி.பிக்குள்ள மக்கள் ஆதரவு நிலையானது இந்தியப் பத்திரிகைகள் கூட ஜே.வி.பியின் வெற்றிகளைப் பற்றி ஆதாரங்களுடன் ஆருடம் கூறுகின்றன. மேலும் ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சரான ராஜித சேனாரட்ண கூட எம்மை, எமது கூட்டை நன்கு விளங்கிவைத்துள்ளார்; நாம் வெல்லப் போகின்ற நிலையை அவர் உணர்த்தியுள்ளார். இந்நிலையில், வைகோவின் கருத்துப் பற்றி கருத்துச்சொல்ல என்ன இருக்கிறது.

★ கேள்வி: இடதுசாரிக் கொள்கைகள் உடையோர் முதலாளித்துவ ஜனநாயகத்துடன இணைவது பற்றி மக்களில் ஒரு தரப்பாரிடம் குழப்பநிலை உள்ளதே!

● விமல் வீரவன்ஸ:- இடதுசாரி அரசியல் வாதிகள் ஜனநாயகத்துடன் தேசிய நீரோட்டத்தில் இணைவதையிட்டு மக்கள் குழம்பத் தேவையில்லை. எல்லோரும் எல்லாமும் பெற்று வாழவேண்டும் என்ற அடிப்படையிலேயே இடதுசாரிகளின் அணுகுமுறை இருக்கும்.

உலகில் தோன்றிய பல முக்கிய பிரச்சினைகளுக்கு இடதுசாரி அரசியல் தலைவர்கள்தான் பொருத்தான தீர்வுகளை முன்வைத்துள்ளார்கள். உலக வரலாற்றில் இதை நீங்கள் பார்க்கலாம். இடதுசாரிகள் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து பொதுநலனுக்கு உழைக்க முற்படுவதை மக்கள் விளங்கவேண்டும்.

★ கேள்வி:- தேர்தல் முறைமைகள் மாற்றப்படவேண்டும் என்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படவேண்டும் என்றெல்லாம் கோஷங்களை பெரியளவில் முன்னைய காலங்களில் முன்வைத்திருந்தீர்கள். அவை பற்றிய உங்களது தற்போதைய நிலைமை என்ன?

● விமல் வீரவன்ஸ: நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையால் ஜனநாயகம் சிதைந்து போகிறது. ஜனநாயகம் ஒருவரின் சுயவிருப்பத்துக்கு ஏற்ப உள்வாங்கப்படுகிறது. இதனால் அரசியல் யாப்பு மாற்றப்படவேண்டும் என்று நாம் கூறுகிறோம்.

மக்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம் உள்ளவர்களாக இருக்க வேண்டியதுடன், அவர்கள் தமது சுயநிர்ணயமான தன்மையோடு ஜனநாயகத்தை அனுபவிகக வேண்டும். ஏப்ரல் இரண்டாம் திகதி மக்கள் தமது விருப்புகளை வெளிப்படுத்தி ஜனநாயகத்தை நிறுவவேண்டும். அரசியல் யாப்பை மாற்றுவதன் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறை ஒழிக்கப்படும். தற்போதய தேர்தல்முறை மாற்றப்படும்.

ஒரு காலத்துக்குப் பொருநதிய சட்டதிட்டங்கள் இன்னொரு காலத்துக்குப் பொருந்தாது. தேர்தல் முறையில் மாற்றங்கள் கொண்டு வந்து இலங்கையின் இறைமை, ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பன பேணப்படவேண்டும்.

★ கேள்வி: தங்களுடைய கட்சி ஒரு சிங்கள இனவாதக் கட்சி என்ற கருத்து தமிழர்கள் மத்தியில் உள்ளது. அதுபற்றி தாங்கள் என்ன் கூறுவீர்கள்?

● விமல்வீரவன்ஸ: நாட்டுமக்கள் அனைவருக்கும் சொல்வது என்னவென்றால், நானும் எனது கட்சியும் ஆழ்ந்த இனவாதப் போக்கினைக் கொண்டவர்கள் என்று தமிழ் ஊடகங்களில் அபிப்பிராயம் நிலவுகிறது.

இனவாதத்தைத் தவிர்த்து எல்லா மக்களும் நாட்டில் ஐக்கியத்தைப் பேணவேண்டும் என்றுதான் நான் கூறிவருகிறேன். மக்கள் மத்தியில் இனவாதத்தை தூண்டாமல் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்துகின்றோம். இதனைத் தமிழ் மக்கள் இனவாதம் என்று தப்பாக நினைக்கிறார்கள். ஜே.வி.பி. வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள் பற்றி அக்கறைகொண்டுள்ளது. அண்மையில் மூதூர், தோப்பூர், கிண்ணியா போன்ற இடங்களில் முஸ்லிம்களுக்குப் பிரச்சினைகள் ஏற்பட்டபோது நாடாளுமன்றத்தில் நாங்களே குரல்கொடுத்தோம். ஹன்சாட்டைப் பார்த்தால் தெரியும். முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட குரல்கொடுக்கவில்லை. எங்களை இனவெறியர் என்று கூறுவோர் தான் இனவெறியில் மூழ்கியுள்ளனர்.

★ கேள்வி: இனரீதியாக ஆட்சியுலகுகளை ஏற்படுத்தி உரிமைகளை வழங்கி இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படக்கூடாது என்று கூறுகிறீர்களே அது ஏன்?

● விமல்வீரவன்ஸ: தமிழர்களுக்கு ஒரு பகுதியைப் பிரித்துக்கொடுக்கும்போது முஸ்லிம்களுக்கும் ஒரு பகுதியைப் பிரித்துக்கொடுக்க வேண்டியுள்ளது. சிங்களவர்களுக்கும் பல துண்டுகளாகப் பிரித்துக்கொடுக்கவேண்டி வரும். நாடு துண்டுகளாகப் பிரிந்து சிதைந்துபோய்விடும். ஓர் எதியோப்பியாவைப் போல - ஒரு பொஸ்னியாவைப் போல - இந்த நாடு மாறக்கூடாது. எந்த மக்கள் தொகுதியாக இருந்தாலும் நாங்கள் பொதுவாக எல்லோரையும் மனிதர்கள் என்ற நிலையிலேயே அணுகுகிறோம். அதனால்தான், ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பைக் கண்டித்தோம்.

**ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ கடந்த திங்களன்று இலங்கை வானொலிக்கு செவ்வி வழங்கினார். காலை 7.05 மணிமுதல் 8.00 மணிவரை இந்தச் செவ்வி தொடர்ந்து ஒலிபரப்பானது. அதன் தொகுப்பு இங்கே தரப்படுகின்றது.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐ.நா. சபையில் அமெரிக்க அரசை வரவேற்றுப் பேசினார். நாடாளுமன்றில் பிரதமர் ஐ.நாவில் நிகழ்த்திய உரையை ஐ.தே.க. அங்கத்தவர்கள் வரவேற்று மகிழ்ந்தனர். ஈராக்கில் அமெரிக்க படைகளின் நடவடிக்கைகள் பற்றி ஒருநாள் விவாதத்தை வேண்டிநின்றார் ஜே.வி.பி அங்கத்தவர் அஞ்ஞானும்மா.

எவ்வகையிலும் ஈராக் விவகாரம் எமது கட்சியின் அரசியலுக்கு லாபம்தரப் போவதில்லை. எனினும், மனித குலத்துக்காகக் குரல் கொடுப்பது என்ற அடிப்படையிலேயே அன்றும் இன்றும் செயற்படுகிறோம். அஞ்ஞானும்மா, இராமலிங்கம் சந்திரசேகரன் ஆகிய இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்மிடம் உள்ளனர் அவர்களைக் கேட்டால் தெரியும் - நாம் இனவாதிகளா என்று.

★ கேள்வி - அதிகாரப் பரவலாக்கம் (Decentralization of Power) மூலம் தீர்வு என்று கூறுகிறீர்கள் அதன்மூலம் நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?

● விமல் வீரவன்ஸ : அதிகாரப் பரவலாக்கம் என்பது நாட்டின் ஒவ்வொரு தனிப்பட்ட பிரஜையும் சுதந்திரமுள்ளவனாக இருக்க வேண்டும் என்ற விடயம் தொடர்பானதாகும். அந்நிலையானது ஒரு பிரஜைக்கு அநீதி இழைக்கப்பட்டால், அவர் நீதி பெறவேண்டும்.

வடக்கோ, கிழக்கோ, தெற்கோ ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சுதந்திரம் இருப்பது என்பதே அதன் அர்த்தம். அரசுகள் மாறும்போது அரசியல் யாப்புக்கள், தேர்தல் முறைகள் மாறலாம்; புதிய கொள்கைப் பிரகடனங்கள் வெளியிடப்படலாம்; வெறுமனே அதிகார வலுமூலம் ஆளும் நிலையும் வெளிப்பூச்சும் பூச்சாண்டிகளும் இருக்கக்கூடாது.

ஓர் அரசை மக்கள் தீர்மானிக்கும் நிலையில் அ[illegible] அதிகாரம் ஒரு மனிதனின் மனித உரிமை தொடர்பில் மக்களுக்கு சரிவரப் பயன்படவேண்டும். அதிகாரப் பரவலாக்கம் எனும் போது நாட்டின் தனித்தனியான ஒவ்வொரு பிரஜைக்குமான உரிமைகளையே கருதுகிறோம்.

★ கேள்வி:- கல்வி, விவசாயம், மீன்பிடி சார்ந்த தங்களது கொள்கைகள் என்ன?

● விமல் வீரவன்ஸ:- நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் என்ற போர்வையில் வெளிநாட்டு மோகத்தால் உள்நாட்டு வளங்கள் வீணடிக்கப்படுகின்றன. உற்பத்தி முறைகளில் உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்துவோம். சுற்றிவர கடலால் சூழப்பட்ட எமது நாட்டின் மீன்பிடித்துறையை நன்கு மேம்படுத்தி மீன் உற்பத்திகளை ஏற்றுமதி செய்வோம். மேலும் கல்விக்கொள்கைகளில் இன, மொழி, மத, கலாசார வேறுபாடுகளைத் தூண்டும் கல்விமுறைகளைத் தவிர்ப்போம். நாட்டின் ஒருமைப்பாடு, இறைமை, ஐக்கியம் இவற்றை கட்டிக்காக்கும் விதத்தில் கல்விக் கொள்கைகளும் அமையும்.

★ கேள்வி:- பொங்குதமிழ் பிரகடனத்தில் "தமிழர்கள் என்றால் புலிகள், புலிகள் என்றால் தமிழர்கள்" என்று பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. நீங்கள் ஆட்சிக்கு வரும்பட்சத்தில், சமாதானப் பேச்சுக்கள் தொடங்கினாலும் அது முறிவடைந்து மீண்டும் போர் வெடித்தால் "தமிழர்கள் எல்லோரும் புலிகள்" என்று முடிவெடுத்து யுத்தம் செய்வீர்களா?

● விமல்வீரவன்ஸ:- சமாதானத்தையே விரும்புகின்றோம். - போர் வெடிக்கும் நிலை வரக்கூடாது என்பதை வலியுறுத்துகின்றோம். இவ்வாறான ஒரு நிலையில் நீங்கள் இத்தகைய கேள்வியைக் கேட்கிறீர்கள். எனினும், அவ்வாறு நீங்கள் கூறுவது போல் ஒரு யுத்தம் மூண்டால் பொங்குதமிழ் நிகழ்வில் கூறப்பட்டது போல் தமிழர்கள் எல்லோரும் புலிகள் இல்லை என்ற அடிப்படையை நாம் விளங்கிக் கொள்வோம்.

**தொகுப்பு : டான்ஸ்ரன்**

அம்மாதிரியான நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்களை அழைத்து வந்து ஒரு பெரிய கூட்டமாகக் காட்டுகின்றார்கள். வடக்கு - கிழக்கு மக்கள் வரி விதிப்பு, பேச்சுச் சுதந்திரம் மறுக்கப்படுதல் என்பவற்றுக்கு ஆளாகியுள்ளனர். பொங்கு தமிழில் "தமிழர்கள் என்றால் புலிகள், புலிகள் என்றால் தமிழர்கள்" என்று பிரகடனம் செய்யப்பட்டுள்ளமை பற்றி நாம் அவ்வளவு அலட்டிக் கொள்ளவில்லை.

இவ்வாறான ஒரு நிலைமை தற்செயலாக வந்தால் புலிகள் யார்? சாதாரண தமிழர் யார்? என்பது தெரியவரும்.

★ கேள்வி : ஏப்ரல் தேர்தலில் வாக்காளர் எதைக் கருத்தில் எடுக்கவேண்டும் எனக் கேட்கிறீர்கள்?

★ விமல்வீரவன்ஸ: நாடாளுமன்றத்துக்கு மக்களால் தெரிவுசெய்யப்படுவோர் இலங்கை மாதாவின் இறைமை, ஒருமைப்பாடு, ஐக்கியம் ஆகியவற்றைப் பேணிப்பாதுகாக்கக் கூடியவர்களாக இருக்கவேண்டும். நாங்கள் எல்லோரும் மனிதர்கள் என்றவகையில் ஒருதாய் மக்களாக - இலங்கையர்களாக - இணைவோம். இந்தச் சின்னஞ்சிறிய இலங்கைத் தீவில் ஒற்றுமை, ஐக்கியம் என்பன மிக முக்கியமானவை. ஐக்கியம் குலைந்து சீரழிந்து போயுள்ள இந்நாட்டை மீளக்கட்டியெழுப்புவோம். எமது நீண்ட பகீரதப் பிரயத்தனத்தின் பின்னர் ஆட்சியை அமைக்கும் நிலைக்கு வந்துள்ளோம். எமது திட்டங்கள், எண்ணக்கருக்கள் எல்லாம் 'ஒரே நாடு, ஒரே மக்கள்' என்பதுதான். அந்த நிலைப்பாடு வரும், வரட்டும் எனப் பிரார்த்திப்போம். ☆

## அளவெட்டி தபாலகத்துக்கு கொள்வனவு செய்த காணியில் வெடிபொருள்கள்

யாழ்ப்பாணம்,பெப்.18

அளவெட்டி தபாலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கவெனக் காணி ஒன்றைத் துப்புரவு செய்த வேளை அங்கு மிதிவெடிகள், வெடிக்காத ஷெல்கள் என்பன காணப்பட்டமையினால் துப்புரவு செய்யும் பணிகள் உடனடியாக இடை நிறுத்தப்பட்டன.

அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்கு அருகில் கொள்வனவு செய்யப்பட்ட இப்புதிய காணியினை துப்புரவு செய்து வெகுவிரைவில் கட்டடத்தை நிர்மாணிக்கும் முயற்சியில் அளவெட்டி தபாலக ஆலோசனைக்குழு ஈடுபட்ட வேளையிலேயே வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து அருகில் உள்ள படைமுகாமுக்கு அறிவிக்கப்பட்டது. வெடி பொருள்களை விரைவில் அகற்றித் தருவதாக இராணுவத்தினர் உறுதியளித்துள்ளனர்.

(ஐ-8-ரி)



**யாழ். பல்கலைக்கழகத்தில் அண்மையில் இடம்பெற்ற 'விருதுகள் இரவு' வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், விளையாட்டு அவைத் தலைவர் பொ.கிருபானந்தன், கலைப்பீடாதிபதி பேராசிரியர் பு.கோபாலகிருஷ்ண ஐயர், ஆலோசனைச் சபைத் தலைவர் கலாநிதி சூசை, விளையாட்டு அவைச் செயலாளர் குகாயினி ஆகியோர் கைலாசபதி கலையரங்கிற்கு அழைத்துவரப்படும் காட்சி.** *(படம்: நவாலி செய்தியாளர்)*

## இளங்கலைஞர் மன்றத்தின் இசைப் போட்டி முடிவுகள்

அரியாலை,பெப்.18

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் இவ்வாண்டு நடத்தும் இசைவிழாவை முன்னிட்டு நடத்திய இசைப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இந்தப் போட்டிகள் மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப்பிரிவு என்ற மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்டன.

போட்டிகளில் சித்தியடைந்தோர் விவரம் வருமாறு:-

**வாய்ப்பாட்டு - மேற்பிரிவு**

★ முதலாம் இடம்: மதுரா வரதராஜசர்மா (கல்வளவு, துர்க்காபுரம், தெல்லிப்பழை).

★ இரண்டாம் இடம்: மகாலிங்கம் கீதன் (புளியங்கூடல் வடக்கு, ஊர்காவற்றுறை.

மூன்றாம் இடம்: செல்வன் யசோதரன் காண்டீபன் ( 64, ஏ.வி.றோட்., அரியாலை).

**வாய்ப்பாட்டு - மத்திய பிரிவு**

★ முதலாம் இடம்: செல்வி வைஷ்ணவி ஜெயச்சந்திர பைரவமூர்த்தி (கற்பகம், சுதுமலை மேற்கு, மானிப்பாய்).

★ இரண்டாம் இடம்: செல்வி விஜயருக்ஷாயினி சந்திரசேகரம் (54, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை).

★ மூன்றாம் இடம்: செல்வி சுபாஹரி வெங்கடேஸ்வரசர்மா (உடுக்கியவளைப் பிள்ளையார் கோயில், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை).

**வாய்ப்பாட்டு - கீழ்ப்பிரிவு**

★ முதலாம் இடம்: செல்வி கோபிகா சேனாதிராஜா (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை).

★ இரண்டாம் இடம்: செல்வி திவ்யமணி வெங்கடேஸ்வரசர்மா (உடுக்கியவளைப் பிள்ளையார் கோயில், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை).

★ மூன்றாம் இடம்: சுகன்யன் சுந்தரேஸ்வரன் (அளவாவோடை, சூராவத்தை, சுன்னாகம்). (ஐ-17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



5ஆம் தரம் 2003 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 128 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ள

**செல்வி பரமதாஸ் சுகீர்த்தனா**

அவர்களையும், அவருக்குக் கல்வியறிவூட்டி ஆக்கமும் ஊக்கமுமளித்த ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் அவர் கல்வியில் பல உயர்ச்சிகளைப் பெற இறையாசி வேண்டி நிற்கின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்:
வேதநாயகம் குடும்பத்தினர்.

மாலிசந்தி,
நெல்லியடி கிழக்கு. (சி-33336) (32-12-39-21)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வேலணை J/17 பிரிவுக் கிராம சேவையாளராக 1992ஆம் ஆண்டிலிருந்து 2003ஆம் ஆண்டு வரை கடமையாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவரான

**உயர்திரு. ஆறுமுகம் சபாநாதன்**

அவர்கள் தற்பொழுது இப்பிரதேசத்தின் நிர்வாக உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்றிருக்கின்றமைக்காக நாம் அவரது சேவை தன்னைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். வாழ்க நீடூழி!

வேலணை தெற்கு துறையூர்
ஐயனார் சனசமூக நிலையத்தினர்.

வேலணை தெற்கு,
வேலணை. (26-12-39-21)

☞ இன்று (18-02-2004) புதன் பிற்பகல் 3.00மணியளவில் வேலணை தெற்கு ஐயனார் சனசமூக நிலையத்தில் பாராட்டு வைபவம் இடம்பெறும். (28607)

## சிறிமாதவன்

### தற்காலிக இடம்மாற்றம்

T.V.டெக், வீடியோ, ஓடியோ கசெட், கசெட் றேடியோ, சங்கீத ஓகன்கள், சகலவித கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், பிலிம்றோல் மற்றும் அன்பளிப்புப் பொருள்கள் பெற்றுக்கொள்ளச் சிறந்த இடம்.

இதுவரை நாளும் இல.37 கஸ்தூரியார் வீதியில் இயங்கிய **சிறீ மாதவன்** திங்கள் முதலாக ஜும்மா பள்ளிலேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம என்ற விலாசத்தில் இயங்கிவருகிறது என்பதை அன்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**சிறிமாதவன்**
ஜும்மா பள்ளிலேன்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021 222 6365.

(சி-33339)(32-12-39-21)


## புண்ணிய நாச்சியம்மையார் குருபூசைத் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்.சைவபரிபாலன சபையினர் நடத்தும் புண்ணியநாச்சியம்மையார் குருபூசைத்தின விழாவும் சபையின் ஆயுட்கால உறுப்பினர் வி.இராமநாதனைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சபையின் தலைவர் சைவப்புலவர் வ.கந்தசாமி தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெறும்.

காலை 7மணிக்கு வண்ணார் பண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இடம்பெறும் விசேட அபிசேகத்தைத் தொடர்ந்து நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் விசேட பூசை, திருமுறை ஓதல், பண்ணிசைப் போட்டியில் முதலாம் இடங்களைப் பெற்ற மாணவர்களின் பண்ணிசை என்பன நடைபெறும். அருளுரையை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் நிகழ்த்துவார். சபையின் ஆயுள் உறுபபினர் வி.இராமநாதனைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வில் பாராட்டுரையை யாழ். இந்துக்கல்லூரி முன்னாள் பிரதி அதிபர் க.சிவராமலிங்கம் நிகழ்த்த, சபைத் தலைவர் சைவப்புலவர் வ.கந்தசாமி விழா நாயகரைக் கௌரவிப்பார்.

தொடர்ந்து பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும். மாகேசுர பூசையும் இடம்பெறும்.

(எ)


## வீடு விற்பனைக்கு

கண்டி வீதி, சுண்டுக்குளியில் (OLD PARK அருகில்) வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
Ps.P.இம்மனுவேல்,
அப்போஸ்தல சபை.
மானிப்பாய் வீதி.
உடுவில்.
T.P.: 0602 213395.

(26) (28614)

## தனியார் பாதுகாப்புச் சேவை, போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்

01-04-2004 தொடக்கம் 31-03-2005 வரையான காலப்பகுதிக்குத் தனியார் பாதுகாப்புச் சேவை வழங்குவதற்குப் பின்வரும் தகுதியுடையோரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்கள் மீளளிக்கப்படாத ரூபா 250/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 02-03-2004 காலை 10 மணி வரைக்கும். கேள்விகள் உடனே திறக்கப்படும். அத்திகதிக்கு பின்னர் வரும் கேள்விப் பத்திரங்களும், தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்காத கேள்விப் பத்திரங்களும் நிராகரிக்கப்படும்.

01) அண்மையில் பாதுகாப்பு அமைச்சில் பெறப்பட்ட பாதுகாப்புச் சேவை அனுமதிச் சான்றிதழ்.
02) சேவை முன்னனுபவம்
03) நிதி நிலைமைத் தகைமை
(6 மாதகால வங்கிப் பற்றும், வருமான வரிப்பற்றுச் சீட்டும்)

மேலதிக விவரங்களை வைத்தியசாலையில் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர்,
வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகம்
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(33340) (21-12-39)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 17 - 06 - 1927

மறைவு 19 - 01 - 2004

அமரர் **இரத்தினசாமி இராஜரட்ணம்**

உம் நினைவுகள் எம் நெஞ்சங்களை
விட்டகலா வண்ணம்
எம்மை மீளாத்துயரில் ஆழ்த்திச் சென்றுவிட்ட
எம் குடும்பத்தின் குலவிளக்கே!
உம் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.


அளவெட்டி வடக்கு,
அளவெட்டி. — குடும்பத்தினர்.

(28611) (12-21-39)

## யாழ்.மக்களே! உங்களுக்கோர் அரிய வாய்ப்பு!

### உடனே விரையுங்கள்!

**hager**



+ பிரான்ஸ் உற்பத்திகள்
+ 5 வருட உத்தரவாதம்

**DAVEY**

+ அவுஸ்திரேலிய உற்பத்திகள்
+ 2 வருட உத்தரவாதம்





Taps and Acceories.

+ மலேசியா உற்பத்திகள்
+ பதிலீட்டு உத்தரவாதம்
ஆயுள் முழுவதும்

dki

Importer
General sales Co.Ltd
No 7, Station Road, Col-3
T.P 2574511

**Distributor**
Jaffna Electricals,
6, stanley Road,
Jaffna.

☎: 021-222 2353
021-222 5766
fax : 021-222 2552

(C/33321) (41-14)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

**கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை**

அன்புடையீர்!

எமது குடும்ப ஒளிவிளக்கு அமரர் கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை அவர்களது பிரிவு குறித்த அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகள் 19-02-2004 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்று அனைவரையும் சமுகந்தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்தாய்
அல்வாய. (சி-33337)(21-12-39) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது வங்கிக்கிளையில் கடமையாற்றும் **திருமதி பாமதி ஞானேஸ்வரன்** அவர்களது அன்புத் தந்தை

அமரர் **பொன்னையா சண்முகராஜா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளர், உத்தியோகத்தர்கள்
தேசிய சேமிப்பு வங்கி, சுன்னாகம்.

(28610) (32-12-21-39)

# ‘கொலஸ்ரோல்’ என்றால் என்ன?

மனிதனின் ஈரலில் உருவாகும் மெழுகுத் தன்மையான கொழுப்புப் போன்ற ஒரு பதார்த்தமே கொலஸ்ரோல் (Cholesterol)எனப்படும். உடலிலுள்ள ஒவ்வொரு கலத்திலும் ஒரு பகுதியாகவுள்ள கொலஸ்ரோல் பல உடற் தொழிற்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

அதன் சில முக்கிய தொழிற்பாடுகள் வருமாறு:-

★ ஆரோக்கியமான கலச்சுவர்களைப் பேணுதல்.

★ ஓமோன்களை உற்பத்தி செய்தல் (உடலின் இரசாயன ‘செய்தி காவிகள்’).

★ விற்றமின் Dயின் உருவாக்கம்.

★ கொழுப்பின் சமிபாட்டில் உதவும் பித்த அமிலங்களை உற்பத்தி செய்தல்.

சில அமிலங்கள் தேவைக்கதிகமான கொலஸ்ரோலை எமது உடல் உற்பத்திசெய்கின்றது. மேலதிகமான இக்கொலஸ்ரோல் குருதிச் சுற்றோட்டத்துடன் கலந்துவிடுகின்றது. குருதியில் கொலஸ்ரோலின் அளவு அதிகரிக்கும்போது குருதிக் குழாய்களில் அடைப்பு ஏற்படுகின்றது. இதனால் இருதய நோய்கள் மற்றும் ‘ஸ்றோக்’ (Stroke) எனப்படும் தசைகள் இயங்காத உணர்வற்ற நிலையும் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன.

அதிகமான விலங்கு தொடர்பான கொழுப்புக்களை உட்கொள்ளும்போது (Saturated fat - இறைச்சி மற்றும் பால் தயாரிப்புக்கள் போன்ற விலங்கின அடிப்படையிலான உணவுகளிலும் காணப்படும் ஒரு வகை கொழுப்பு).

எமது உடல் அளவுக்கதிகமான கொலஸ்ரோலை உற்பத்தி செய்கின்றது. இறைச்சி, முட்டை மற்றும் பால் தயாரிப்புக்கள் போன்ற விலங்கின அடிப்படையிலான உணவுகளிலேயே கொலஸ்ரோல் காணப்படும். பழங்கள், மரக்கறிகள் மற்றும் தானியங்கள் போன்ற தாவர உணவுகளில் கொலஸ்ரோல் காணப்படுவதில்லை.

**கொலஸ்ரோல் குறைவான உணவுக் கட்டுப்பாட்டு முறைகள்**

கொலஸ்ரோல் அளவைக் கட்டுப்படுத்த இருதய நோய்கள் தொடர்பான அமெரிக்கச் சங்கம் ஒன்று பின்வரும் முறைகளைச் சிபாரிசு செய்கின்றது.

முறை I

வேறு உணவுக்கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றாத குருதியில் அதிகளவு கொலஸ்ரோல் உள்ளவர்கள் இம்முறையைக் கடைப்பிடிக்கலாம்.

★ உட்கொள்ளும் மொத்த கொழுப்பின் அளவு 30 வீதமான கலோரிகளுக்கு மேற்படலாகாது

★ உட்கொள்ளும் விலங்கு தொடர்பான கொழுப் புகளின் (Saturated fat - அறை வெப்ப நிலையில் திண்மமாகக் காணப்படுபவை) அளவு 10 வீதமான கலோரிகளுக்கும் குறைவாக இருத்தல் வேண்டும்.

★ மூலக்கூறுகளில் ஒன்றிற்கும் அதிகமான கார்பன் - கார்பன் இரட்டைப் பிணைப்புக்களையுடைய கொழுப்புக்களின் (Poly unsaturated fats - அறை மற்றும் குளிர் சாதனப் பெட்டியின் வெப்பநிலைகளில் திரவமாக இருப்பவை) உட்கொள்ளும் அளவு 8-10 வீதமான கலோரிகளுக்கிடையிலிருத்தல் வேண்டும்.

★ ஒலிவ் எண்ணெய் (Olive Oil) போன்ற (Monounsaturated) கொழுப்புக்களே மீதமாகவுள்ள கொழுப்பு உட்கொள்ளும் அளவைப் பூர்த்தி செய்யவேண்டும். (10-15 வீதமான கலோரிகள்).




★ தினசரி உட்கொள்ளும் கொலஸ்ரோலின் அளவு 300 மில்லிக் கிராம்களுக்கும் குறைவாக இருத்தல் அவசியமானது.

★ உட்கொள்ளும் சோடியத்தின் அளவு, ஒரு நாளுக்கு 2 ஆயிரத்து 400 மில்லிக் கிராம்களுக்கு மேற்படலாகாது.

முறை II

முறை I போன்ற பிறிதொரு உணவுக்கட்டுப்பாட்டு முறையை ஏற்கனவே கடைப்பிடித்து அதனால் குருதியிலுள்ள கொலஸ்ரோலின் அளவில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படவில்லையென்போருக்கும் இதய நோய்களால் பாதிக்கப்பட்டிருப்போருக்கும் முறை II உபயோகமானது.

★ உட்கொள்ளும் விலங்கு தொடர்பான கொழுப்புகளின் அளவு (Saturated fat) 7 வீதமான கலோரிகளுக்கும் குறைவாகவிருத்தல் வேண்டும்.

★ உட்கொள்ளும் கொலஸ்ரோலின் அளவு ஒரு நாளுக்கு 200 மில்லிக்கிராம்களுக்கும் குறைவாக இருத்தல்வேண்டும்.

உட்கொள்ளும் கலோரிகளின் அளவு, ஆரோக்கியமான உடல் நிறையைப் பேணுவதற்குப் போதுமானதாக இருத்தல் வேண்டும்.

முறை III

கடுமையான இதய நோய்கள் உள்ளவர்களுக்கும் முறை II ஐப் பின்பற்றி குறிப்பிடத்தக்க பயனைப் பெறமுடியாதவர்களுக்கும் மற்றும் கொலஸ்ரோலின் அளவைக் குறைக்கும் மருந்துகளை உட்கொள்ள விரும்பாதவர்களுக்கும் இம்முறையை நிபுணர்கள் சிபாரிசு செய்கிறார்கள். இதில் உட்கொள்ளப்படும் கொழுப்பின் அளவு 18-26 வீதமான கலோரிகளாகச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

அதாவது, நடைமுறையில் ஏறக்குறைய அனைத்து இறைச்சி வகைகள், பால்பொருள்கள் மற்றும் மேலதிக கொழுப்புக்களையும் இம்முறையைப் பின்பற்றுபவர்கள் தவிர்க்க வேண்டியுள்ளது. இவ்வாறான கடுமையான உணவுக்கட்டுப்பாட்டை நீண்டகாலத்திற்குக் கடைப்பிடிப்பது கடினமானது. (ஆனால், தாவர உணவுகளை மட்டும் வழமையாக உட்கொள்பவர்களுக்கு இது ஒரு பிரச்சினையாக இருக்காது.) கடுமையான இந்தவகையான உணவுக்கட்டுப்பாட்டு முறை அவசியமானதுதானா? என சில நிபுணர்கள் கேள்வி எழுப்புகின்றார்களெனில், மிகக் குறைந்தளவிலான கொழுப்பு உணவுகளே உட்கொள்ளப்படுவதால், குருதியில் திரிகிளிசரைட்டின் அளவு (Triglyceride) அதிகரிக்கின்றது. ஏனென்றால், அவற்றின் காபோவைதரேற்றுக்களின் அளவு உயர்வாக இருப்பதேயாகும்.

உணவுக் கட்டுப்பாட்டுடன் கூடிய உடற்பயிற்சி மற்றும் மன அழுத்தத்தைக் குறைக்கும் முறைகளடங்கிய மிகக் குறைந்த அளவிலான கொழுப்பை உட்கொள்ளும் உணவுக் கட்டுப்பாட்டுமுறையானது ஏற்கனவே, இதய நோயால் பாதிக்கப்பட்டவர்களின் குருதிக்குழாய்களில் படிந்துள்ள கொலஸ்ரோல் மற்றும் ஏனைய பொருள்களை அகற்றுவதில் குறிப்பிடத்தக்க பயனை அளிப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிககின்றன.

இத்தாலியின் தென்பகுதி மற்றும் கிறீஸ் போன்ற மத்திய தரைக் கடற் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு இதய சம்பந்தமான நோய்கள் வருவது குறைவு எனக் கண்டறியப்பட்டுள்ளது. இப்பிரதேசங்களின் பாரம்பரிய உணவுப் பழக்கங்களே, இம் மக்களுக்கு இதய நோய்கள் வராமல் தடுக்கும் ஒரு காரணியாக இருக்கலாம் என நிபுணர்கள் கூறுகின்றார்கள்.

இவர்களின் உணவில் அதிகளவிலான தானியங்கள், பழங்கள், மரக்கறிவகைகள், உலர்ந்த பீன்ஸ், உலர்ந்த பயறுவகைகள், சிவப்பு திராட்சை ரசம் மற்றும் மீன்கள் என்பன அடங்கியுள்ளன. சிவப்பு நிறமான இறைச்சி வகைகளை இவர்கள் குறைவாகவே உண்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 25-35 வீதமான கலோரிகளே கொழுப்பாக உள்ளெடுக்கப்படுகின்றது. இக்கொழுப்பு பெரும்பாலும் ஒலிவ் எண்ணெய் Monounsaturatedfat வடிவத்திலேயே உட்கொள்ளப்படுகின்றது. இப்பிரதேச மக்களின் உணவு முறையால், கொலஸ்ரோலின் அளவு குறையும். அதே வேளை, உடலுக்கு உபயோகமான எச்டிஎல் (HDL) கொலஸ்ரோலின் அளவும் அதிகரிக்கின்றது.

கொழுப்பு அதிகம் குறைக்கப்பட்ட உணவுக் கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றுவதிலும் பார்க்க மத்தியதரைக் கடற்கரைப் பிரதேசத்தைச் சார்ந்த மக்களின் உணவுப் பழக்கங்களைப் பின்பற்றுவது நீண்டகால நோக்கில் சிறந்ததெனக் கருதப்படுகின்றது. எனினும், இதில் அதிகம் கொழுப்பு உட்கொள்ளப்படுவதால் அதிகளவிலான கலோரிகள் கிடைக்கப்பெறும். இதனால் உடல் பருமன் அதிகரிக்கும். உடல்நிறை அதிகரிபபு, உணவுக்கட்டுப்பாட்டால் கிடைக்கப் பெறும் நன்மைகளை இல்லாது செய்துவிடும்.

**கொலஸ்ரோலின் வகைகள்**

இவை பலவகைப்படும். எனினும், அனைத்துக் கொலஸ்ரோல்களும் தீங்கானவையல்ல.

★ குறைந்த அடர்த்தியுடைய லிப்போப்ரதக் (அல்லது LDL) கொலஸ்ரோல் எனப்படும் கொலஸ்ரோல் மிகவும் ஆபத்தானது! இது குருதிக் குழாய்களில் அடைப்பை உண்டாக்கக்கூடியது! இதனால் இதய நோய்கள் உருவாகக்கூடிய அபாயம் அதிகரிக்கும்.

★ உயர் அடர்த்தியுடைய லிப்போட் புரதக் (அல்லது HDL) கொலஸ்ரோல் எனப்படும் கொலஸ்ரோல் உடலுக்கு நன்மைபயக்கும் வகையினதாகும். இது LDL வகையான கொலஸ்ரோலை குருதியிலிருந்து அகற்ற உதவுவதன் மூலம் இதய நோய்கள் உருவாகும் அபாயத்தைக் குறைக்கும்.

**கொலஸ்ரோல் தொடர்பான விளக்கங்கள்**

எமது உடலில கொலஸ்ரோலின் அளவைக் குறைப்பதால் இரண்டு மடங்கான நன்மை ஏற்படுகின்றது. குருதியில் கொலஸ்ரோலின் அளவு ஒரு வீதத்தினால் குறைந்தால், இதய நோய்கள் வருவதற்கான வாய்ப்பு 2 வீதத்தினால் குறைகின்றது.

★ ஏற்கனவே இதய நோயுள்ளவர்கள் தமது உடலில் கொலஸ்ரோலின் அளவைக் குறைக்கும்போது, இறப்பு ஏற்படுவதையும் கை, கால்கள் வழங்காமல் போவதையும் குறிப்பிடத்தக்களவில் குறைக்க முடியும்.

★ குருதியில் கொலஸ்ரோலின் அளவு, 220 மில்லி கிராம்கள் /ஒரு டெசி லீற்றருக்கு என்ற அளவைவிட அதிகரிக்கும் போது, இதய நோய்க்கான வாய்ப்பு மிக வேகமாக அதிகரிக்கின்றது.

★ அனைத்து வயது வந்தவர்களும், தமது உடலில் உள்ள கொலஸ்ரோலின் அளவை, ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையாவது பரிசோதனை மூலம் அறிந்து கொள்வது நல்லது.

★ எமது உடலில், பெருமளவிலான கொலஸ்ரோல் ஈரலினாலேயே உற்பத்தி செய்யப்படுகின்றது. உண்ணும் உணவினால் சிறிதளவே உற்பத்தியாகின்றது. ஆனால், விலங்கு தொடர்பான கொழுப்புக்களை (Saturated fat) நாம் அதிகளவில் உட்கொள்வதால், எமது உடல் அதிகளவிலான கொலஸ்ரோலை உற்பத்தி செய்யும்.

★ உணவுப் பழக்கங்களில் மாற்றங்களைக் கொண்டுவருவதன் மூலமும், உடற் செயற்பாடுகளை அதிகரிப்பதன் மூலமும் மருந்துகளின்றியே பெரும்பாலனவர்களின் குருதியிலுள்ள கொலஸ்ரோலின் அளவைக் குறைக்கமுடியும்.

★ விலங்குணவுகளில் மட்டுமே கொலஸ்ரோல் காணப்படும். தாவர உணவுகளில் அது காணப்படுவதில்லை.

★ நடுத்தர அளவிலான ஒரு முட்டையில் ஏறக்குறைய 213 மில்லி கிராம்கள் கொலஸ்ரோல் அடங்கியுள்ளது. மூன்று அவுன்ஸ் அளவிலான கொழுப்பற்ற சிவப்பு நிற இறைச்சியில் அல்லது தோல் நீக்கப்பட்ட கோழி இறைச்சியில் ஏறக்குறைய 90 மில்லிகிராம்கள் கொலஸ்ரோல் காணப்படும். மூன்று அவுன்ஸ் மீனில் 50 மில்லிக் கிராம்கள் கொலஸ்ரோல் அடங்கியுள்ளது.

**தொகுப்பு: மலர்**

# சிவராத்திரி நிகழ்வுகள்

வலி.தென்மேற்கு,பெப்.18

வரலாற்றுப் பெருமைமிக்க கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா இன்று வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேகங்கள், பூசைகள் என்பன நடைபெறவுள்ளதுடன் பண்ணிசை, திருமுறை பாராயணம், சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

ஆலயத்துக்குச் செல்லும் அடியார்கள் தெல்லிப்பழை மற்றும் சேந்தான்குளம் சோதனை நிலையங்கள் ஊடாகச் செல்வதற்குரிய ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-10-135)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,பெப்.18

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில் இன்று சிவராத்திரி பூஜை நடைபெறவுள்ளது.

திருக்கேதீஸ்வரத்தில் நடைபெறுவது போன்று பாபநாச தீர்த்தக் கேணியில் இருந்து குடங்களில் நீர் எடுத்துச்சென்று சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நான்கு சாமமும் விசேடபூசைகள் இடம்பெறும்.

கதாப்பிரசங்கம், பஜனை, நாடகம் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெறும். (ஐ)

☆ ☆ ☆

அளவெட்டி கும்பளாளைப் பிள்ளையார் ஆலயத்தில் வருடாந்த மகா சிவராத்திரி விழா இன்று நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் சிறப்பு நிகழ்வாக மாவை சிவநாதம் பட்டி மன்றக்குழுவினர் சைவப்புலவர் கந்த.சத்தியதாசன் தலைமையில் ‘புண்ணியத்தில் மிகச்சிறந்தது சிவபுண்ணியமா? பசு புண்ணியமா? என்ற தலைப்பில் பட்டி மன்றத்தை நடத்துவார்கள்.(ஐ-8-ரி)

☆ ☆ ☆

துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரி இன்று இரவு நான்கு சாமப்பூசைகளுடனும் விசேட அபிஷேக ஆராதனைகளுடனும் நடைபெறும்.(ஐ-ரி)

☆ ☆ ☆

கொழும்புத்துறை,பெப்.18

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீஞானவைரவர் ஆலயத்தில் மஹா சிவராத்திரி இன்று நான்கு சாமப் பூசைகளுடனும் விசேட அபிஷேக ஆராதனைகளுடனும் நடைபெறும். (ஐ-8-30)

☆ ☆ ☆

கொழும்புத்துறை மேற்கு வதிரி பீட விநாயகர் ஆலயத்தில் இன்று இரவு மஹாசிவராத்திரி நிகழ்வுகள் நடைபெறும்.

விசேட நான்கு சாமப்பூசைகளும் சொற்பொழிவுகளும் இடம்பெறும். (ஐ-8-30)

☆ ☆ ☆

நல்லூர் தெற்கு ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய மஹாசிவராத்திரி இன்று மாலை 6மணி முதல் நடைபெறும்.

நான்கு சாமப் பூசைகளுடன் கூட்டுப்பஜனை, பண்ணிசைக் கச்சேரி, வாத்திய பிருந்தா, பட்டிமன்றம், சொற்பொழிவு என்பனவும் இடம்பெறும். (ஐ-8-30)

☆ ☆ ☆

கோண்டாவில் கிழக்கு பாதாள வைரவர் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா இன்று நடைபெறும்.

விரதத்தை அனுஷ்டிக்கும் மக்களின் நலன் கருதி இசை நிகழ்ச்சிகள், கலைநிகழ்வுகள் என்பனவும் நடைபெறும். (8-ரி)

☆ ☆ ☆

குடத்தனை,பெப்.18

மகாசிவராத்திரி விழாவை முன்னிட்டு குடத்தனை கிழக்கு மாளிகைத்திடல் அம்மன் ஆலயத்தில் இன்றிரவு விசேட பூசை வழிபாடுகளும் அபிஷேக ஆராதனைகளும் நடைபெறும். (ஐ-8-ரி)

☆ ☆ ☆

குடத்தனை,பெப்.18

புலோலி மத்தி அவ்வொல்லைப் பிள்ளையார் ஆலய மகா சிவராத்திரி விழா இன்று புதன்கிழமை நடைபெறும். (ஐ-8-ரி)

☆ ☆ ☆

வலி.தென்மேற்கு,பெப்.18

சித்தன்கேணி சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரி உற்சவம் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது. நான்கு சாமப்பூசையும், வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன. இரவு முழுவதும் திருமுறை ஓதல், பண்ணிசை, இன்னிசை ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஐ-135)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,பெப்.18

காரைநகர் ஈழத்துச்சிதம்பரம் சிவன் கோயில் வருடாந்த மஹா சிவராத்திரி விழா இன்று வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

திருவாசக முற்றோதலும் நாளை வியாழக்கிழமை காலை 6மணிக்கு மாகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளன. (ஐ-ரி)

# கட்டண விதிப்பைச் சீராக்குவதற்கு ஓட்டோக்களில் மீற்றர்கள் தேவை!

## பொதுமக்கள் தரப்பில் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்ப்பாணத்தில் ஓட்டோ சாரதிகள், மீற்றர் முறையில் கட்டணம் அறவிடும் நடைமுறையை அறிமுகப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஓட்டோ சாரதிகளில் சிலர் நியாயமான கட்டணத்தை அறவிடுகின்றனர். எனினும், பல சாரதிகள் கட்டண அறவீட்டின்போது மோசமாக நடந்து கொள்கின்றனர் எனப் பொதுமக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

ஓட்டோக்களில் தூரம் கணிக்கும் மீற்றர்களைப் பொருத்தி கட்டணம் அறவிடுவதே இதற்கு ஒரே தீர்வு எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதன்மூலம் சகல ஓட்டோ சாரதிகளும் சீரான கட்டண அறவீட்டை மேற்கொள்ள முடியும்.

இது தொடர்பில் ஓட்டோ சங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (ம-9)

## பாடசாலைகளுக்கு இடையிலான

# மாகாண மட்டப் போட்டிகள் ஜூன் மாதத்தில் நடைபெறும்

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான ஒன்பதாவது மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் ஜூன் மாதத்தில் நடைபெறும் என வடக்கு - கிழக்கு மாகாண மேலதிகச் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

கோட்ட மட்டங்களிலும் வலய மட்டங்களிலும் நடைபெறும் குழு நிலைப் போட்டிகளில் வெற்றியீட்டும் முதல் இரு அணிகள் மாகாணமட்ட போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படும்.

விளையாட்டுப் போட்டிகள் யாழ்ப்பாணம், வவுனியா, திருமலை ஆகிய இடங்களில் நடைபெறும்.

மாவட்டமட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலை அணிகள் மாவட்ட விளையாட்டுக் குழுத்தலைவர் அல்லது செயலாளர் ஊடாக தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உடற்பயிற்சிப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் மே மாதம் 23 ஆம் திகதிக்கு முன்னரும் -

மெய்வன்மைப் போட்டிகள் மற்றும் பெருவிளையாட்டுக்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகள் மே மாதம் 31ஆம் திகதிக்கு முன்பும் தங்கள் விண்ணப்பங்களை வடக்கு - கிழக்கு மாகாணத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-152)

# இந்திய மீன்பிடி முறைகளுக்குச் சமாந்தரமாக எமது தொழில் முறையும் உயர்த்தப்பட வேண்டும்

## கடற்றொழில், நீரியல் திணைக்கள உதவிப்பணிப்பாளர் உரை

யாழ்ப்பாணம்,பெப்.18

இந்திய மீன்பிடிமுறைகளுக்கு சமாந்தரமாக எமது மீன்பிடி முறைகளும் தொழில் நுட்பங்களும் உயர்த தப்படவேண்டும். இதன் மூலம் மீனவர்களின் வாழ்க்கைத்தரமும் உயரும்.

-இவ்வாறு யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் அங்குராரப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய கடற்றொழில், நீரியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அல்பிரட் ஜோசப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

கிராம மட்டத்திலுள்ள மீன்பிடிச் சங்கங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து பிரதேச மட்டத்தில் சமாசங்களை அமைத்துள்ளோம். அதேபோல சமாசங்களை இணைத்து சம்மேளனத்தை இப்போது உருவாக்கியுள்ளோம்.

கடற்றொழிலை ஒரு பரந்த வலுவுள்ள நிறுவனக் கட்டமைப்பின் கீழ் கொண்டுவருவதற்கு கடற்புலிகள் தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

இந்திய மீன்பிடி முறைகளுக்கு சமாந்தரமாக எமது மீன்பிடி முறைகளை உயர்த்துவதும், மீனவர்களின வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், கடலுணவுப் பொருள்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதுமே எமது பிரதான நோக்கம். தற்போது கடலுணவுப் பொருள்களைத் தனியாரே கொள்வனவுசெய்து கொழும்புக்குக் கொண்டு செல்கின்றனர். இவர்களைச் சென்றடையும் இலாபம் எமது மீனவர்களைச் சென்றடைவதற்கான வழிவகைகளை ஏற்படுத்தவே இந்த சம்மேளனத்தை ஆரம்பித்துள்ளோம்.

நடைமுறையில் 18 தொடக்கம் 28 அடி வரையான படகுகளே இங்கு பாவனையில் உள்ளன. இதற்குப் பதிலாக இந்திய மீனவர்கள் பயன்படுத்தும் 35 முதல் 48 அடி வரையிலான றோலர்களைப் பயன்படுத்தி கடலில் ஐந்து ஆறு நாள்கள் தங்கி மீன்பிடியில் ஈடுபடுவதே எமது பிரதான நோக்கமாகும். இதற்கான நிதி உதவியை அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்தும் அரச அதிபர் மட்டத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அரச சார்பற்ற நிறுவனங்கள் 50 மிலலியன் ரூபாவையும் அரச அதிபர் மட்டத்தில் 10 மில்லியன் ரூபாவையும் வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

குளிரூட்டப்பட்ட ஆறு வாகனங்களைப் பெறுவதற்காக யு.என்.டி.பி, ஜி.ரி.இசற் நிறுவனங்களிடம் நிதியுதவி கோரியுள்ளோம். இவற்றில் யாழ்.சமாசத்திற்கு இரண்டும், வேலணை, பருத்தித்துறைக்கு தலா இரண்டும் வழங்க முன்மொழிந்துள்ளோம்.

இன்னும் மூன்று குளிரூட்டிய வாகனங்களைப் பெற்று வலிகாமம் வடக்கு பலாலி, வலிகாமம் தெற்கு சங்கானை சமாசங்களுக்கு வழங்கத் தீமானிக்கப்பட்டுள்ளது. சங்கங்களது முன்னேற்றத்தைப் பொறுத்தே மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.

சங்கங்கள் தன்னிச்சையாக நடக்க முயலக்கூடாது. கொழும்புத்துறைச் சங்கம் மற்றையவற்றுடன் இணையத் தயாரில்லை. அதேபோல புங்குடுதீவு மீன்பிடிச்சங்கங்கள் வேலணையுடன் இணைய மறுக்கின்றன. ஊர்காவற்றுறை சங்கம் பெயரளவிலேயே இயங்குகின்றது. சங்கங்களின் கணக்கு வைப்பு முறை ஒழுங்காக இல்லை.

இந்திய மீனவர்களிடம் இருந்து சுவீகரிக்கப்பட்ட றோலர்கள் ஊர்காவற்றுறையில் உள்ளன. இவற்றை ஏலத்தில் விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

(ம-8-88-51)

# வீதியில் வாகனங்களை நிறுத்தித் திருத்த வேலை

## அம்மன் வீதியில் போக்குவரத்துக்கு இடைஞ்சல்

யாழ்ப்பாணம்,பெப்.18

வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலயத்திற்கு அருகில் பருத்தித்துறை வீதியும் அம்மன் வீதியும் சந்திக்கும் இடத்தில், வீதியின் நடுவில் வாகனங்களின் திருத்த வேலைகள் நடைபெற்று வருவதால் பொதுப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் சில மாதங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திருத்த வேலைகள் தற்பொழுது அதிகரித்துக் காணப்படுகின்றன. முன்னர் ஓரிரண்டு ஓட்டோகள் அங்கு தரித்துவிடப்பட்டு திருத்தப்பட்டு வந்தன. தற்பொழுது பல ஓட்டோக்களை அப்பகுதியில் நிறுத்தி வைத்துப் பலர் கூட்டமாக நின்று திருத்த வேலைகளைப் பார்வையிட்டு வருகின்றனர். இதனால் பருத்தித்துறை வீதியால் வந்து திரும்புகின்ற வாகனங்கள் விபத்துக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. போக்குவரத்துச் செய்வதிலும் இடைஞ்சல் ஏற்படுகிறது.

வீதியின் அருகில் வெற்றுக் காணி ஒன்று உள்ளபோதும் அதற்குள் வாகனங்களை நிறுத்தித் திருத்த வேலைகளை மேற்கொள்ளாது வீதியில் நிறுத்தியே வேலைகள் தினமும் நடைபெற்று வருகின்றன.

(ஐ-10)

## நிர்வாகிகள் தெரிவு

கொழும்புத்துறை,பெப்.18

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

மா.க.ஈழவேந்தன் தலைவராகவும் க.தவஸ்கந்தா செயலாளராகவும் வை.கிருபாகரன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

(ம-30)

# வடக்கு - கிழக்கில் தேர்தலைக் கண்காணிக்க வெளிநாடுகளிடம் ஈ.பி.டி.பி. வேண்டுகோள்

கொழும்பு,பெப்.18

எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது வடக்கு - கிழக்குப் பகுதிகளில இடம்பெறவுள்ள தேர்தல் நடவடிக்கைகள் குறித்து கண்காணிக்குமாறு ஈ.பி.டி.பி வெளிநாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டிலுள்ள வெளிநாடுகளின் தூதுவர்கள் ஊடாக அமெரிக்கா மற்றும் இந்தியா உட்படப் 17 நாடுகளிடம் இத்தகைய வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக ஈ.பி.பி.டிபியின முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராஜா தெரிவித்திருப்பதாக கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் தேர்தலில் விடுதலைப புலிகளினால் தமது அமைப்புக்கு இடையூறு ஏற்படுமானால் அதனை எதிர்கொள்ளத்தக்க வகையில் தமது பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அவ்வமைப்பு ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

(ம-8)


அச்சுவேலி நகரில் புதுமெருகுடன் ஆரம்பம்

**NEW STAR STUDY CENTRE**

நியூ ஸ்ரார் கல்வி நிறுவனம்

தரம் 1 தொடக்கம் 11 வரை
2004 கல்வியாண்டு ஆரம்பம்
21.02.2004 சனிக்கிழமை
பி.ப. 3.30 மணி

ஆசிரியர் குழு:-

| | |
|---|---|
| 1) தமிழ் | M.பகீரதன் |
| | P. சுபாஜினி B.A (Hon) |
| 2) சமயம் | K.ஆனந்தகணேஸ் (SP.Hin. Trd) |
| | M.குணநேசன் (B.A) |
| 3) சமூகக்கல்வி | M.குணநேசன் (B.A) |
| | S.சுதன் |
| 4) கணிதம் | K.துஷியந்தன் (B.Sc.) |
| | P.சுபாஜினி |
| | N.புவனேந்திரன் |
| 5) விஞ்ஞானம் | திரு. S.ரவிச்சந்திரன் (B.Sc., Dip.) |
| | திரு. N.மகேந்திரராசா (Dip. In Teach) |
| | திரு. V.கணேசலிங்கம் |
| 6) ஆங்கிலம் | திரு. K.R.P.அருளானந்தம் (D.B.I.N.E) |
| | திரு. N.பஞ்சசீலன் |
| 7) வர்த்தகம் | S.S.ஸ்ரீ |
| 8) புவியியல் | S.ஸ்ரீதரன் |
| 9) சுகாதாரம் | N.கெங்காசுதன் |
| 10) சுற்றாடல் விவசாயம் | R.Y [illegible] |
| 11) சித்திரம் | திருமதி S.விஜயவரதன் |

தரம் 5க்கான விசேட புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை வகுப்புக்கள் நடைபெறும்.

ஆசிரியர்கள்:
1) திரு. S.வசந்தன்
2) திரு. S.கண்ணன்

குறிப்பு: அனுமதிகளை முன் கூட்டியே பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

-நிர்வாகி.

*பிரதான வீதி, வல்லை றோட், அச்சுவேலி.* T.P.No- 077- 6055900 (28618) (32-17-12)


## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையைச் சேர்ந்த பொது சுகாதார பரிசோதகர்
திரு.க.இளங்கோ அவர்களின் தந்தையார்
15.02.2004 அன்று சிவபதமெய்தியதையிட்டு
அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சுகாதார வைத்திய அதிகாரி
மற்றும் உத்தியோகத்தர்கள்
சுகாதார வைத்திய அதிகார பணிமனை,
பருத்தித்துறை.

(C/33344) (40-17-12-32)

## மரண அறிவித்தல்

### குணரத்தினம் பரமரட்சகபாலன்

**(இளைப்பாறிய புகையிரதப் பகுதி முகாரி)**

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் பரமரட்சகபாலன் 16.02.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணரத்தினம் - கமலாபாய் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பையா- சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் அமரர்களான அனுரா, உஷா (முன்னாள் கொக்கிளாய் மகாவித்தியாலய ஆசிரியை) மற்றும் சாய்மருகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் அரவிந்தனின் அன்பு மாமனாரும் அபிராமின் அன்புப் பேரனும் நிர்மலானந்தனின் (ஆஸ்திரேலியா) சகோதரரும் இராமானந்தன் (ஆஸ்திரேலியா) நித்தியானந்தன் (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 17.02.2004 அன்று கொக்குவில் இந்துமயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*9,5ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.* (28617) (17-12-32)

தகவல்:
ப.சாய்மருகன் (மகன்)
T.P.077 6303539


Jayoda ஜயோதா ජයෝදා

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல 6062748 முதல் 6077242 வரை
சீட்டிழுப்பு இல.07 திகதி 16-02-2004

வெற்றி எண்கள் 1 0 3 1 2 3 சுப்பர் எண் 7

சுப்பர் ஜக்பொட் பரிசு 12,529,100/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் பெற்றோர் | வெற்றி தொகை | பரிசுத் | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 12,529,100/- | - |
| இடது பக்கத்திலிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள் | 13 | 50,000/- | 650,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள் | 131 | 5,000/- | 655,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள் | 1,304 | 500/- | 652,000/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள் | 13,032 | 50/- | 651,600/- |
| இடது பக்கத்திலிருந்து முதல் 1 எண் | 129,151 | 10/- | 1,291,510/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 5 எண்கள் | 15 | 5,000/- | 75,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 4 எண்கள் | 132 | 1,000/- | 132,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 3 எண்கள் | 1,300 | 100/- | 130,000/- |
| வலது பக்கத்திலிருந்து முதல் 2 எண்கள் | 12,916 | 20/- | 258,320/- |
| மொத்தம் | 157,995 | | 5,495,430/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ.5,495,430/-

இந்த வியாழக்கிழமைக்கான
சுப்பர் ஜக்பொட் ரூ.12,886,050/-

தொடர் இல. 7040358க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 பெப்ரவரி 19ம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6067589-8-67
6072930-8-29
6062790-2-56
6066833-1-98
6074358-9-08

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொழும்பு 3.
யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்,18

அகதிகள் புனர்வாழ்வுக் நிறுவனத்தின் 25 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று காலை 10 மணிக்கு நிறுவனத் தலைவர் அ.நல்லதம்பி தலைமையில் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த பொதுக்கூட்டத்தின் போது புதிய நிர்வாகிகள தெரிவு மற்றும் புதிய ஆளுநர்சபைத் தெரிவு என்பன இடம்பெறவுள்ளன. (ஒ-7)


CISCO SYSTEMS NETWORKING ACADEMY

## CISCO Networking Academy Programme

### இலவசக் கணனிக் கருத்தரங்கு

யாழ்குடாநாட்டில் முதன் முதலில் ஐ.நா நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வதேச அங்கீகாரம் பெற்ற CISCO Net working கற்கை நெறியானது கடந்த மாதம் எமது நிறுவனத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக் கல்வி பற்றிய இலவசக்கருத்தரங்குகள் பிரதேசவாரியாக பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன.

**பிரதேசம் I**
இடம் :- சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி
காலம் :- 21.02.04 (சனிக்கிழமை)
நேரம் :- மாலை 3.00 மணி

**பிரதேசம் II**
இடம் :- இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்
காலம் :- 22.02.04 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- மாலை 3.00 மணி

**பிரதேசம் III**
இடம் :- நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், கரவெட்டி
காலம் :- 28.02.04 (சனிக்கிழமை)
நேரம் :- மாலை 3.00 மணி

கருத்தரங்கில் கலந்து கொள்ள விரும்புவோர் தபால் மூலமாகவோ தொலைபேசி மூலமாகவோ தமது பதிவுகளை உறுதிப்படுத்துமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

THE BARBARA MULVANEY
Computer Training Centre
123, Temple Road, Jaffna ☎ 021222 5971


### — சுன்னாகத்தில் சிவராத்திரி விழா —

இன்று மாலை 7 மணி முதல் கே.கே.எஸ்.வீதி, சுன்னாகத்தில் அமைந்துள்ள சாயிபாத மந்திர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
சிறப்பு நிகழ்வாக விசேட சொற்பொழிவுகள், பிரார்த்தனைகள் பிரசாந்தி நிலைய சிவராத்திரி விழா வீடியோ காட்சி என்பன நடைபெறும்.

(28624)(37-11-16) சாயி நிலையத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் ஸ்ரீனிவாசன் அரவிந்தன்
அவர்களின் அன்புத் தந்தை
**இராமச்சந்திரன் ஸ்ரீனிவாசன் அவர்களின்**
பிரிவால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்
E /02/ A அணி,
பேராதனைப் பல்கலைக்கழகம்
பொறியியற் பீடம்.

(23628)(37-11-17-36)

## 45 ஆம் நாள் நினைவலைகள்

அன்னை மடியில் 23 04 1978



ஆண்டவன் அடியில் 05 01 2004

### பாஸ்கரதேவன் ஜெயறஞ்சன்

நமதுயிர் ராயுவே
நாற்பத்தைந்து நாள்கள்
நகர்ந்திட்ட போதிலும்
நமது நெஞ்சிலே
நடமாடும் உன் உயிரை
நம்மால் ஒரு கணமும்
நகாத்திட முடியலையே
ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.

உடுவில் கிழக்கு,
கற்பகப் பிள்ளையார்,
கோயிலடி. (28626)(32-11-17-36) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி
### சிவனடியார் பிலோமினா

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது கடற்கரை வீதி, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்டவரான சிவனடியார் பிலோமினா (17.02.2004) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவனடியாரின் அன்பு மனைவியும் சிவசுப்பிரமணியம், சாமிநாதா, சிவபாதம் (ஜோர்ஜ்), பிரான்சிஸ்கா, காலஞ்சென்ற சிவபதி டொறத்தி, மரியராணி வெறநீசியா, சிவதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (18. 02. 2004) புதன்கிழமை பி.ப. 3மணிக்கு செ‌ன். தோமஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்
சிவபாதம் வர்த்தக நிலையம்
ஜோர்ச்- (மகன்),
பருத்தித்துறை. (சி-33348)(36-11-16)

### தவறிவிட்டது

வத்ஸ்கும்மர நாவுல்ல தெமோதரவைச் சேர்ந்த பத்மநாதன் கதிரேசன் என்பவருடைய தே.அ. அட்டை இல.(802472803X) புத்தூருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் **அம்பாள் புடைவையகம், புத்தூர்** அல்லது **K.** கனகரத்தினம் புத்தூர் கிழக்கு, புத்தூர் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**சன்மானம் வழங்கப்படும்**
(சி33346)(37)


### நிறைஞ்சனாஸ் சாங்கானை

ஜோதிகா, ரம்பா, லைலா,
விவேக் நடித்த
**த்ரீரோசஸ்** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
சிவராத்திரி தினத்தை முன்னிட்டு
விசேடகாட்சி 9.00 (பு.நே.)
ரஜனி நடித்த **பில்லா** (C/33333)(12)

### லிபேட்டி அச்சுவேலி

இன்று முதல்
அர்ஜுன், சிம்ரன், நாசர், வடிவேல நடித்த




காட்சிகள்: 3.00, 7.00. (பு.நே.)
இன்று விசேட காட்சி இரவு 10.00

### லக்சுமி இணுவில்

சிவராத்திரி தினத்தை
முன்னிட்டு 5 காட்சிகள்
மிதுன், சார்மி, வையாபுரி,
தாமு, நாசா
இன்னும் பலர் நடிப்பில்
**ஆஹா எத்தனை அழகு** (ரீல்ஸ்)
காட்சிநேரம் : 10.30. 2.30.6.30.9.30. 1.30(இரவு.)
(C-33050) (12)

### ராஜா யாழ்ப்பாணம்

இன்று முதல்
விஜயகாந்த்,
வடிவேல், பிரபுதேவா,
பாண்டியராஜன்
நடித்த



(ரீல்ஸ்)
**எங்கள் அண்ணா**
காட்சிநேரம் : 10.30. 2.30.6.30.9.30(பு.நே.)
சிவராத்திரியை முன்னிட்டு இன்று நள்ளிரவுக் காட்சி 1.30 மணிக்குக் காண்பிக்கப்படும்
(C-33050) (12)

### நாகம்ஸ் சுன்னாகம்

புதிய டொல்வி ஒலிநயத்துடன்
மகா சிவராத்திரி வெளியீடாக!
தனுஷ், அபர்ணா, கருணாஸ் (2 வேடம்) நடிப்பில்



தினசரி காட்சிகள:
11.00.
3.00.
7.00.
(பு.நே.)
விசேட காட்சிகள் இன்று இரவு மட்டும்
9.30. 12.00. 2.00 (பு.நே.) (C/33048)(12)


## கண்ணீர் அஞ்சலி

நீண்ட கால எமது குடும்ப நண்பரும் ரெலிகோணர் உரிமையாளருமாகிய

**குமாரசாமி தவராஜசிங்கம் அவர்கள**

கொழும்பில் 15.02.2004 அன்று இறைபதம் எய்தினார். அன்னாரின் மறைவுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகரைவேண்டி அவரின் குடும்பத்தினரின் துன்பத்திலும் பங்குகொள்கின்றோம்.

521/7, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (28631)(36-11-17)
சி.நடராசா குடும்பம்
(அங்கிள்).

## அனுதாப அஞ்சலி



### திருமதி
### மலைமகள் இராமநாதர்

(பொதுச் செயலாளர் ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானம்-தெல்லிப்பழை)

எமது தேவஸ்தான பொதுச்செயலாளரும் திரு.க.இராமநாதர் (முன்னாள் ஓய்வு பெற்ற மேலதிக அரச அதிபர்) அவர்களின் அன்புத் துணைவியாரான திருமதி மலை மகள் இராமநாதர் அவர்கள் நேற்று (17.02.2004) செவ்வாய்க்கிழமை காலமான செய்தி அறிந்து அதிர்ச்சி அடைவதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகத் துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக் கின்றோம்.

தலைவா
சிவத்தமிழ் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி.

ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்.
தெல்லிப்பழை. (28630)(37-11-16)

## இதய அஞ்சலி

எமது ஆருயிர் நண்பன் ஸ்ரீனிவாசன் அரவிந்தன்
அவர்களின் அன்புத் தந்தை
**இராமச்சந்திரன் ஸ்ரீனிவாசன் அவர்களின்**
மறைவினால் கலங்கித்தவிக்கும் அவர்களது குடும்பத்தார்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டிநிற்கிறோம்.

நண்பர்கள்
E/02 அணி,பொறியிற்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

(28629)(36-11-16)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பையா பகவதி

வராத்துப்பளை, புலோலி கிழக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுப்பையா பகவதி அவர்கள் நேற்று (17.02.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நாகமுத்து சுப்பையா (அம்பாள் ஸ்ரோஸ்)வின் அன்பு மனைவியும் குருபரன்(ஜேர்மன்), கலைமகள், கலைச்செல்வி, பிரணவன், குலமகள் (லண்டன்), திருமகள், ரமணன்,பராசக்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வரட்ணம், செந்தில்நாதன், ஸ்ரீமீனசிவா(லண்டன்) , இளம்பிறைநாதன (கிரிஸ் ஹூட்வெயார்), சந்திரவதனி (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கௌரிகன், சாம்பவி, திலோத்தமா, ஷங்கனி, மாதுரி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**நா.சுப்பையா (கணவர்)**
**(அம்பாள் ஸ்ரோஸ்).**

வராத்துப்பளை,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

### இராமச்சந்திரன் (சந்திரா) ஸ்ரீனிவாசன்

அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராமச்சந்திரன்(சந்திரா) ஸ்ரீனிவாசன் நேற்று (17.02.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரா - இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மகனும் தவரத்தினத்தின் அன்புக் கணவரும் அச்சுதன் (சம்பியா), அகிலா, அரவிந்தன் (பொறியியல்பீடம், பேராதனை), அம்பிகா (பொறியியல்பீடம், பேராதனை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நேசரத்தினம், இரதிதேவி, கமலாதேவி,திருமகள்,பாஸ்கரன், தேவகி, இராகுலன், சுகந்தி ஆகியோரின சகோதரரும் சரஸ்வதிதேவி, தங்கராசா, புவனேந்திரன், நடராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று( 18.02.2004) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, கொக்குவில் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37, அச்சுக்கூட
ஒழுங்கை, கொக்குவில்.

தகவல்:
ஸ்ரீ அச்சுதன்(மகன்).

### இராசரத்தினம் கோபாலரத்தினம

கொக்குவில் கிழக்கு, அச்சக ஒழுங்கையைச் சேர்ந்த இராசரத்தினம் கோபாலரத்தினம் அவர்கள் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா இராசரத்தினம் - இரத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் இராசகோபால், ஜெயராசா, இராசதேவி (ஜேர்மன்), தேவராசா, இரத்தினதேவி(இத்தாலி), இரவீந்திரன், சுசீலாதேவி (சுவிஸ்), மனோகரன், ஞானகலா (ஜேர்மன்), சிவரூபன், பிரசாந்தி(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 18.02.2004) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் கொக்குவில் கிழக்கு இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுக்கூட ஒழுங்கை
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
**இராசரத்தினம் இராஜகோபால்**
**(சகோதரன்)**

# தமிழர்களின் அபிலாஷை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பீடத்தினதும் மக்களினதும் கரிசனைகளை அவர்கள் தங்களது கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

இன்றைய பேச்சுக்கள் ஆக்கபூர்வமானவையாகவும் மிகவும் பயன் உள்ளனவாகவும் அமைந்தன. எதிர்கால அரசியலை எவ்வாறு முன்னெடுப்பது என்பதில் எம்மிடையே ஒத்த கருத்து நிலவியது. இது வரவேற்கத்தக்க விடயம்.

எதிர்வரும் தேர்தலில் தமிழ்கூட்டமைப்பு எந்தச்சின்னத்தில் போட்டியிடுவது என்பது குறித்துக்கருத்துப் பரிமாறியுள்ளோம். அதில் இணக்கப்பாடு கண்டுள்ளோம். இது விடயமாக தமிழ்க்கூட்டமைப்பினர் ஆராயவேண்டியுள்ளது. மிகவிரைவில் அது தொடர்பான அறிவித்தலை விடுவோம்.

கூட்டமைப்பு சார்பில் முஸ்லிம் இனப்பிரதிநிதிகளும் நிறுத்தப்படவிருக்கின்றனர். அது தொடர்பான விவரம் விரைவில் வெளியிடப்படும்.

இந்தத் தேர்தலில் கொள்கை ரீதியாக ஒன்றுபட்டு நிற்பது என்று எமது தலைவரும், தலைமைப்பீடத்தினரும், தமிழ்க் கூட்டமைப்பினரும் முடிவு செய்துள்ளனா.

எந்தக் கருத்து வேறுபாடுமின்றி ஒரே கொள்கையில் செயற்படுவது என்று கூட்டமைப்பினர் எல்லோரும் சேர்ந்து முடிவுசெய்துள்ளனர். இதில் உறுதியாகவும் தெளிவாகவும் அவர்கள் இருக்கின்றார்கள்.

நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்துக்கு நேரடியாக விடுதலைப் புலிகள் போட்டியிடவில்லை.

ஆனால், கொள்கை ரீதியாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்துகின்ற ஒரு தேர்தலாக இதனை மாற்றியமைக்க தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். தமிழ் மக்கள் எந்த இலட்சியத்துக்காக - எந்தக்கொள்கைக்காக - ஒன்றுபட்டு ஒரு தலைமைத்துவத்தின் கீழ் ஐக்கியப்பட்டு நிற்கிறார்களோ, அதை இம்முறை சர்வதேச சமூகத்துக்கு நிலைநிறுத்த ஆயத்தப்பாட்டுடன் அவர்கள் இருக்கின்றார்கள்.

அந்த அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் விடுதலைப் புலிகளாகிய நாங்களும் ஒன்றிணைந்துள்ளோம். அந்த வகையில் எமது முழுப்பங்களிப்பும் ஆதரவும் இருக்கும்.

இந்தமுறை தேர்தலில் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் தங்கள் அபிலாஷைகளை வெளிப்படுத்தவிருக்கிறார்கள். அதற்கான சாத்தியப்பாடான சூழ்நிலையை ஆராயும்படி தலைவர் எமக்குப் பணித்துள்ளார்.

இராணுவக்கட்டுப்பாடற்ற எமது பகுதி மக்கள் வாக்களிப்பில் பங்குபற்றுவது குறித்தும் கூட்டமைப்பினருடன் பேசியுள்ளோம். இதில் உள்ள சட்டச்சிக்கல்கள், வாய்ப்புக்கள் சம்பந்தமாக ஆராய்ந்த பின்னர் அது தொடர்பாக அறிவிப்போம்.

சிங்களப் பேரினவாதக்கட்சிகள் இங்கு போட்டியிடக்கூடாது என்று நாம கூறவில்லை. தமிழ்மக்கள் பேரினவாதக் கட்சிகளை விரும்பவில்லை என்றுதான் கூறினோம். வடக்கு - கிழக்கில் யாரும் போட்டியிடக் கூடாது என்று நாம் கூறவும் இல்லை அப்படி ஓர் அதிகாரத்தை நாம் பிரயோகிக்கவுமில்லை.

இம்முறை கொள்கை ரீதியாக தமிழ்மக்கள் ஒன்றுபட்டு ஒரு தலைமைத்துவத்தின் கீழ் தமது அபிலாஷைகளை வெளிப்படுத்த விரும்புகிறார்கள். அவ்வளவே.

தமிழ்க்கூட்டமைப்பின் சார்பாக முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனுக்கு இடம் வழங்குவதில் எல்லோரும் ஒற்றுமைப்பாட்டுடன் இருக்கின்றோம். ஆனால், அவர் ஒதுங்குவதாகவே அறிவித்துள்ளார். என்றார் தமிழ்ச்செல்வன்.

"தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் போக்கு கூட்டமைப்புக்குள் சிக்கலை ஏற்படுத்துமா" என்று கேட்டதற்கு -

"அவர் தொடர்பாக மக்கள் தீர்மானிப்பார்கள். ஏன் அதைப்பற்றி நாம் சொல்வான்? மக்கள் தமது நிலைப்பாட்டைக் காட்டப்போகிறார்கள். அப்போது நீங்கள் அறிந்துகொள்வதுதான் நல்லது" - என்று பதில் அளித்தார் தமிழ்ச்செல்வன்.

"விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மாற்றுக்கட்சிகளும் பிரசாரம் செய்ய அனுமதிப்பீர்களா?" எனக் கேட்டபோது -

"நிச்சயமாக இடம் அளிப்போம், தமிழ் மக்கள் இம் முறை ஒன்றுபட்டுத் தங்கள் அபிலாஷைகளை வெளிபடுத்தவிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மக்களிடம் கருத்துச்சொல்லுகின்ற சுதந்திரம் எல்லோருக்கும் உண்டு. அதில் எந்தமாற்றுக்கருத்துக்கும் இடமில்லை.

"மாற்றுக் கட்சிகளை வரவேண்டாம் என்றோ, கேட்க வேண்டாம் என்றோ நாம் ஒரு போதும் தெரிவிக்கவில்லை" - என்றார் அவர்.

"இம்முறை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கு விருப்புவாக்கு அளிக்கும்படி கோருவதில்லை என்றும் அவர்களுக்கு வழங்கப்படும் தேர்தல் சின்னத்துக்கு வாக்களிக்கும் படியே மக்களைக் கோருவது என்றும் கூறப்படுகிறதே?" - எனக் கேட்கப்பட்டபோது

"நாங்கள் பேசிய அளவில் தலைவரின் எதிர்பார்ப்பும் தலைமையின் எதிர்பார்ப்பும் அதுவே. ஏனென்றால் நாம் எல்லோரும் கொள்கை ரீதியாக ஒற்றுமைப்பட்டுள்ளோம். நாம் எல்லோருமே எவ்வித கருத்து வேறுபாடின்றி முழு அளவில் மனதார ஒன்றுபட்டிருக்கிறோம். கொள்கைக்காகவே நாம் எம்மை அர்ப்பணித்திருக்கிறோம். அதனையே உறுதியாக - மிகத் தெளிவாக அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள் நாமும் தெரிவித்துள்ளோம்" - என்றார் தமிழ்ச்செல்வன்.

முன்னதாக இடம்பெற்ற சந்திப்பில் விடுதலைப் புலிகளின் தரப்பில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், துணை அரசியல் துறைப்பொறுப்பாளர் சோ.தங்கன், யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் ஊடகப பேச்சாளர் தயா மாஸ்டர் ஆகியோரும் -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சார்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா சம்பந்தன், ஜோசெப் பராராசசிங்கம், எம்.கே.சிவாஜிலிங்கம், என்.ரவிராஜ், சந்திரநேரு, பொன்னம்பலம் கஜேந்திரகுமார், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், துரைரட்ணசிங்கம், இராஜ குகனேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம் சுரேஷ் பிறேமச்சந்திரன், ரெலோ முதல்வர் என்.ஸ்ரீகாந்தா மற்றும் ரெலொ செயலாளர்நாயகம் பிரசன்னா இந்திரகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ஓ-3-5)

வேலையாள்கள் தேவை
ஆண்கள் மில் வேலைகள்
பெண்கள் பொதிசெய்யும் வேலைகள்
நேரில் வரவும்.
இராசம் அரிசி ஆலை,
மின்சார நிலைய வீதி,
சுன்னாகம்.
(28622)(37)

கணனி வகுப்புகள்
அனைத்து Diploma & Certificate Courses
★தனியாக, சிறுகுழுக்களாக கற்பிக்கப்படும்.
PC SYSTEMS
Jaffna Road Manipay
(St. Anne's Church முன்பாக).
(28485)(37)

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அறுவர் வருமாறு:

1. சூ.சிறில் (தேசிய எழுச்சிப் பேரவை, யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்)
2. ப.கனகலிங்கம் - யாழ்.விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர்)
3. திருமதி பத்மினி சிதம்பரநாதன்
4. செ.கஜேந்திரன் (தமிழீழ மாணவர் பேரவை)
5. ஈழவேந்தன்
6. சிவநேசன் (வடமாகாண பனை தொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர்)

- இதேபோன்று மற்றைய மாவட்டங்களிலும் கூட்டமைப்பு சார்பாகப் போட்டியிடுவோர் பட்டியல் ஓரளவு இறுதி செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. -

பெரும்பாலும் தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்தில் தமிழ்க் கூட்டமைப்பு போட்டியிடும் என்று தீர்மானிக்கப்பட்டதாகவும் அறியவந்தது.

THE BARBARA MULVANEY
Computer Training Centre
123, Temple road, Jaffna
T.P:-222 - 5971

தேவை
எமது நிறுவனத்திற்கு MS OFFICE, Page Maker, Corel Draw ஆகியவற்றில் பரிச்சயமுள்ள தமிழ், ஆங்கில தட்டச்சு அனுபவமுள்ள பெண் அலுவலக உதவியாளர் தேவை.
தகுதிச் சான்றிதழ்களுடன் 23-02-04 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு எமது அலுவலகத்திற்கு நேரில் சமுகமளிக்கவும்.
(28485)(16)

## நீர்வேலிசங்கத்தில் சம்பள அதிகரிப்பு நடைமுறையில்

அரியாலை, பெப்.18

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச சங்கம், அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட ஆயிரத்து 250 ரூபா சம்பள அதிகரிப்புக் கொடுப்பனவை நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது.

இந்தச் சம்பள அதிகரிப்பு கடந்த ஜனவரி மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கொடுப்பனவு வழங்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-8-17)

## அம்பாறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யடி வேம்பு தர்மசங்கரி மைதானத்தை வந்தடையும். அங்கு பிரதான நிகழ்வு இடம்பெறும்.

அம்பாறை மாவட்ட மக்கள் பெருமன்றம் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வு "விழவிழ எழுவோம், விடுதலை பெறுவோம்" என்ற தொனிப் பொருளில் இடம்பெறவுள்ளது.

நாளை தமிழ்ப் பிரதேசப் பாடசாலைகள், கடைகள், அலுவலகங்கள் என்பன பூட்டப்பட்டு, வாகனங்கள் சகிதம் சகல தமிழ் மக்களும் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. முன்னாள் தமிழ் எம்.பிக்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

(ஓ-4)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முகங்களுக்கும் முஸ்லிம் வேட்பாளர்களுக்கும் இடம்வழங்கப்படுவது தொடர்பாகப் பலவிதமான ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. கூட்டமைப்புக்குள் உள்ள நான்கு கட்சிகளும், தமிழீழ விடுதலைப் புலிகளும் மிகவும் வெளிப்படையாக இதுகுறித்துப் பேசியிருக்கின்றோம். இது தொடர்பான முடிவுகள், மிக விரைவில் எடுக்கப்படும்.

"வேட்பாளர் பட்டியலில் புதுமுகங்களும் முஸ்லிம் வேட்பாளர்களும் உள்ளடக்கப்படுவார்கள்.

"வேட்பாளர் பட்டியல்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, வேட்பு மனுக்கள் தாக்கல் செயயப்படும்போது இது தொடர்பான மேலதிகமான விவரங்களை நீங்கள் அறிவீர்கள்".

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வசித்த மக்கள் கடந்த தேர்தலில் வாக்களிப்பதற்குத் தடைகள் இருந்தன.

சென்றமுறை வன்னி மக்களின் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டது. இதுதொடர்பாக வன்னியில் இருந்தும் மட்டக்களப்பில் இருந்தும் பல மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அந்த மனுக்களின் அடிப்படையில் அந்த வாக்காளர்களின் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டமை சட்ட ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால், அந்த மக்களுக்கு வாக்களிக்கும் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

கடந்தவாரம் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து அரச கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் மக்கள் எவ்விதமாக வாக்களிக்கலாம் என்பது பற்றி ஆராய்ந்துள்ளோம். இது தொடர்பான எமது முயற்சி மேலும் தொடரும். அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் எமது மக்கள் முழுமையாக வாக்களிப்பதற்குச் சகல நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொள்வோம்.

எதிர்வரும் தேர்தலில் மக்களின் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுமானால் அதனை நாங்கள் இலங்கையிலும் சர்வதேச மட்டத்திலும் தேர்தலுக்கு முன்னர் வெளிக்கொணர்வோம்.

- என்றார் அவர்.

(ஓ-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மலைமகள் ராமநாதர்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மலைமகள் ராமநாதர் நேற்று (17.02.2004) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அமரர் கா. ராமநாதர் (முன்னாள் மேலதிக அரச அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி சுப்பிரமணியம் திலகவதி தம்பதிகளின் மகளும் நீலாம்பிகை, அமரர்களான சிவவாகீசர் விமலநாதன், திருநாவுக்கரசு ஆகியோரின் சகோதரியும் அருணசலம் சண்முகலிங்கம், உமாதேவி, கமலாதேவி, அமரர் நவமணிதேவி ஆகியோரின் மைத்துனியும் Dr.திவாகரன், உவர்னா ஆகியோரின் மாமியும் மகேஸ்வரியின் வளர்ப்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2004) புதன் கிழமை பி.ப.3.30. மணிக்கு கட்டுப்பிட்டி மயானத்தில் தகனக்கிரியை நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும.

*'ராமாவாசா'*
*K.K.S RD,*
*தெல்லிப்பழை.* (சி-33350)(37-16-17)

தகவல்
Dr.சி.திவாகரன்
(மருமகன்).

### தவச்செல்வம் இராஜேஸ்வரி

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் இல. 29, புது வீதி, அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்டவரான தவச்செல்வம் இராஜேஸ்வரி 17.02.2004 செவ்வாய்க்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி தவச்செல்வத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரநிருபசிங்கம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகமணி - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சாருமதி (மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு, யாழ்ப்பாணம்), குமுதினி (உப அஞ்சல் அதிபர், சரவணை), முகுந்தன் (வலயக்கல்வி அலுவலகம், தீவகம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான விஜயரத்தினம், ஞானேஸ்வரி மற்றும் திருமதி இராமநாதன், பாக்கிய சித்தாமணி, காலஞ்சென்றவர்களான சிவராசா, பரஞ்சோதி (ஓய்வுபெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளர்) ஆகியோரின் சகோதரியும் காலஞசென்ற யதகுலசிங்கம் மற்றும் மதியாபரணம், காலஞ்சென்ற கருணாநந்தசிவம் மற்றும் பரராஜசிங்கம், பராசக்தி, சரோஜினிதேவி, வசந்தா, மகேஸ்வரி காலஞசென்ற இராமநாதன் மற்றும நாகேஸ்வா, சிவபூரணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (18.02.2004) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று ,தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.29,புது வீதி,*
*அத்தியடி,யாழ்ப்பாணம்.*(28634)(36-11-16)

தகவல்:
த.முகுந்தன் (மகன்)

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி மலைமகள் இராமநாதர்

(பொதுச் செயலாளர், ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானம்-தெல்லிப்பழை)

திருமதி மலைமகள் இராமநாதன் அவர்கள் 17.02.2004 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்துள்ளார். சிந்தனைச் சிற்பியும் சங்கத்தின் போசகருமாகிய திரு. சு. சிவவாகீசர் அவர்களின் சகோதரியும் ஆவார். இவரின் இழப்பு எமது சங்கத்திற்கு பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல துர்க்காதேவியைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(28633)(37-11-16) தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.02.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.